# மணவெளி மேகங்கள்

கவிஞர் சண்முகராஜா
( மாவிலி மைந்தன் )



வானதி பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெளி மேகங்கள்

## (மாவிலி மைந்தன் கவிதைகள்)

கவிஞர் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா, M.A.

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை - 17.

✆ : 24342810 / 24310769
தபால்பெட்டி எண் : 6151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவெளி மேகங்கள்!
கவிஞர் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா ©
முதல் பதிப்பு : செப்டம்பர் 2019
பக்கங்கள் : 176

வானதி வெளியீடு

விலை : ரூ.150

| | |
|---|---|
| Title | Manaveli Megangal |
| Author (Compiler) | Kavingnar S. Shanmugarajah © |
| Language | Tamil |
| Subject | Poems |
| Edition | First Edition - September 2019 |
| Pages | 176 |
| Published by | Vanathi Pathippakam<br>23, Deenadayalu Street,<br>Thiyagaraya Nagar,<br>Chennai - 600 017.<br>Ph: 044-24342810 / 24310769<br>E-mail: vanathipathippakam@gmail.com |
| Price | ₹ 150 |

| | |
|---|---|
| Book Designed by | S. Kathiravan (9940045511) |
| Printed at | **Novena Offset Printing Co.,** Chennai - 5. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக்கை

அகவை ஏழில் எந்தையை இழந்து ஏதுமற்று நின்ற எனக்குத் தாயுமாகித் தந்தையுமாகி என்னைத் தாங்கிய என் அன்னைக்கும், தமது தோள்களிலே என்னை இருத்தி வைத்து இந்த உலகத்தைப் பார்க்க வைத்த என் உடன் பிறப்புகளுக்கும் இந்நூலைக் காணிக்கையாக்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கவிஞர் மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா அவர்களின் இந்தக் கவிதைத் தொகுதிக்கு வாழ்த்துரை எழுதக் கிடைத்த வாய்ப்பை எண்ணி மிகவே மகிழ்ச்சியடைகின்றேன். மகிழ்ச்சிக்குக் காரணம் எப்பொழுதோ வந்திருக்க வேண்டிய தொகுதி இப்பொழுதாவது வந்திருக்கின்றதே என்பதுதான். நான் மட்டுமல்ல, பலரும் இப்படி ஒரு தொகுதியை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். அந்த அளவுக்குக் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் மத்தியில் இவருக்கு இரசிகர்கள் உள்ளனர். கவிஞர் கழகத்தினர் தவிர பத்திரிகைகள், கவிதை உறவு போன்ற சஞ்சிகைகள், இணையத்தளம் போன்றவற்றின் வாயிலாகவும் இவருக்கு இரசிகர் கூட்டம் அதிகம்.

இத்தொகுதியில் மூன்று பகுதிகள் உள்ளன. முதலாவது பகுதி பல்சுவைக் கவிதைகளையும், இரண்டாவது பகுதி வெண்பாச் சரம் என்ற பகுதியையும், மூன்றாவது பகுதி கவியரங்கக் கவிதைகளையும், நான்காவது வாழ்த்துப்பா மாலையையும் கொண்டதாகப் பகுக்கப்பட்டுள்ளன.

மாவிலி மைந்தன் என்பது இவரது புனைபெயர். நான் மாவிலி மைந்தன் அவர்களின் ஒரு பெரிய இரசிகன். மரபுக் கவிதை படைப்பதில் இவர் ஒரு சிகரக் கவிஞர்.

கவிதை நயம் கூறுகின்றவர், சொற்சுவை, பொருட்சுவை என்னும் இரு சுவைகளைப்பற்றிப் பெரிதும் பேசுபவர் மாவிலி மைந்தன். அவரது கவிதைகளில் இவை சிறப்பாகவும், இயல்பாகவும் அமைந்திருப்பது அவருக்கேயுரிய தனித்துவம். மற்றுமொரு சிறப்பு, செய்யுள் வகையைக் கூறிப் பாடியிருப்பது. உதாரணமாக 'தாய் தந்த மொழி' என்ற பாடல் வியனிலைச் சிந்து என்று குறிப்பிட்டுள்ளதைச் சுட்டலாம். அது ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியத் தன்மையின் குறியீடு. வளரும் கவிஞர்களுக்கு கவிதை களின் வகை, துறைகளை அறிந்து அவற்றின் இயல்புகளை உற்று நோக்கவும், பற்றி ஆக்கவும் உதவும் ஏணிப்படியாகவுள்ளது.

கவிதைகள் செப்பமாகவுள்ளன. பொருள் வெளிப்பாடு நுட்பமாகவுள்ளது. உதாரணமாகப் பல கவிதைகளைக் கூறலா மெனினும் 'போராட்டம்' என்னும் எண்சீர் விருத்தத்தைச் சுட்டலாம்.

இலையுதிர்த்த மரக்கிளையின் இடுக்கில் காணும்
இளந்தளிரும், இருட்திரையைக் கிழித்து வானின்
தொலைவிருந்து தோன்றுகின்ற ஒளியின் கீற்றும்,
துளிநீராய் வீழுகின்ற முகிலும், கல்லின்
தலைதுளைத்து முளையூன்றும் வித்தும், வந்த
தடைமேவிப் பாய்கின்ற ஆறும், தீயின்
உலைவீழ்ந்து சுடர்கின்ற பொன்னும் வாழ்வை
உறுதியொடு போராடி வெல்லச் சொல்லும்!

வெண்பா இயற்றுவதென்பது கடினம். அது கடினமல்ல என்று உணர்த்துவது போன்று மிக இயல்பாக அசத்துகின்றார் கவிஞர். சொற்றொடர் வெண்பா (வெண்பாச் சரம்) என்ற பகுதியில் உள்ள வெண்பாக்கள் உச்சமானவை.

அச்சத்தால் ஆவதென்ன, அச்சமில்லை என்றெதற்கும்
அச்சப் படுவதற்கே நீயஞ்சு! – அச்சமுன்னைச்
சூழ்ந்துவரும் தீபோல் சுட்டெரிக்கும், தொல்லைகள்
வீழ்ந்துவிடும் அச்சம் விடில்!

என்று பாடுகையில் கவிஞரின் உறுதி யாவரையும் பற்றி விடுகின்றது. இவ்விதம் பல்சுவைப் பாக்களையும் பால்காய்ச்சிப் பருக்கும் கவிஞரின் பாவளம் கங்கை நதிப் பெருக்கைப்போல் வளம்பெற வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
**கவிநாயகர் வி. கந்தவனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கவிதை கவிஞனையும் கவிஞன் கவிதையையும் பொலிவுறச் செய்கிற போதுதான் மொழி மேம்படுகிறது. எனவேதான் நல்ல கவிதைகளும் நமது கவிஞர்களும் பெரிதும் வரவேற்கப்படுவதைப் பார்க்கிறோம். இலக்கிய வடிவங்களில் முதலிடம் பெற்றிருப்பவை கவிதைகளே. என் இனிய நண்பர் கவிஞர் சண்முகராஜா (மாவிலி மைந்தன்) அவர்கள் சிறந்த கவிதைகளைப் படைக்கிற சிறந்த கவிஞர் என்பதால் நமது சிந்தையில் செம்மாந்து அமர்ந்திருக்கிறார். இந்நூலிலுள்ள கவிதைகள் யாவும் அவருக்கு நிலைத்த புகழை நாளும் தரும்.

அவரது இந்த 'மனவெளி மேகங்கள்' வீணாக வானில் உலவும் வெற்று மேகங்களாக இல்லாமல் கருக்கொண்ட கார்மேகங்களாய் நீர் சுமந்து போகும் தன்மையும், நன்மையும் கொண்டவையாகத் திகழ்கின்றன. எடுத்துக்காட்ட எண்ணற்ற கவிதைகள் இருந் தாலும் சிறப்பாய்ச் சிலவற்றைச் சொல்லி மகிழ எண்ணுகிறேன்.

தமிழ் வாழ்ந்தால்தான் தமிழன் வாழ்வான் எனும் அவர், தமிழ் வாழ என்ன செய்யலாமென்ற வழியையும் கூறுகிறார்.

"பேசுவோம் தமிழை நாளும்
பேசவே தமிழும் வாழும்
பேசுந்தாய் மொழிவாழ்ந் தாலே
பெயருடன் நாமும் வாழ்வோம்"

என்ற கவிதை எளிமையிலும், வலிமையிலும் இன்றியமையாத வைர வரிகளோடு திகழ்கிறது. உலகெங்கிலும் தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்களின் பலரது நாவுகளில் தமிழில்லை என்பதுபோல் மிகப்பலரது நாவுகளில் நல்ல தமிழில்லை என்பதும் வேதனைக்குரியது. இக்கவலை எல்லோருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திலும் இருக்கிறபோது கவிஞர் சண்முகராஜா (மாவிலி மைந்தன்) அவர்களிடம் கவிதையாக வெளிப்பட்டிருக்கிறது.

மனிதர்களிடம் அதிகமாகக் கற்றுத் தெளிவதிலும் மேலாக மிருகங்களிடமிருந்து கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது என்ற கருத்தில் கவிஞர் சண்முகராஜா கவிதை படைத்திருப்பது ஏற்கத் தக்க செய்தி. இந்தக் கவிதை எனக்குப் பிடித்த கவிதைபோல் எல்லோருக்கும் பிடித்துப்போகும்.

"கூட்டில் வாழும் குருவிகளும்
குகையில் உறையும் விலங்குகளும்
தேடும் குடும்ப வாழ்க்கைதனைத்
தெரிந்து மாந்தர் திருந்திவிட்டால்
வீடும் விளக்காய் ஒளிதருமே
விரியும் மலராய் விளங்கிடுமே"

என்பது உண்மைதானே.

கொள்கைப் பிடிப்புள்ளோர் கோபுரமாய் உயர்ந்திருப்பர். அவர்களுக்கெல்லாம் காசு, பணம் சேர்ப்பதில் கவனம் இராது. புலியைப் போன்று அவர்கள் புல்லுண்ண மாட்டார்கள் எனும் வெண்பாவும் இத்தொகுப்பில் குறிப்பிடத்தக்கது.

"கொள்கையிலே பற்றை. குலையாத நெஞ்சுரத்தை.
தெள்ளியநேர் பாதையினைத் தேர்ந்தெடுத்தோர் - எள்ளல்
மலிந்த பொருள்தேடி மண்டியிடு வாரோ
புலியென்றும் தின்னுமோ புல்."

இன்னும் இப்படி ஏராளம் என எண்ணற்ற கவிதைகளால் பொலிகிறது இத்தொகுதி. வழக்கம்போல் பொங்கல், புத்தாண்டு, பண்டிகைக்காலக் கவிதைகள், பெருமைக்குரியோர்தம் போற்றி கள் எனவும் பக்கங்கள் தோறும் பாடல்கள் விரவிக் கிடக் கின்றன. மொத்தத்தில் சுவையும், செறிவுமாய் இக்கவிதைத் தொகுப்பு நூலில் பைந்தமிழ் விருந்து படைத்திருக்கும் பாவலர் திரு. சண்முகராஜா (மாவிலி மைந்தன்) அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

என்றும் அன்புடன்,

**கலைமாமணி ஏர்வாடி. எஸ். இராதாகிருஷ்ணன்**

**ஆசிரியர் - கவிதை உறவு, இலக்கிய மாத இதழ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபுக் கவிதைகளின் வித்தகம் மாவிலி மைந்தனின் புத்தகம்

## மதிப்புரை

கனடா நாட்டைச் சேர்ந்த கவிஞர் மாவிலி மைந்தன் எழுதிய மனவெளி மேகங்கள் என்ற கவிதை நூலை முழுதும் படித்தேன். நம் மனதில் பெய்யும் மேகங்களாகவே அந்தக் கவிதைகள் இருக்கின்றன. நீண்ட நாளைக்குப் பிறகு வெளிவந்த மரபுக் கவிதைகளாலான நூல் இது. ஆகவே மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

சந்தங்களெல்லாம் நன்றாக எழுதியிருக்கின்றார். புகழேந்திப் புலவரின் நளவெண்பாவைப் படித்தது போன்ற உணர்வு இவரது வெண்பாக்களைப் படிக்கும்போது எனக்கு ஏற்பட்டது.

வெளிநாடுகளில் தமிழை வாழ வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஈழத் தமிழர்கள்தாம். அந்தவகையில் ஈழத்தமிழரான இவர் கனடாவில் தமிழைக் காத்து வரும் தமிழர்களில் ஒருவர். கவிதை யாத்து வரும் கனடாக் கவிஞர்களில் இவர் தலையாயவர். ஈழத் தமிழர்களுக்கும் தமிழுக்கும் உறுதுணையாக இருக்கும் மேலை நாடுகளில் கனடா நம் மதிப்புக்குரிய நாடாக விளங்குகிறது. அந்த வகையில் கனடா அரசாங்கத்திற்கு முதலில் நமது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வோம்.

கவிதையைப் பற்றிப் பலரும் பல கருத்துக்களைச் சொல்லி யிருக்கின்றார்கள். கம்பனிலிருந்து கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை வரை கவிதையின் சிறப்புக் குறித்துப் பாடாதோர் இல்லை. அந்த வகையில் மாவிலி மைந்தனும் பாடுகிறார். என்ன பாடுகிறார். இதோ,

"உள்ளத்திற் காணும் உணர்ச்சிகள் - தேன்
ஊற்றெனப் பொங்கி வழிகையில் -அதை
அள்ளி யெடுத்தோர் வடிவிலே - கூடும்
ஆழ்ந்த பொருளினை யேற்றியே - ஓசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளி விழும்தமிழ்ச் சொற்களால் - நயம்
தோய்த்து வெளிப்பட வைத்திடிற் - காட்டு
வெள்ளம் கரைபுரண்(டு) ஓடல்போற் - புது
வீறுடன் தோன்றும் கவிதையே!"

உணர்ச்சி பொங்கி வழிகையில் எழுதும் கவிதையே காட்டு வெள்ளம்போல் கரைபுரண்டோடும் என்கிறார். கவிதையைப் பற்றி இவர் எழுதிய வரிகள் உணர்ச்சி பொங்கும் வரிகள் மட்டுமல்ல, எழிச்சி பொங்கும் வரிகள்!

"தலைநிமிர்ந்து தமிழரென வாழ்ந்தோம், பின்னே
தாழ்வுற்றுத் தலைதாழ்ந்து வீழ்ந்தோம். அந்த
நிலைமாறி மீண்டும்நாம் நிமிர்ந்தோம் ஓர்நாள்!
நீண்டநா எக்காலம் நிலைக்க வில்லை!
குலைத்தெறிந்த குரங்கின்கை மாலை யானோம்
கொடுந்துச்சா தனன்கையின் சேலை யானோம்"

என்று ஈழத்தின் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார். போரளிகள் இன்று தோற்றிருக்கலாம். ஆனால் போராட்டத்தின் நோக்கம் ஒரு நாளும் தோற்காது. அதற்கு உலக நாடுகள் பல வற்றின் வரலாறுகளே சான்று. ஆக இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் ஈழத் தமிழகம் அமையும் என்ற நம்பிக்கை நமக்கிருக்கிறது. அதை நாம் காணாவிட்டாலும் நம் சந்ததியினர் நிச்சயம் காண்பர்.

"தமிழனென்று சொல்கின்ற நிலையின் றில்லைத்
தலைநிமிர்ந்து நிற்கின்ற பெருமை யில்லை!
திமிர்கொண்டு பதவிக்கும் தலைமைக் கென்றும்
திரிகின்ற திருடர்தாம் நிறைந்து விட்டார்!"

என்று நம்மவர் நிலையை மனம் வருந்திச் சொல்கிறார். ஈழ நாட்டில் மட்டுமல்ல இந்தியத் தமிழ் நாட்டிலும் இதே நிலை தான். உண்மையான புரட்சித் தலைவர்கள் தோன்றினால்தான் இதற்கெல்லாம் விடிவு பிறக்கும்.

"காசுக்கும் கஞ்சிக் கென்றும்
கற்கிறோம் மொழிகள் வேறு,
தூசுபோல் தமிழை எண்ணித்
தூற்றுதல் முறையோ கூறு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவோம் தமிழை நாளும்
பேசவே தமிழும் வாழும்
பேசுந்தாய் மொழிவாழ்ந் தாலே
பெயருடன் நாமும் வாழ்வோம்!"

என்று ஒரு கவிதையில் குறிப்பிடுகிறார். ஒருமொழி வாழ்ந்தால் தான் அந்த மொழியைப் பேசும் இனம் வாழும். ஒரு மொழி எப்படி வாழும்? மக்களின் பேச்சு மொழியாகப், பாட மொழி யாகக், கல்வி மொழியாக இருந்தால்தான் அந்த மொழி வாழும். இல்லையென்றால் வீழும். ஆகவே பாட மொழியாகவும், கல்வி மொழியாகவும் தமிழ் நாட்டில் தமிழைக் கொண்டுவர வேண்டும் என்ற கருத்தை இதன் மூலம் நமக்கு உணர்த்துகிறார் கவிஞர்.

ஆனால் இங்கென்ன நிலை? தமிழை மட்டுமே கற்றுக் கொடுக்க வேண்டிய அரசின் ஆரம்பப் பள்ளிகளில், மாநக ராட்சிப் பள்ளிகளில் எல்.கே.ஜி, யு.கே.ஜி என்ற ஆங்கில வகுப்பு களைக் கொண்டு வருகிறார்கள் ஆட்சியாளர்கள். இப்படி யிருந்தால் பிள்ளைகளிடம் தமிழுணர்வு எப்படித் தலைதூக்கும்?

தமிழர்களைத் தத்தெடுத்து வாழ வைத்துக் கொண்டிருக்கின்ற கனடா நாட்டைப் பற்றி ஒரு கவிதையில் போற்றிப் பாடுகிறார். 150ஆவது கனடா தினம் கொண்டாடப்பட்டபோது இவர் எழுதிய கவிதை இது.

"துறந்துவந்தோம் பெற்றவளைத் துறப்பதற்கே மனமின்றித்
தொலைவு தூரம்
இறந்துவந்தோம் இன்முகத்தோடு எமையேற்றாய் அரவணைத்தாய்
இனிய தாயே!
திறந்துவைத்தாய் உன்கரத்தைத் துணையென்றே பற்றினோமெம்
துயரம் தீர்த்தாய்
பிறந்ததினம் காணுகின்றாய் பெருந்தாயே கனடாவே
போற்றி போற்றி!"

என்றும்,

"மனிதத்தின் உரிமைகளை மதித்துனது சாசனத்தில்
மலர வைத்தாய்!
தனித்துவமாய் அமைதியுடன் தவழ்கின்ற பூங்காவாய்த்
தரணி வென்றாய்!
இனிமைதரும் என்வீடே என்நாடே கனடாவே
இனிதே வாழ்க!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் கனடா நாட்டுக்கு வாழ்த்துப் பாடுகிறார். தமிழர்கள் நெஞ்சிலே கனடா நாடு தாய்நாடாக உயர்ந்து நிற்கிறது என்பதை இது காட்டுகிறது.

ஆற்றொழுக்காக இவர் எழுதும் வெண்பாக்கள் இருக்கின்றன என்பதற்குப் பல வெண்பாக்கள் சான்றாக இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக இரண்டை மட்டும் பார்க்கலாம்.

"சொந்தமாய்ப் புத்தியில்லை, சொற்கேட்கும் நெஞ்சமில்லை
எந்தவழி போவதெனும் எண்ணமில்லை - மந்தையொன்று
செல்லும் வழியினிலே செல்லுமே - எல்லாமும்
பொல்லா மனிதரது போக்கு."

இது யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ தமிழ் நாட்டுத் தமிழருக்கு மிகவும் பொருந்தும்.

"தாய்நாட்டைத் தாய்மொழியைத் தன்னினத்தைத் தான்மறந்து
நாய்போல் அடிமையுறல் நன்றாமோ - ஆய்ந்துணர்ந்து
ஆக்கந் தருஞ்செயல்கள் ஆற்றுவோர் வாழ்வினிலே
பூக்காமற் போகுமோ பூ!"

இது நம்நாட்டு ஆட்சியாளர்கள் நினைத்துப் பார்க்கவேண்டிய வெண்பா.

வெண்பா மட்டுமல்ல, கட்டளைக் கலித்துறையும் பிழை யில்லாமல் சிறப்பாக எழுதியிருக்கிறார்.

எதில் எதில் எல்லாம் போலியிருக்கிறது என்றொரு கவிதை. அதை நான் மிகவும் இரசித்தேன்.

உடையிலே போலி, உண்ணும்
உணவிலே போலி, மக்கள்
நடையிலே போலி, நாட்டு
நடப்பிலும் போலி, எந்தக்
கடையிலும் பொருட்கள் போலி,
காண்பது யாவும் போலி!
தடையேது மின்றி யெங்கும்
தழைப்பதே போலி யன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் போலி, உற்றார்
உறவினர் போலி, ஞானத்
துறவிகள் போலி, சூழ்ந்த
தொண்டரும் போலி, உண்மை
பிறக்குமென் றெண்ணிக் கோயில்
புகுந்தபோ தங்கே யுள்ள
இறைவனும் போலி யென்றார்
எங்குதான் நிசத்தைக் காண்பேன்?

*இப்படி அருமையான மரபுக் கவிதைகள் அடங்கிய புத்தகம் இது. அனைவரும் விரும்பக்கூடிய வித்தகம் இது. வாழ்க கவிஞர் மாவிலி மைந்தன்!*

*வாழ்த்துகளுடன்,*

**கவிஞர் முத்துலிங்கம்**

**முன்னாள் தமிழக அரசவைக் கவிஞர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கவிதை இலக்கியத்தில் மாவிலி மைந்தனுக்கு அமைந்திருந்த தேடலும் தாகமும் இக்கவிதைத் தொகுதியின் வெளிப்பாடாக அமைந்துள்ளன. கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வரும் முன்னரே தாயகத்தில் தொழிற்களப் பின்னணியில் அவர் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்த காலம் முதலாகத் தனது கவிதை ஆக்க முயற்சியிலும் கவிதை அரங்குகளிலும் தன் கவிதைப் பயணத்தை மேற்கொண்டு வந்தவர். இவர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்த பின்னர், இங்கு கிடைத்த கவிதைக் களங்களில் வெளிப்படுத்திய கவிதைகள் முதலாவது தொகுதியாக "வைகறை வானம்" என்ற தலைப்பில் 2012இல் வெளிவந்தன. அவ்வெளியீட்டு விழா அவை நிறைந்த மக்கள் மத்தியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் நூல் விமரிசனம் செய்தவர் என்ற வகையில் எனக்கும் பெருமையாக இருக்கிறது. மாவிலி மைந்தன் அவர்கள் அண்ணாமலை கனடா வளாகத்தில் முதுகலைமாணிப் பட்டப்படிப்பில் பெற்ற பண்டைய இலக்கிய அறிவும் இப்போது வெளிவரும் இக்கவிதைப் படைப்புக்கு மேலும் மெருகூட்டியிருப்பதையும் என்னால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

"கவிதைப் படைப்பென்பது வெறுமனே கவிஞனின் உள்ளக் களிப்புக்கான வெளிப்பாடல்ல. கவிஞனைச் சுற்றி நிகழும் சம்பவங்களால் அவனது மனவெளியில் உண்டாகும் உணர்ச்சிப் பிரவாகமே கவிதை. சமூக உணர்வுடன் வெளிப்படுகின்ற கவிதைகள் சமூகத்தைச் சென்றடைய வேண்டும்" என்ற குறிக்கோளுடன் அவர் எழுதி வரும் கவிதைகளில் அவரது தாயக உணர்வும், தமிழ்மொழிப் பற்றும் பெரிதும் வெளிப்பட்டுக் காணப்படுகின்றன. அவை சமூகத்தைச் சென்றடைவதற்குப் பல ஊடகங்கள் அவருக்குப் பெரிதும் துணைநிற்கின்றன. இந்நூலிலுள்ள கவிதைகள் பல்வேறு ஊடகங்கள் வாயிலாக வெளிவந்தவையாகும். அத்துடன் இவர் கனடாவிற் பங்குபற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்குகளிற் படிக்கப்பட்ட கவிதைகளும் இதில் இடம் பெறுகின்றன. மாவிலி மைந்தனின் நீண்ட வாழ்க்கைப் பயணத்தில் தடம்பதித்த சில பெரியோர்களுக்காக எழுதிய வாழ்த்துக் கவிதைகளும், இரங்கல் கவிதைகளும் நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் முன்னுரையில், "இக்கவிதைகள் இலக்கிய வாசகர் வட்டத்தில் ஒரு சிலரையாவது சென்றடைந்து மழைபொழிந்து அவர்களின் உள்ளத்தை நனைக்குமானால் அதுவே எனக்குப் பெருமகிழ்வு தருவதாக இருக்கும்" எனக் குறிப்பிடும் கவிஞரின் எதிர்பார்ப்பும் மனங்கொள்ளத்தக்கது.

இக்கவிதைத் தொகுப்பு புலம்பெயர் தமிழிலக்கியப் பரப்பில் வைத்து மதிப்பிடப்பட வேண்டியதாகும். புலம்பெயர் தமிழிலக்கியத்தின் புலப்பரப்பு, கனடா முதல் அவுஸ்திரேலியா வரையும் உள்ள பூகோள நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. தமிழர் புலம்பெயர்ந்து வாழும் அனைத்து நாடுகளிலும் வாழும் இலக்கியப் படைப்பாளிகளும், இலக்கிய ஆய்வாளர்களும் தம் கவிதை, சிறுகதை, குறுநாவல், நாவல், விமரிசனக் கட்டுரைகள் என வெளியிட்டுக்கொண்டே வருகிறார்கள். இருப்பினும் கனடாவிற் படைப்பாளிகளதும் படைப்பிலக்கியங்களினதும் எண்ணிக்கை அதிகமானது என்பது யதார்த்தமாகும். இப் பின்னணியில் 'மாவிலி மைந்தன்' இப்போது (2019) "மனவெளி மேகங்கள்" எனும் இரண்டாவது கவிதைத் தொகுப்பை வெளியிடுகின்றார். இவரது இரு கவிதைத் தொகுப்புக்களும் புலம்பெயர் இலக்கியப் பரப்புக்கு வளம் சேர்ப்பனவாகவே அமைகின்றன. "மனவெளி மேகங்கள்" என்ற இவரது கவிதைத் தொகுப்பில் மானுடம் பற்றிய பல்வேறு உணர்வுகள், ஆதங்கங்கள், சமூகப் பார்வைகள், பெண்விடுதலை, தாயகம் – தமிழினம் – தமிழ்மொழி – தமிழர் பண்பாடு என்பனவற்றின் மீதான அதீத அக்கறையும் பற்றுணர்வும் மேலோங்கிக் காணப்படுதல் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

கவித்துவம் கைவரப்பெற்ற மாவிலி மைந்தன் யாப்பு இலக் கணத்தைத் தக்க ஆசான்களிடம் முறையாகப் பயின்றவர். அத்துடன் கனடா கவிஞர் கழகத்தின் முன்னாள் தலைவராகவும், தாம் கற்றறிந்த யாப்பறி புலமையை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் பக்குவமும் உடைய ஆசானாகவும் செயற்படுபவர். தனது புலமைத் திறத்தால் அவர் பல்வேறு யாப்பு வடிவங்களைக் கையாண்டு கவிதை படைத்துள்ளார். இத்தொகுப்பிலுள்ள இக்கவிதைகள் அனைத்தும் மரபுக்கவிதைகள் என்பதால் இத்தொகுப்புக்குத் தனி மதிப்புமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு பகுதிகளாக அமைந்துள்ள இக்கவிதைத் தொகுப்பின் பகுதி 1 "பல்சுவைக் கவிதைகள்" என்ற தலைப்பில் அமைந்துள்ளது. அதில் மரபு பேணும் வகையாகக் கடவுள் வணக்கமாக கனடா முருகன் மீது பாடப்பட்ட கவிதை, பல்லவி, சரணம் என்ற இசைவாய்பாடுகளில் அமைந்துள்ளது. அதன் பல்லவி வருமாறு:

"கண்ணுக்குள் மணியானாய் கருத்துக்குள் ஒளியானாய்
கவலைக்கு மருந்தானாய் முருகா! - அருட்
காட்சிக்கு விருந்தானாய் குமரா!
கதிர்வேல் கனகவேல் கருணைவேல் போற்றி
கனடாவில் எழுந்தருளும் கந்தவேள் போற்றி..."

எனப் பல்லவி, சரணம் என அப்பாடல் நீள்கிறது. அருணகிரிநாதர் சந்தக்கவி பாடுவதில் ஒப்பற்றவர் எனினும் மாவிலி மைந்தனும் சிறந்த சந்தக்கவிதை பாடும் ஆற்றல் பெற்றுள்ளமையைப் பொங்கல் திருநாள் பற்றிய பாடல் சான்றுபடுத்துகின்றது:

"எங்கள்தைப் பொங்கல்நாள்
இனியதமிழ்ப் பண்டிகைநாள்
மங்காத மரபோடு
மங்கலமாய்ப் பொங்கும்நாள்"

'தைவரட்டும்' என்ற தலைப்பிற் கொச்சகக் கலிப்பா யாப்பிலே பாடியுள்ள பாடல் நம்பிக்கை ஒளிஊட்டுவதாக அமைகிறது:

"நாளொன்று விடிந்துவர நம்பிக்கை ஒளிவரட்டும்
தூளென்றே துயரமெலாம் துடைத்தெறியத் துணிவெழட்டும்
வீழுகின்ற நிலைவரினும் மீளுகின்ற பலம்வரட்டும்
நீளுகின்ற மகிழ்ச்சியினை நிலைக்கவைக்கத் தைவரட்டும்"

'எது கவிதை' என்ற தலைப்பில் 'சமநிலைச்சிந்து' யாப்பில் யாத்த பாடல் கவிதைப் பொருள் மரபும், பயன்பாடும் கூறுவதை,

"சித்தத்தி லுண்மை யொளிதரும் - நல்ல
சிந்தனை யோங்க வழிதரும்..."

என்ற கவிதை விளக்குகிறது. இலக்கியம் என்பது காலத்தின் பதிவாகவும் கவிஞனின் அனுபவ வெளிப்பாடாகவும் அமைவ தாகும். அவ்வகையிற் சமகால நிகழ்வுகள், ஈழத்தமிழரின் அவலங்கள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள் என்பனவற்றின் பதிவாகவும் இவரது பல கவிதைகள் அமைந்துள்ளன. மாவிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் தமிழினப் பற்றாளர் என்பது அவரது வாழ்வியற் செயற்பாடுகளில் மட்டுமன்றி, அவரது மூச்சிலும் பேச்சிலும் கவிதை ஊற்றிலும் தலைநிமிர்ந்து காட்சி அளிக்கிறது. அப்பின்னணியிலே, தமிழினத்தின் இன்றைய நிலைப்பாட்டை எண்ணிக் குமுறும் ஒரு பாடலை நோக்கலாம்:

"தமிழனென்று சொல்கின்ற நிலையின் றில்லைத்
தலைநிமிர்ந்து நிற்கின்ற பெருமை யில்லை!
திமிர்கொண்டு பதவிக்கும் தலைமைக் கென்றும்
திரிகின்ற திருடர்தாம் நிறைந்து விட்டார்...!"

எனத் தனது உணர்வுகளை ஆவேசத்துடன் பாடுதல் அவரது சமூக அக்கறையைக் குறிப்பதாகும்.

தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகள் அனைத்திலும் தமிழ்மொழியின் நிலைப்பாட்டை மாவிலி மைந்தன் நன்கறிந்தவர். தமிழர் தம் தாய்மொழியைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் அவர் எம்மோடு தோள்கொடுத்து உழைப்பவர். தமிழ்மொழியைத் தங்கள் பிள்ளைகளுக்குக் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டிய பொறுப்பு பெற்றோரின் தலையாய கடமை யாகிறது. ஆனால் அந்நிலை பரிதாபத்திற்கு உரியதாகிவிட்டது. தமிழரோடு தமிழர் தமிழில் உரையாடுதலே அவமானம் எனக் கருதுவோரும் நம்மிடையே வாழ்கிறார்கள். அவர்களைக் கருத் திற்கொண்டு, கண்டிப்பதாகவும் அவரது கவிதை அமைகிறது:

"அன்னைமொழி பயிலாத கல்வியென்ன கல்வி
அவள்மொழியைப் புரியாத கடவுளென்ன கடவுள்
அன்னைமொழி எமக்கொன்றும் அவமானம் அல்ல
அடையாளம் எனவறிவோம் அகிலத்தை வெல்ல"

மேலும், "காசுக்கும் கஞ்சிக் கென்றும் கற்கிறோம் மொழிகள் வேறு..." எனத் தொடங்கும் கவிதையும் கவிஞரின் உணர்வுக் கொந்தளிப்பைக் காட்டுகிறது. தமிழைப் புறக்கணித்து வாழும் எல்லோரது காதிலும் இப்பாடல்கள் ஒலிக்க வேண்டும்.

கவிஞரின் தமிழ்மொழிப்பற்றும் பித்தும் இப்பிறப்பில் மட்டுமல்ல மறுபிறப்பிலும் தமிழ்க் கருவூலமாகவுள்ள அனைத்து இலக்கியங்களையும் படித்திட ஆசைப்படுகிறது. இத்தகு ஆசை ஏற்படுதல் என்பது உண்மைத் தமிழ்க் காதலால் ஏற்படுவதாகும். அத்தகையதொரு பாடல் "மனவெளி மேகம்" என்ற தலைப்பில் கருக்கொண்டு வருமாறு பொழிகிறது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இறக்கின்ற போதெல்லாம்
பிறக்கின்ற வரம் கேட்பேன்
இனிய தமிழ்த் தாய்மடியிலே
பிறந்து தமிழ்க் கருவூலம்
திறந்துஒவ் வொன்றாய்மெய்
மறந்ததனில் மனந்தோயவே”

தமிழர் எந்நாட்டிற் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் அந்நாட்டிற்கு நன்றியும், நம்பிக்கையும் நாட்டுப்பற்றும் உடையோராக வாழ வேண்டும் என்ற நன்நோக்குடன் கனடாவை வாழ்த்தும் வகையிற் பாடிய,

“பல்லினங்கள் பலமொழிகள் பல்வேறு பண்பாட்டில்
பழகும் மக்கள்
எல்லோரும் ஒருகுடையில் ஒன்றாகி வாழுகின்ற
உணர்வு தந்தாய்...!”

எனத் தொடரும் பாடல்கள் மாவிலி மைந்தன் கனடாமீது கொண்டுள்ள பற்றுணர்வைக் குறிப்பனவாகும்.

“காதல் இன்றேல் கவிதை இல்லை”. மாவிலி மைந்தனும் அதற்கு விதிவிலக்கல்ல. காதல் பற்றி வள்ளுவர் வழிநின்று குறள்வெண்பாவில் அழகாகவும் சுவையாகவும் “காதல் அதிகாரம்” என்ற தலைப்பிற் பாடியுள்ளார். சங்க இலக்கியம் கூறும் கைக்கிளைக் காதலை மிக அழகாக உருவகமாகப் பின்வரும் பாடல் உணர்த்துவதைக் காண்க:

“உட்புகுந்து காதல் உறவுகொள்ளா உள்ளமொரு
முட்பொதிந்த காட்டு மரம்.”

மேலும், காதலியிடம் தென்றலைத் தூதனுப்பும் பாடல்களும், “ஆதலாற் காதல் செய்வீர்” என்ற தலைப்பில் அமைந்த பாடல் களும் படிப்போருக்குக் களிமகிழ்வூட்டுவனவாக உள்ளன.

தமிழர் எங்கு வாழ்ந்தாலும் தம் தாய்நாடு, தாய்மொழி, தம் உரிமைகள் என்பவற்றை உயிர் மூச்சாகவே கொள்ள வேண்டும். கவித்துவமும் மற்றும் ஆய்வுகளும் அத்திசை நோக்கியனவாகவே அமைதல் காலத்தின் நியதியாகிறது. ஈழத்தமிழரின் இன்றைய அவலங்கள், அரச பயங்கரவாதச் செயல்கள், தடைமுகாங்களில் தமிழினம் அனுபவிக்கும் அவலங்கள் எனத் தாயகச் சோகங் களும் இவர் கவிதைகளில் அழுத்தம் பெற்றுள்ளன. ஈழம் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகம் ஈறாகத் தமிழர் அனுபவிக்கும் அல்லல்களுக்கும் அவலங்களுக்கும் தீர்வு வந்தே தீரும் எனப் பாடும் கவிஞரின் உணர்வுத் துடிப்பின் வெளிப்பாடாக வரும்,

"படிப்படியாய் உரிமையெல்லாம் பறிகொடுத்து வீழ்வதோ
பண்டையநம் பெருமையெல்லாம் பகற்கனவாய்ப் போவதோ..."

எனத் தொடரும் பாடல் படித்துணர வேண்டியதாகும்.

கவிஞன் என்பவன் தான் வாழும் சமூகத்துடன் இணைந்து அதன் போக்கை நன்குணர்ந்தவனாக மட்டுமன்றி அச்சமூகத்தின் குறைகளைத் துணிவுடன் சுட்டிக்காட்டும் திராணியுடையவனாக இருக்க வேண்டும். சாதியப் பேய், தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பதுங்கியிருந்து தன் சுயரூபத்தைக் காட்டத் தவறவில்லை என்பதையும் இக்கவிதைத் தொகுப்பில் காணலாம். மேலும், பெண்ணியம் என்பது மேற்குலக நாடுகளிற் சமத்துவம் பேசும் செயற்பாடாகும். கனடாவில் ஆண் – பெண் சமத்துவம், கல்வி, தொழில் மற்றும் பல்வேறு விடயங்களிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமவாய்ப்பும் சம உரிமையும் வழங்கப்படுகின்றன. ஆனால் தமிழ்ப் பெண்கள் எங்கு வாழ்ந்தாலும் சமத்துவம் பெற்றுவிட்டார்களா? ஆண் வர்க்கம் பெண்களைச் சமத்துவ மாகவோ – மானிட தத்துவத்துடனோ நடத்துகிறார்களா? என்பதையும் இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் விளக்குவதை நோக்கலாம்:

பெண்கள் படுகின்ற வன்கொடு மைசொல்லிற்
பேச முடியாப் பெருங்கொடுமை
மண்ணுள் மனிதம் மறைந்த துவோமாதர்
மாதவப் பேறுதான் பெற்றனரோ?

பொதுவாகக் கவிதை, கற்பனை, பாடல்களிற் சொற்சுவை, பொருட்சுவை, இசை மெட்டுக்களுடன் அமைந்த சந்தச்சுவை, பல்வேறுபட்ட உணர்ச்சி வெளிப்பாடு என்பன பொருந்த அமையும்போதே கவிதையின் சிறப்பும், கவிஞனின் ஆளுமையும் அறியப்படுகின்றன. இவற்றை உணரும் வகையில் நயாகரா பற்றிய கவிதைகள் அமைந்துள்ளன. நயாகரா பற்றிப்பாடாத கனடாத் தமிழ்க்கவிஞர் எவருமிலர் என்றே கூறலாம். எழில் சிந்தும் நயாகரா என்ற தலைப்பிற் பாடப்பட்டுள்ள கவிதையில் இதுவரை எவருமே சிந்திக்காத கற்பனைச் சிறப்புப் புலப்படு வதைப் பின்வரும் கவிதையைக் கற்பனை ஞானத்துடன் படித்தால் புரிந்துகொள்ளலாம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல நடந்தவுன் பாதையிற் - காணும்
மேட்டை அமைத்தவர் யாரடி? - நீயும்
செல்லும் வழிபள்ள மாக்கியே - சிறை
தள்ள நினைத்தவர் யாரடி? - அந்தப்
புல்லிய ரைப்பொடி யாக்கவோ - சினம்
பொங்கிப் புலியெனப் பாய்கிறாய்! - வெறும்
கல்லும் மலையும் தடுக்குமோ - உந்தன்
கட்டற்ற வேகத்தைத் தாங்குமோ!

வெண்பாச் சரம் என்ற தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ள 89 வெண்பாக்களில் மாவிலி மைந்தனின் யாப்பறி புலமையும், எப்பொருள் பற்றியும் வெண்பாவிற் சொற்சுவையும் பொருட் சுவையும் அமையப் பாடுந் திறனும் தெற்றெனப் புலப்படுவதை அவதானிக்கலாம்.

கனடாத் தமிழ் இலக்கியப் படைப்பாளிகளில் மரபுவழிக் கவிதை படைத்தோர் வரிசையில் ஈழத்துப்பூராடனார் க.தா. செல்வராஜகோபால், கவிஞர் கந்தவனம், தீவகம் இராஜலிங்கம், முதலியோர் இடம்பெற்றுள்ளனர். அவ்வரிசையில் மாவிலி மைந்தனும் தன்னை அடையாளப் படுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும். இவர் தன் யாப்பறி புலமையைத் தக்கமுறையிற் பயன்படுத்தி செய்யுள் மரபுவழிக் கவிதைகள் படைப்பதில் தன்திறமையை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். வெண்பா மரபில் நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, இன்னிசைக் கலிவெண்பா, இன்னிசைப் பஃறொடைவெண்பா, குறள்வெண்பா எனப் பல்வேறு வடிவங்களில் கவிதை படைத்துள்ளார். கொச்சகக்கலிப்பா, வெண்கலிப்பா, கட்டளைக்கலிப்பா, தரவு கொச்சகக் கலிப்பா ஆகிய யாப்பு வடிவங்களிலும் பல கவிதை கள் ஆக்கம் பெற்றுள்ளன. அடுத்துப் பாவினங்களில் அறுசீர், எழு சீர், எண்சீர், பதின்நான்குசீர் ஆகிய சீர்களில் அமைந்த ஆசிரியவிருத்த யாப்பு வடிவங்களை நன்கு பயன்படுத்தியுள்ளார். அவற்றுடன் சந்தக்கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம் என்ற 'பா' வடிவங்களையும் அவர் கையாண்டுள்ளார். மேலும் கட்டளைக் கலித்துறை, குறள்வெண்செந்துறை, கும்மி, நொண்டிச்சிந்து, வியனிலைச்சிந்து, சமநிலைச் சிந்து, பல்லவி, சரணம் முதலான பல்வேறு இசைப் பாவடிவங்களையும் கையாண்டு, இக்கவிதைத் தொகுப்புக்கு அணி சேர்த்துள்ளார். இவ்வாறாக 25க்கும் மேற்பட்ட செய்யுள் யாப்பு வகைகளைக் கையாண்டு சிறந்த கவிதைகளைப் படைத்து, மரபுக்கவிதை வல்லோனாக மாவிலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். இக்கவிதைத் தொகுப்பு யாப்புக்கலை பயில்வோருக்கு வழிகாட்டி நூலாகப் பயன்படும் தகுதியுங் கொண்டு விளங்குகிறது.

இக்கவிதைத் தொகுப்பின் சிறப்புகளில் விதந்து கூறத்தக்க இன்னுமொரு விடயம் நம்மிடையே வாழ்ந்த – வாழும் பெரியார்கள், சான்றோர்கள் பற்றிய பதிவுகளாகும். எம் இனத்திற்காகப் பாடுபட்ட பெரியோர்களது பணிகள், அவர்களது வாழ்க்கை வரலாறுகள் பதிவாக வேண்டும். இப்பெரியார்கள் ஆற்றிய பணிகள் மறைந்து போகாமல் இருப்பதற்கு அவர்களை நினைவுகூர்ந்து பாடிய கவிதைகள் பதிவுகளாகின்றன.

கனடாத் தமிழரின் புலம்பெயர் இலக்கியப் பரப்பில் மாவிலி மைந்தனின் இரு கவிதை நூல்களும் சமகாலத் தமிழர் வாழ்வியல், அவர்களது இருப்பு, புலம்பெயர் நாட்டில் பல்லினப் பண்பாட்டுச் சூழலிலே தமிழர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தமிழினத்தின் எதிர்பார்ப்பு, ஆலயங்களில் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டும் என்ற விருப்பு, போலியாகவும் பகட்டாகவும் திரிவோரின் போலிச் செயற்பாடுகளைத் துணிச்சலுடன் சாடும் கவித்திறன், சிந்தித்துச் செயற்படாது மந்தைக் கூட்டம் போலுள்ள மாந்தரைச் சிந்திக்கப்பண்ணும் போக்கு, உடையிலே – நடையிலே போலி, பட்டங்கள் போலி எனப் போலிகளைச் சாடும் போக்கு, "மீண்டும் திரும்பி வரும் வண் தமிழன் வரலாறு" என்ற மனத்திட்பம் "எனக்கும் பேர் தமிழில் இல்லை இனிமாற்ற வயதும் இல்லை உனக்கொரு வாய்ப்பு வந்தால் உணர்வுடன் தமிழ்ப் பேர் சூட்டு" என்ற தமிழ் மீதான வேண்டுகோள், முதலான விடயங்கள் யாவும் கவிதை வடிவம் பெற்று, "மனவெளி மேகங்கள்" என்ற மகுடம் கொண்ட இக்கவிதை நூலுக்குப் பெருமை சேர்த்துள்ளன. மாவிலி மைந்தனின் இரு கவிதை நூல்களும் கனடாத் தமிழ் இலக்கியப் பரப்பிலே தனித்துவம் வாய்ந்தவை மட்டுமன்றி, கனடாத் தமிழ் இலக்கிய பாரம்பரியத்திலும் மாவிலி மைந்தனுக்குத் தனியான ஓரிடத்தை வழங்கியுள்ளன. தமிழ்மொழி நீடு வாழ, தமிழினம் மேன்மையுற மாவிலி மைந்தன் மேன்மேலும் கவிதைகள் பல படைக்க வாழ்த்துகிறேன்.

**15.07.2017** **பேராசிரியர் முனைவர் பாலசுந்தரம் இளையதம்பி**
**ரொறொன்ரோ** **தமிழ்த்துறைத் தலைவர்**
**அண்ணாமலை கனடா வளாகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் அவர்கள் ரொறொன்ரோ வருகை தந்திருந்தபோது அவருக்குக் கனடாக் கவிஞர் கழகம் அளித்த வரவேற்பின்போது அவர் வாழ்த்தி வழங்கிய வெண்பா.

# தமிழே வாழ்க!

கனடாத் தமிழ் கவிஞர் கழகத் தலைவர்
மாவிலி மைந்தன் சண்முகராஜா நீடூழி வாழ்க!

கனடா தமிழ்ச்சங்கம் காண்கவிஞர் நன்றாம்
மனத்தார் கழகம் மகிழ - உனதுழைப்பை
செம்மை வழங்கிச் சிறந்த காழ்ப்பணிசெய்
எம்மானே சண்முகம்நீ ஏறு!

சுடரும் கவிதேர்ந்த தொல்தமிழ் வாண
கடல்போல் உளம்கொய் கவியே - உடலுயிர்
நற்றமிழ் நற்கவிகள் நாட்டுவதே என்றென்றும்
பெற்றிநீ சண்முகப் பேறு!

மாவிலிநன் மைந்தா மலர்க்காவே, மேன்மேலே
பாவினில் தேர்ந்து பயன்கழகம் - கூவிஅழை
தேர்ந்தபணி ஆற்றிச் சிறந்தமனை மக்களுடன்
ஊர்போற்ற வாழ்க உவந்து!

13.08.2015 — அன்புடன்
ரொறொன்ரோ. — பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

கவிதை படைப்பதோ அல்லது கவிதை படிப்பதோ எனக்குள் பல மாற்றங்களை உண்டாக்கும் அனுபவத்தை ஏற்படுத்துகின்றது. அது எனக்கு உள்ளக் களிப்பை ஊற்றெடுக்கச் செய்யும் ஊட்டச் சத்தாக இருக்கின்றது. என் தனிமையைப் போக்கும் உற்ற நட்பாக என்னோடு கைகோக்கின்றது. என் தமிழை உயிர்ப்பிக்கும் உயிர்க் காற்றாக என் மூச்சுக்குள் இறங்கிவிடுகின்றது.

கவிதையால் வருகின்ற இத்தகைய அழகான அனுபவங்களைப் பெறும் தருணங்கள் எனக்கு இலகுவாகக் கிடைத்துவிடவில்லை. குடும்பம், தாதிகள் பயிற்சிக் கல்லூரிகளில் விரிவுரையாளராக நான் ஆற்றிக்கொண்டிருந்த கவிதை இலக்கியத்துக்குப் புறம்பான எனது தொழிற்துறைப் பணி, சமூகக் கடமைகள் எனப் பலவும் என் வாழ்நாளின் பெரும்பகுதியை வளைத்துக் கொள்ளக் கவிதை இலக்கியம் மேல் எனக்கிருந்த தேடலும், தாகமும் என்னையறி யாமலேயே என்னைவிட்டுப் பலகாலமாக விலகியே இருந்து விட்டன.

கனடாவுக்கான எனது புலப்பெயர்வினால் என்னைச் சுற்றியிருந்த தளைகளிற் பல ஓரளவு விலகிப்போக எனது நீண்ட நாளைய அவாவான கவிதை இன்பத்தில் திளைப்பதற்கான தருணங்களை நான் தேடிப்பெற்றுக்கொண்டேன். அதன் வெளிப்பாடகவே 2012 இல் வைகறை வானம் என்ற எனது முதல் கவிதை நூல் வெளிவந்தது. கவிதைப் படைப்பிலக்கியப் பயணத்தில் நான் தவழத் தொடங்கிய முதல் முயற்சிதான் அது.

வைகறை வானம் கவிதைத் தொகுப்பு நூலுக்குக் கிடைத்த ஆதரவும் வரவேற்பும் எனது எழுதுகோலுக்கு மையிட்டன. எனது கவியுள்ளத்துக்கு இதம் தந்தன. எனக்குக் கைலாகு கொடுத்து என்னை எழுந்து நடக்கவைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் கடந்த நிலையிலும் தமிழ் இலக்கியத்தின் மீதுள்ள காதலால் 2016இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கனடா வளாகத்தில் தமிழ் முதுகலைப் படிப்பை நான் மேற்கொண்டேன். முதுகலைப் படிப்பும் மூன்று ஆண்டுகளை முழுமையாக ஆக்கிரமித்து விட்டது. அதனால்தான் வைகறை வானம் வெளி வந்த ஆறு ஆண்டுகள் கடந்து எனது இரண்டாவது கவிதை நூலினை வெளியிடுவதற்குரிய காலம் பின்நோக்கி நகர்ந்துவிட்டது. எனினும் முதுகலைப் படிப்பினால் ஏற்பட்ட அறிவும் அனுபவமும் இந்தக் கவிதைத் தொகுப்பில் பிரதிபலித்திருப்பதாக நான் உணருகின்றேன்.

ஈழத்தில் பேரினவாத அடக்குமுறைத் தீயிலே வெந்து தெறித்துப் புலம் பெயர்ந்து விழுந்த எனது உள்ளத்துப் புண்ணுக்குத் தாய்மொழி உணர்வும், தாய் மண் பற்றும்தான் எப்போதும் மருந்து தடவிக்கொண்டிருக்கின்றன. ஆதலால் எனது கவிதைகள் பலவற்றிலும் இயல்பாகவே தாய்மண், தாய்மொழி ஆகியவற்றின் நிழல்கள் படிந்திருப்பதைக் காணலாம். எனது மன வெளியை அவ்வப்போது சூழ்ந்து கொண்டு கருவடைந்த உணர்ச்சி மேகங்கள் பெய்த கவிதை மழையே மனவெளி மேகங்கள் என்ற இந்தக் கவிதை விரிப்பாக வெளிவருகின்றது.

கவிதைப் படைப்பென்பது வெறுமனே கவிஞனின் உள்ளக் களிப்புக்கான வெளிப்பாடல்ல. கவிஞனைச் சுற்றி நிகழும் சம்பவங்களால் அவனது மனவெளியில் உண்டாகும் உணர்ச்சிப் பிரவாகமே கவிதை. சமூக உணர்வுடன் வெளிப்படுகின்ற கவிதைகள் சமூகத்தைச் சென்றடைய வேண்டும். அவை சமூகத்தைச் சென்றடைவதற்கு ஊடகங்கள் தற்காலத்திற் பெரிதும் துணை நிற்கின்றன.

அந்த வகையில் எனது கவிதைகள் சமூகத்துக்குச் சென்றடையக் காரணமாக இருந்த தமிழகத்தில் இருந்து வெளிவரும் இலக்கிய மாத இதழான கவிதை உறவு, கனடாவிலிருந்து வெளிவருகின்ற விளம்பரம், உதயன் ஆகிய வாரப் பத்திரிகைகள், தமிழர் தகவல் மாத இதழ், தமிழ்நாடு தில்லைத் தமிழ்ச்சங்க இணையத்தளம், கனடாத் தமிழ் ஆதர்ஸ் இணையத்தளம் ஆகிய ஊடகங்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். அந்த ஊடகங்களில் வெளிவந்த கவிதைகளோடு நான் பங்குபற்றிய கவியரங்கக் கவிதைகளும் இதில் அடங்கியுள்ளன.

எனக்கு யாப்பிலக்கணம் பயிற்றுவித்து என்னை மரபுக் கவிதைப் பாதைக்கு அழைத்து வந்தவரும் என் கவிதைகளைப் படித்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனுக்குடன் தொலைபேசியில் அழைத்துப் பாராட்டுக்களையும் விமர்சனங்களையும் வழங்கி எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துகொண்டிருந்தவருமான எனது பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய ஆசான் பண்டிதர் ம.செ. அலெக்சாந்தர் அவர்கள் இன்று எம்மிடையே இல்லாதது ஒரு மிகப்பெரிய சோகம். என் வாழ்வில் நிரப்பப்படாத வெற்றிடமாகவே உள்ள அவரது இழப்பைக் கனத்த இதயத்துடன் இங்கே நினைவுப் பதிவாக வைத்து ஆறுதல் அடைகின்றேன்.

எனது கவிதைப் பயணத்தின் மேலுமொரு திசைகாட்டியாக விளங்கிய எனது ஆசான் ஈழத்துப் பெருங்கவிஞர் கவிநாயகர் கந்தவனம் அவர்களையும் இத்தருணத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். தற்காலக் கவிஞர்களில் தமது கவிதை வளத்தால் என் உள்ளத்தை ஈர்த்த மாபெரும் கவிஞர் கந்தவனம் அவர்கள் இந்நூலுக்கு வாழ்த்துரை எழுதியிருப்பது எனக்குப் பெருமை தருகின்றது.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதி வழங்கிய பேராசிரியர் முனைவர் இ. பாலசுந்தரம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கனடா வளாகத் தமிழ்த் துறைப் பேராசிரியராக இருப்பவர். எனது முதுகலைப் பட்டப் படிப்பின்போது மொழி வரலாறு, இலக்கிய வரலாறு, சங்க இலக்கியம், காப்பிய இலக்கியம் ஆகிய பாடங்களில் அவரிடம் பெற்ற அறிவும் அனுபவமும் அளப்பரியது. அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், 1500 க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியவரும், தமிழகத்தின் முன்னாள் அரசவைக் கவிஞரும், முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினருமான மதிப்புக்குரிய கவிஞர் கலைமாமணி முத்துலிங்கம் அவர்கள் எனது நூலுக்கு மதிப்புரை வழங்கியிருப்பது எனக்கு மிக்க மகிழ்ச்சியையும் மிகப்பெரிய கவுரவத்தையும் தருகிறது. அத்துடன் எனது கவிதைகளைத் தொடர்ச்சியாகத் தனது இதழில் பதித்துப் பெருமைப்படுத்துகின்ற தமிழகத்திலிருந்து வெளியாகும் கவிதை உறவு மாத இதழின் ஆசிரியர் எனதினிய நண்பர் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் வழங்கியுள்ள வாழ்த்துரையும் இந்நூலுக்கு அணிசேர்க்கின்றது. இருவருக்கும் எனது இதயத்தில் ஊறிய நன்றியறிதலை இந்த இதழில் வடித்து வைக்கின்றேன். அத்துடன் வாழ்த்துப்பா வழங்கியிருந்த பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் ஐயா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தின் புகழ்வாய்ந்த வானதி பதிப்பகம் எனது நூலை அழகிய முறையில் பதிப்பித்து வெளியிடுவது எனக்கு மிக்க மன நிறைவையும் பெருமையையும் தருகிறது. வானதி பதிப்பக நிறுவனர் முனைவர் இராமநாதன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. இந்நூலுக்கான அட்டைப்படத்தை அழகாக வடிவமைத்து வழங்கிய திரு. ஹரிஷ் குகன் அவர்களுக்கும், இந்நூலை அழகிய முறையில் வடிவமைப்பு செய்து உதவிய சு. கதிரவன் (சென்னை) அவர்களுக்கும், மிக நேர்த்தியாக அச்சுப் பதிப்பு வழங்கிய தமிழ்நாடு 'கணபதி என்டர்பிரைசஸ்' நிறுவனத் தாருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைக் கனடாவில் வெளியிட்டு வைப்பதற்கு உறு துணையாக இருந்து என்னோடு என்றும் பயணித்துக்கொண்டிருக் கின்ற கனடாத் தமிழ்க் கவிஞர் கழக நண்பர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இயல்பாகவே குடும்பத்துடன் கழிக்க வேண்டிய நேரங்களில் பெரும் பகுதியை கவிதைக்கும் இலக்கியத்துக்கும் சமூகச் செயற்பாடுகளுக்கும் பங்குவைத்தபோது எவ்வித ஆதங்கமுமின்றி எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த எனது வாழ்க்கைத் துணைவி கமலாவுக்கும், நூல் வெளியீட்டுக்கு உறுதுணையாக இருந்த என்னுயிருக்கும் மேலான பிள்ளைகள், மருமக்கள் பேரப் பிள்ளைகள் எல்லோருக்கும் எனது இதயங் கனிந்த நன்றி.

உண்மையில் என் துணைவியின் இடைவிடாத தூண்டுதலே இந்நூலை வெளியிடுவதற்கு ஒரு காரணியாக இருந்தது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இந்நூலில் எனது கவிதைகளை நான்கு பகுதிகளாகத் தொகுத்து அளித்துள்ளேன். யாவும் மரபுக் கவிதைகளே. மேற்குறிப்பிட்ட ஊடகங்களில் பல்வேறு தலைப்புக்களில் வெளிவந்த கவிதைகள் பல்சுவைக் கவிதைகளாகப் பகுதி ஒன்றில் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தில்லைத் தமிழ்சங்கத்தால் நாளொரு வெண்பா என்ற தலைப்பின்கீழ்க் கொடுக்கப்பட்ட சொற்றொடர்களை வைத்து எழுதப்பட்டு அவர்களின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட வெண்பாக்களையும், அதே பாணியில் தமிழ் ஆதர்ஸ் இணையத்தளத்தின் ஆசிரியர் அகில் சாம்பசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் ஒவ்வொரு கிழமையும் கொடுக்கப்பட்ட சொற்றொடர்களை வைத்து எழுதப்பட்டுத் தமிழ் ஆதர்ஸ் இணையத் தளத்தில் வெளிவந்த வெண்பாக்களையும் உள்ளடக்கியது வெண்பாச் சரம் என்ற இரண்டாவது பகுதியாகும்.

கனடாவில் பல நிகழ்வுகளில் இடம்பெற்ற கவியரங்கங்களில் நான் எழுதி வாசித்த கவிதைகள் மூன்றாவது பகுதியில் கவியரங்கக் கவிதைகளாக வைக்கப்பட்டுள்ளன.

எனது வாழ்க்கைப் பயணத்தில் ஏதோ ஒரு பொழுதில் என் மனமென்னும் நிலத்தில் அழியாத சுவடுகளைப் பதித்து வைத்த ஆளுமைகளுள் சிலருக்காக எழுதிய வாழ்த்துக் கவிதைகளும் இரங்கல் கவிதைகளும் பாமாலையாக நான்காம் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

கவிதைகள் இயற்றினேன் அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிட்டேன் என்ற வெறும் மன நிறைவுக்காக இந்நூலை நான் வெளியிடவில்லை. எனது மனவெளி மேகங்கள் என்னும் இக்கவிதைத் தொகுப்பு இலக்கிய வாசகர் வட்டத்தில் ஒரு சிலரையாவது சென்றடைந்து மழைபொழிந்து அவர்களின் உள்ளத்தை நனைக்குமானால் அதுவே எனக்குப் பெருமகிழ்வு தருவதாக இருக்கும்.

வாசகர்களின் காய்தல் உவத்தல் அற்ற திறனாய்வு எனது எதிர்காலப் படைப்புக்களை மெருகூட்டும் கருவியாக அமையும் என்பதில் எனக்கு அசைவற்ற நம்பிக்கை இருக்கிறது. கவிதைகளைப் படியுங்கள். கருத்துக்களைக் கூறுங்கள். நன்றி.

எனது காலம் உள்ளவரை உங்களோடு,
**சி. சண்முகராஜா, எம்.ஏ.**
**(மாவிலி மைந்தன்) கனடா**
மின்னஞ்சல்: shan275@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே

## பகுதி 1 பல்சுவைக் கவிதைகள்


1. அகிலத்தில் அறமோங்க வேண்டும் ... 31
2. மறுபடியும் வரவேண்டும் ... 32
3. நம்பிக்கை ஒளி ... 34
4. வாழ்வின் வரம் ... 36
5. அன்புக் காற்றும் அடிபடும் சருகும் ... 37
6. அமிழ்தான தமிழ் ... 39
7. தை பிறக்கும் நேரம் ... 40
8. தாய் தந்த மொழி ... 41
9. இன்பம் பொங்கும் நாள் ... 43
10. அவமானமல்ல அடையாளம் ... 45
11. தை வரட்டும் ... 46
12. எழில் சிந்தும் நயகரா ... 47
13. புலரும் காலை மலரும் வாழ்வு ... 48
14. எது கவிதை ... 50
15. எழுகின்ற வான்கதிர் ... 51
16. தலை நிமிர்வோம் ... 53
17. உயிர்ப்பின் ஒலி ... 55
18. தத்தெடுத்த தாய் ... 57
19. உன்னுள் விழுந்த பொறி ... 58
20. குடும்பம் ... 59
21. காதலதிகாரம் ... 60
22. தென்றலே தூது போ ... 61
23. ஆதலால் காதல் செய்வீர் ... 62
24. போராட்டம் ... 63


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. தேடல் ... 64
26. மேடை நாடகம் ... 66
27. மனிதனிடம் கற்ற குணம் ... 68
28. ஆன்மிக அலங்காரம் ... 69
29. பெண்ணுலகம் ... 70
30. மேதினி மேம்பட ... 72
31. நிசத்தைக் காண்பதெங்கே? ... 74
32. சொல்லுக சொல்லை ... 75
33. என்றுதான் சுதந்திரம் ... 77
34. நாயின் வாழ்வு ... 79
35. எழுச்சி சொல்லும் முடிவுரை ... 80
36. சிதைந்த அழகு ... 81
37. நலவெண்பா ... 82
38. உன்னைப் படித்ததனால் என்னை வடித்தேன் ... 83
39. கவி மழை கொட்டும் முகில் ... 85
40. காலத்தை வென்ற கவி ... 86
41. முகவரி தந்தவன் ... 87
42. தமிழுக்குத் தலைமகன் ... 88
43. ஒல்காப் புகழ்த் தொல்காப்பியன் ... 90
44. எரிசாம்பல் கிழித்தெழும் பறவை ... 91
45. நிழல் நீங்குமோ ... 92
46. கறுத்த ஜீலை வெளுத்து வரும் ... 93
47. பொய்மையின் உண்மை ... 94
48. இருண்ட ஞாயிறு ... 96
49. மடிகிறது மனிதம் ... 97
50. தலைவன் ... 98


## பகுதி 2 வெண்பாச் சரம்


1. பூக்காமற் போகுமோ பூ! ... 100
2. நெஞ்சமே அஞ்சாதே நீ! ... 101
3. நெஞ்சிலே இட்ட நெருப்பு! ... 102



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கோவலர்வாய் வைத்த குழல்! ... 103
5. காவேரி வீடுவருங் காண்! ... 104
6. தென்றலே நீவந்து செப்பு ... 105
7. சொற்றொடர் வெண்பா ... 106
8. சொற்றொடர் வெண்பாக்கள் ... 114

## பகுதி 3 கவியரங்கக் கவிதைகள்

1. மனவெளி மேகங்கள் ... 121
2. கவிதைக் கதம்பம் ... 125
3. சித்திரையாள் வந்தாள் சிறப்பாக ... 129
4. வேரும் விழுதுகளும் ... 132
5. கனடாவில் தைப்பொங்கல் ... 136
6. சிந்தனையைத் திறக்கட்டும் சித்திரை ... 140
7. இழந்தவை மீட்க வாரீர் ... 143
8. மாவீரருடன் சில மணித்துளிகள் ... 148
9. தமிழர் பண்பாடு - நேற்று இன்று நாளை ... 151
10. ஈழத்திலிருந்து ஓர் இதயத்தின் குரல் ... 159

## பகுதி 4 பாமாலை

1. திரு பொலிந்து நலம் வாழ்க ... 162
2. வெளித்த வானத்து வெண்கதிர் ... 164
3. கவிராயர் இனிதே வாழ்க ... 165
4. நினைப்பிலே நீடுவாழ்வார் ... 167
5. நிறைவுற்றது நெஞ்சம்! ... 169
6. தமிழ் பெற்றெடுத்த தனிநாயகம் ... 171
7. காலத்தை வென்ற ஹாக்கிங்! ... 172
8. இதய தெய்வம்! ... 173
9. அலெக்சாந்தர் வாழ்வார் கவியாக! ... 174
10. உனக்கில்லை மரணம் ... 175

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 1:
# பல்சுவைக் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகிலத்தில் அறமோங்க வேண்டும்

(இசைப்பாடல்)

**பல்லவி**

கண்ணுக்குள் மணியானாய் கருத்துக்குள் ஒளியானாய்
கவலைக்கு மருந்தானாய் முருகா! - அருட்
காட்சிக்கு விருந்தானாய் குமரா!
கதிர்வேல் கனகவேல் கருணைவேல் போற்றி!
கனடாவில் எழுந்தாளும் கந்தவேள் போற்றி! (கதிர்வேல்)

**சரணம்**

களங்கண்ட வேங்கைகள் கரங்கொண்ட உரமாகக்
கனடாவில் குடிகொண்டாய் முருகா - எம்
கனவுக்குள் நனவானாய் குமரா!
கலைந்தாலும் கனவுகள் குலைந்தாலும் உறவுகள்
கடந்தேறும் வழிசெய்வாய் முருகா - நாம்
கரையேறும் படகாவாய் குமரா! (கதிர்வேல்)

இமயத்தின் முதலாகக் குமரிக்கோ(டு) ஈறாக
இருந்தமொழி பன்னிருகை எனவே - உயிர்
ஈராறு எழுத்தான தமிழே!
வல்லினமும் மெல்லினமும் இடையினமும் ஆறாறு
வடிவேலா உனதாறு முகமே! - தமிழ்
உயிராகி மெய்யான உருவே! (கதிர்வேல்)

குன்றாடும் குமரனே குறிஞ்சியின் தலைவனே
குறவஞ்சி உளம்வென்ற அழகே! - ஒன்றே
குலமென்றே பொருள்தந்த அறிவே!
அவலத்தின் இருள்நீங்கி அமைதியின் ஒளிவீசி
அகிலத்தில் அறமோங்க வேண்டும் - உன்
அருளாலே அறிவோங்க வேண்டும் (கதிர்வேல்)

– கனடா கந்தசுவாமி கோயில் நிதிசேர் நிகழ்ச்சிக்காக பைரவி நுண்கலைக் கூடத்தால் தயாரிக்கப்பட்ட பத்திப் பாடல் ஒலிப் பேழைக்காக எழுதப்பட்டு C. சுதர்சனின் இசையமைப்பில் ஜெயா அன்னநாதன், அன்னநாதன் பெர்னாண்டோ ஆகியோரால் பாடப்பட்டது. செப்டம்பர்-2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறுபடியும் வரவேண்டும்!

(கொச்சகக் கலிப்பா)

கருமுகில்கள் வான்மூடிக்
கதிரவனை மறைத்தாற்போற்
பெருநிலத்தில் வன்கொடுமை
பெருகியறம் அழிகையிலே
இருளகற்றி ஒளிபெருக்கி
இரட்சிக்கும் இறைமகனாய்த்
திருமறையில் மொழிந்தபடி
தோன்றியவர் இயேசுபிரான்!

சேற்றில்செந் தாமரையும்
சிப்பியிலே வெண்முத்தும்
ஏற்றமுறு திரவியங்கள்
ஏழ்மையிலே எழுவதுபோல்
நாற்றமிகு தொழுவத்தில்
நாயகனார் பிறப்பெடுத்தார்
போற்றுகின்ற நன்னெறிகள்
போதித்தே இரட்சித்தார்!

வாழ்வதனின் பாரத்தால்
வருந்தியுடல் சோர்ந்தவரை,
ஏழ்மையிலே நொந்தவரை
ஏற்றணைத்த தெய்வமகன்!
வீழ்வுற்றோர் எழுவதற்கும்
விடுதலையைப் பெறுவதற்கும்
தாழ்வுற்றோர் உயர்வதற்கும்
தஞ்சமென வந்தமகன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப்போற் பிறரையும்நீ
உளமார நேசித்தால்
பொன்னைப்போல் மின்னிடுவாய்
பூவுலகில் நிலைத்திடுவாய்
கன்னத்தில் அடிபட்டால்
காட்டுமறு கன்னமென்று
மண்ணுலகில் அன்பொன்றே
மார்க்கமெனக் காட்டியவர்!

அறவழியிற் செல்பவர்கள்
அன்புவழி வாழ்பவர்கள்
இறைவழியைச் சேர்வரென்று
இயம்பியவர் இயேசுபிரான்!
மறவழியில், மதவெறியில்
மானிடத்தை மாய்ப்பவர்கள்
பெறவிழையும் பேறுஎன்ன
பெருமகனே யாமறியோம்!

என்றையநாள் அவர்பிறப்பு
எனும்நினைப்பே இல்லாமல்
அன்றையநாள் மக்களவர்
அன்புவழி சென்றார்கள்
இன்றைக்கு அவர்பிறந்த
இனிதான நாளைமட்டும்
நன்றாகப் போற்றுகிறோம்
நன்நெறிகள் நாம்மறந்தோம்!

இறைவனையும் மனிதரையும்
எண்ணற்ற கூறாக்கும்
கறைபடிந்த மனங்கொண்ட
கயவர்களின் ஆதிக்கச்
சிறையடைந்து மனிதகுலம்
சிதையாமல் மீட்சிபெற
மறைமுதல்வா அவதரித்து
மறுபடியும் வரவேண்டும்!

**2014ஆம் ஆண்டு கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தினால் நடத்தப்பெற்ற நத்தார் விழாவில் வாசிக்கப்பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை ஒளி!

(பதினான்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

குன்றுதொறும் குடிகொண்ட குமரனாய்க் கனடியக்
கியுபெக்மா நிலத்தின் கண்ணே
குளிர்சோலை சூழ்ந்தநகர் மொன்றியல் தன்னிலே
கோயில்கொண் டெழுந்த அருளே!

தென்றல்போல் உடல்நீவித் திருமேனி ஒளிகாட்டித்
தேன்மாரி சொரிந்து விடுவாய்!
திக்கற்றோர் உனைத்தேடி வருகின்ற போதிலே
திசைகாட்டி போல வருவாய்!

கொன்றுவரும் கூற்றினையும் கோடிட்டு நிறுத்துவாய்
கொடும்பகையை வீழ்த்தி விடுவாய்
குறைதீர்க்கும் நம்பிக்கை ஒளியினைக் காட்டியே
கோலமயி லேறி வருவாய்!

வென்றுவரும் வேல்கண்டு வன்பகை நீங்கவுன்
விழிநோக்கத் தீமை யறுமே!
வெற்றிவடி வேலவா வீழ்ந்தோர்க்கு நம்பிக்கை
விதையாக வந்த குமரா!

செந்தமிழர் போற்றிடும் செவ்வேட் குமரனே
செங்காந்தட் பூவி னழகே!
செம்மாந்த வீராறு தமிழுயி ரெழுத்துக்கள்
திருக்கைக ளான வடிவே!

பைந்தாதின் சுவையான பதினெட்டு மெய்யுமுன்
பரிவினைக் காட்டும் விழியே!
பகைவெல்லும் ஆயுதம் எனுமெழுத் துனதுவேற்
படையாகி நின்ற தமிழே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிந்தைமகிழ் வள்ளியொடு உயிரிலே மெய்கலந்(து)
உயிர்மெய்யென் றான வுருவே!
சீர்பெற்ற தமிழினது திருவெனும் வடிவிலே
சிவனுக்கு வாய்த்த குருவே!

விந்தைசெயக் கேட்கிலேன் வினைநீக்க வேண்டிலேன்
விலங்குற்று வீழ்ந்த இனத்தை
விழிநோக்க வேண்டினேன் விலங்கினை ஒடித்துமே
விடுதலை காண அருளே!

**– 2018ஆம் ஆண்டு ஜூன் திங்கள் மொன்றியல் முருகன் கோயில் விழா மலருக்காக எழுதியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வின் வரம்!

(சந்தக் கலிவிருத்தம்)

விண்தோன்றிய வெண்தாரகை
விடிகாலையில் ஒளிர
மண்தோன்றினன் மறைமாமகன்
மரியாள்மடி தனிலே!
தண்ணாரொளித் திருமேனியன்
தரைதோன்றிய திருநாள்
கண்ணாரவே உலகெங்கணும்
களிகூர்ந்திடும் பெருநாள்!

தேன்பெய்தது நெஞ்சங்களில்
தேவன்மகன் வரவால்
வான்பெய்தவெம் பாலையென
வளங்கண்டது பூமி
கூன்கொண்டவர் நிமிர்ந்தார்பல
குருடர்விழி பெற்றார்
நான்கெல்லையும் ஒளிவீசின
நாதன்பிறப் பாலே!

வீழ்வுற்றவர், விதியேயென
விடிவற்றவ ரானோர்,
தாழ்வுற்றவர் தகையற்றவர்
தடுமாறியே நின்றோர்,
ஏழ்மைத்தளை பூண்டோரெலாம்
இறைதூதுவன் வரவால்
வாழ்வின்சுமை நீங்கிப்பெரும்
வரம்பெற்றனர் அம்மா!

**– விளம்பரம் வாரப் பத்திரிகை (கனடா),**
**2018 டிசம்பர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புக் காற்றும் அடிபடும் சருகும்!

(அறுசீர் விருத்தம்)



தன்னலம் அற்று வாழ்ந்து
    தளர்வின்றி உழைத்து, மக்கள்
முன்னிலை அடையக் காலம்
    முழுமையும் அர்ப்ப ணித்து,
இன்னரும் உடலைத் தீக்கு
    இடுவிற காக்கி னாலும்
அன்னையின் அன்புக் காற்றில்
    அடிபடும் சருகே தந்தை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையாய்ப் பெற்ற பிள்ளை
பேர்புகழ் பெற்று ஓங்க
இருகையில் சுமந்து, வந்த
இன்னலும் சுமந்து, நாளும்
வருந்திமெய் சுமந்தான் தந்தை
வாழ்ந்தநாள் முழுதும், கர்ப்பக்
கருச்சுமை திங்கள் பத்தே
கடவுளாய் ஆனாள் அன்னை!

அறிவினை ஊட்டி, வல்ல
ஆளுமை கூட்டி, நல்ல
நெறியினை நாட்டி, வாழ்வில்
நிலைத்திட வழியைக் காட்டிக்
குறியொடு வாழ்ந்தே தந்தை
கொடுஞ்சுமை தாங்கி னாலும்
செறிமுலை தந்தே மைந்தர்
சிந்தையில் நிறைந்தாள் அன்னை!

எத்தனை சுமையும் தந்தை
ஏற்றியே சுமந்திட் டாலும்
அத்தனை சுமையும் இங்கே
அனைவரும் சுமக்க லாமே!
பத்துதான் திங்கள் கர்ப்பம்
பாலூட்டல் ஓராண் டேனும்
வித்தையாய் யார்செய் வார்கள்
வேறந்தத் தாயை யன்றி! !

– கவிதை உறவு மாத இதழ் (தமிழகம்),
அக்டோபர் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமிழ்தான தமிழ்!

(இசைப் பாடல்)

**பல்லவி**

போற்றிப் பாடுவோம் தமிழ்தமிழ் தமிழென
சாற்றும் காதினில் அமிழ்தமிழ்(து) அமிழ்தென

ஊட்டும் சுவைபல கூட்டும் வழியினில்
பாட்டில் இசையினை நாட்டும் மொழியினில்! (போற்றிப்...

**சரணம்**

யாதுமெம் ஊரென ஆர்த்தசெந் தமிழே!
யாவருங் கேளிரென் றேற்றதெம் குலமே!
காதலும் வீரமும் கொண்டநல் மரபே!
ஓதிடும் மறையெங்கள் உயர்திருக் குறளே! (போற்றிப்...

வேங்கடம் குமரியாய் விரிந்ததெம் நிலமே
விரிகடற் பரப்பையும் வென்றதெம் குலமே!
வீங்கொலி ஞாலத்தில் முதல்மொழி தமிழே
வியனுறு இலக்கிய வளமதன் வளமே!
(போற்றிப்...

காரிருள் கலைந்திட மலர்ந்திடும் காலை
கண்களில் விரிந்திடும் கனிமலர்ச் சோலை!
வீறுகொண் டுணர்வுடன் விழித்தெழு நீயே!
விடியலைத் தரணியில் விதைத்திடு வாயே! (போற்றிப்..

தேனமு தானசெம் மொழிதமிழ் மொழியே
தேசங்கள் பரவியே சிறந்திடும் மொழியே
வானமும் வையமும் வாழ்கின்ற வரையே
வாழவைப் போம்தமிழ் வளம்பெறும் வகையே!
(போற்றிப்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தை பிறக்கும் நேரம்!

(அறுசீர் விருத்தம்)

தைமகள் பிறந்து வரும்நேரம்
தமிழர் மரபு பெறும்வேகம்
கையசைத் தாடும் தோரணமும்
கரும்பின் வளைவின் கலையழகும்
மைவிழி மங்கையர் கோலங்களும்
மழலைக் குரலின் கீதங்களும்
வைகறைப் பொழுதை வரவேற்கும்
வருகிற நாளை வளமாக்கும்!

செந்நெல் லரிசியும் சர்க்கரையும்
சேர்ந்தே தீம்பால் பொங்கிவர
இந்நிலத் தினிமை பொங்கிவரும்
இயற்கையும் அங்கே இளமைபெறும்!
முந்தையர் மரபும் தொடர்ந்துவரும்
முத்தமிழ்க் கலைகள் வளர்ந்துவரும்!
செந்தமிழ் வாழும் நிலமெங்கும்
செழுமை பொங்கிச் சிறந்துவரும்!

புயல்பூ கம்பம் வரவேண்டாம்
போரும் அவலம் தரவேண்டாம்!
இயல்பாம் நிலையில் இடர்வேண்டாம்!
இயற்கை அனர்த்தம் இனிவேண்டாம்!
செயலே மூச்சாய் இருக்கட்டும்
சேரும் கரங்கள் வலுக்கட்டும்!
துயரம் துன்பம் பறக்கட்டும்
துணையாய்த் தைமகள் பிறக்கட்டும்!

– கவிதை உறவு, ஜனவரி 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் தந்த மொழி

(வியனிலைச் சிந்து)



அன்னைதன் கருவறையில் என்னைச் சுமக்கஅவள்
அகத்தினொலி கேட்டிருந்தேன் - அதன்
பின்னுமவள் மடிமீது தவழ்ந்துவிளை யாடஅவள்
பேசும்மொழி கேட்டிருந்தேன்!

பாலூட்டும் போதெலாம் பைந்தமிழின் சாற்றையும்
பருகிடத் தாய்தந்தனள் - அவள்
தாலாட்டுப் பாட்டிலும் தமிழிலே இசைகூட்டித்
தாய்மொழி யெனத்தந்தனள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியிற் கல்விக்கும் பருவத்தின் அன்புக்கும்
பக்திக்கும் மொழியானது - தமிழ்
உள்ளத்திற் பாய்கின்ற உணர்ச்சிகள் கவியாக
உருவாக வழியானது!

கோயிலில் இருப்பதோ கல்லல்லத் தொழுகின்ற
கடவுளா மென்பதறிவோம் - நம்
வாயிலே பிறப்பதோ சொல்லல்லத் தாய்தந்த
வேதமா மென்பதுணர்வோம்!

வளம்பெற்ற மொழிவந்த வாரிசுகள் நாமென்ற
வரம்பெற்ற குடிகளானோம் - பகைக்
களம்வென்று கடலோடு கனல்தின்ற ஊழ்வென்று
காற்றாடும் கொடிகளானோம்!

வாயின்மொழி மட்டுமா, வாழும்மொழி யானதமிழ்
வாழ்க்கையின் கூறானது - பெற்ற
தாயினுக் கிணையாகத் தாயின்மொழி போற்றுதல்
தனையற்குக் கடனானது!

காலங்கள் யாவுமென் வாழ்வொடு ஒன்றியே
களிப்பூட்டும் அன்னைமொழியே! - இந்த
ஞாலத்தில் மனிதகுலம் வாழ்கின்ற நாள்வரையும்
நனிதோங்கி வாழ்கதமிழே!!

– பெப்ரவரி 21, 2018 தாய்மொழித் தினத்தையொட்டி
தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளத்தில் வெளியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பம் பொங்கும் நாள்!

(சந்தக் கவிதை)



எங்கள்தைப் பொங்கல்நாள்!
இனியதமிழ்ப் பண்டிகைநாள்!
மங்காத மரபோடு
மங்கலமாய்ப் பொங்கும்நாள்!

உள்ளமெலாம் உவகையிலே
ஊற்றெடுத்துப் பொங்கும்நாள்!
வெள்ளமெனப் பேரின்பம்
வீடெல்லாம் பொங்கும்நாள்!

பெற்றோர்கள் வாழ்த்தினிலே
பிள்ளைமனம் பொங்கும்நாள்!
உற்றார்கள் ஒன்றாகி
உறவினிலே பொங்கும்நாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் கூடிவந்து
நட்பினிலே பொங்கும்நாள்!
விண்படரும் கதிரவனின்
விடியலிலே பொங்கும்நாள்!

கழனியிலே கதிரறுத்துக்
களிப்புடனே பொங்கும்நாள்!
இளநீரும் கரும்போடும்
இன்சுவையாய்ப் பொங்கும்நாள்!

வாசலிலே மாக்கோல
வடிவமைத்துப் பொங்கும்நாள்!
வாசப்பூ மங்கையர்கள்
வனப்பினிலே பொங்கும்நாள்!

நல்வாழ்வு சேருமெனும்
நம்பிக்கை பொங்கும்நாள்!
இல்லாமை யெனும்கொடிய
இருள்நீங்கப் பொங்கும்நாள்!

தைமகளை நாம்வாழ்த்தித்
தலைவணங்கிப் பொங்கும்நாள்!
தைமகளே வாழ்த்துகின்ற
தமிழினத்தின் பொங்கல்நாள்!

– தமிழ்ப் பார்வை, புதிய காலாண்டு இதழ் (கனடா),
ஜனவரி 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவமானமல்ல அடையாளம்!

(குறள்வெண் செந்துறை)

கருவறையில் அதிர்வாகிக் கடந்தெமது உயிரில்
கலந்தங்கு நிறைந்ததுதான் அன்னையவள் மொழியே!
உருவடைந்து உலகடைந்து உலவுகின்ற பொழுதும்
உயிர்க்காற்றாய் உள்நுழைந்தே உறைந்ததுதாய் மொழியே!

தாய்மடியில் தவழ்ந்திருக்கத் தாவியவள் தோளில்
தலைசாய்த்துத் தூங்கிவிடத் தாலாட்டும் மொழியே!
வாய்மொழியாய்த் தொடர்பாடும் வழிமட்டும் அல்ல
வாழ்வெனவே வரித்தெம்முள் வளர்ந்ததுதாய் மொழியே!

சிந்தனைக்கு ஊற்றாகிச் சிறக்கஅறி வூட்டும்
செம்மாந்த பண்பாட்டில் செல்லவழி காட்டும்
முந்தையரின் நாகரிக முதிர்ச்சியினை நாட்டும்
முழுமைகொள் இனமொன்றின் முகவரிதாய் மொழியே!

அன்னைமொழி பயிலாத கல்வியென்ன கல்வி
அவள்மொழியைப் புரியாத கடவுளென்ன கடவுள்
அன்னைமொழி எமக்கொன்றும் அவமானம் அல்ல
அடையாளம் எனவறிவோம் அகிலத்தை வெல்ல!

நோயினிலும் முதுமையிலும் நொடிந்துவிட்ட போதும்
நொந்துமனம் நைந்துபலம் நொருங்கிவிட்ட போதும்
பாயினிலும் பாடையிலும் படுத்துவிட்ட போதும்
பைந்தமிழாம் தாயையுளம் பற்றிநிற்க வேண்டும்!

– கனடா, தொல்காப்பியமன்ற மாதாந்தக் கருத்தரங்கில்
மாணவர்கள் வாசிப்பதற்காக எழுதப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை வரட்டும்!

(கொச்சகக் கலிப்பா)

காலையிளம் குளிர்காற்றும் கடல்மலையும் நமக்கெனவே!
சோலைவனம் கழனிநிலம் சுனைஅருவி நமக்கெனவே!
மாலையிலே வானெழுதும் வனப்பெல்லாம் நமக்கெனவே!
கோலநிலா இளந்தென்றல் குவலயமும் நமக்கெனவே!

உதிக்கின்ற கதிரவனும் உயர்வானும் நமக்கெனவே!
கொதிக்கின்ற கொடும்பகலும் குளிரிரவும் நமக்கெனவே!
நதிநீரும் செடிகொடியும் நறுமலரும் நமக்கெனவே!
புதிதாகப் பிறந்துவரும் புத்தாண்டும் நமக்கெனவே!

பொய்யல்ல நமதுஉடல் மெய்யென்று தமிழுரைக்கும்!
கையிரண்டு கிடைத்ததெலாம் கடமைசெய வெனவுணர்த்தும்!
செய்கின்ற செயலொன்றே சிலையாக எமைநிறுத்தும்!
தையின்று பிறந்தாலே தமிழர்க்கு வழிபிறக்கும்!

நீர்சுமக்கும் கருமுகிலே நிறங்காட்டும் வில்படைக்கும்
ஏர்சுமக்கும் உழவன்கை உலகுக்கே உணவளிக்கும்
தேர்சுமக்கும் உருளைகளே தெருவலத்துக்(கு) அதையிழுக்கும்
ஊர்சுமக்கும் உளத்தினுக்கே உயர்வுதனைத் தைகொடுக்கும்!

நாளொன்று விடிந்துவர நம்பிக்கை ஒளிவரட்டும்!
தூளென்றே துயரமெலாம் துடைத்தெறியத் துணிவெழட்டும்!
வீழுகின்ற நிலைவரினும் மீளுகின்ற பலம்வரட்டும்!
நீளுகின்ற மகிழ்ச்சியினை நிலைக்கவைக்கத் தைவரட்டும்!

**– 2018ஆம் ஆண்டு கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் பொங்கல் நாள் நிகழ்ச்சியில் வாசிக்கப்பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழில் சிந்தும் நயகரா

(சமனிலைச் சிந்து)

தித்திக்கும் தேனமு(து) உண்ணவே - அன்று
 தேவர் கடைந்தபா லாழியே - உன்னை
இத்திக்கில் யார்கொண்டு வைத்தனர் - காட்சி
 இன்பத்தை இங்கு விதைத்தனர்! - நீரில்
எத்தனை விந்தைகள் செய்கிறாய் - நிதம்
 இத்தனை வெண்துகில் நெய்கிறாய்! - உன்
வித்தையை எம்மிடம் காட்டவோ - பெரும்
 வெண்திரை போட்டு மறைக்கிறாய்!

மெல்ல நடந்தவுன் பாதையிற் - காணும்
 மேட்டை யமைத்தவர் யாரடி? - நீயும்
செல்லும் வழிபள்ள மாக்கியே - சிறை
 தள்ள நினைத்தவர் யாரடி? - அந்தப்
புல்லிய ரைப்பொடி யாக்கவோ - சினம்
 பொங்கிப் புலியெனப் பாய்கிறாய்! - வெறும்
கல்லும் மலையும் தடுக்குமோ - உந்தன்
 கட்டற்ற வேகத்தைத் தாங்குமோ!

வெஞ்சினத் தோடுநீ பாயினும் - குளிர்
 வெண்நிறத் தில்வனப் பூட்டுவாய் - பலர்
நெஞ்சையும் கொள்ளையிட்(டு) அள்ளுமோர் - நீண்ட
 நீர்த்திரை போட்டழ கூட்டுவாய்! - என்றும்
அஞ்சி மனம்துஞ்ச லாகுமோ - செயல்
 ஆற்ற விழைந்திட்ட வேளையில் - எனும்
செஞ்சொலை நெஞ்சிலே ஏற்றினாய்- எழில்
 சிந்தும் நயகரா வீழ்ச்சியே!

**- கவிதை உறவு 44ஆவது ஆண்டு மலர்(2016)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலரும் காலை மலரும் வாழ்வு!

(எண்சீர் விருத்தம்)



விண்ணுடைத்துக் கொட்டிவைத்துத் தமிழர் நெஞ்சை
வேதனையில் மிதக்கவைத்த மழையின் வெள்ளம்
கண்ணுடைத்துப் பெருக்கியதே கண்ணீர் வெள்ளம்!
கரைகடந்தோம், கடந்ததுவே துயர ஆண்டும்!
திண்ணமொடு நம்பிக்கை ஒளியை யேற்றித்
திருமகளாம் தைமகளே திசைகள் காட்ட
வண்ணமொடு வனப்போடு வளங்கள் பொங்க
வருகவெனப் புத்தாண்டை வாழ்த்து வோமே!

இன்பத்தில் இணைவதிலோர் இனிமை யில்லை
இருப்போர்க்கு ஈவதிலோர் பெருமை யில்லை
துன்பத்தால் துடிப்போரின் துயரங் கண்டே
துடைப்பதற்கு நீளுகின்ற கரங்கள் கண்டோம்
அன்பொன்றே அகிலத்தை ஆளு மென்ற
அருமறையை ஆழமுறப் பதித்து வைத்துச்
சென்றுவிட்ட ஆண்டுக்கு வாழ்த்துக் கூறிச்
சீர்பெறவே தைமகளைச் சிந்தை வைப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லொத்த மனங்களையும் கனிய வைத்துக்
கயவர்தம் கண்களையும் கசிய வைத்து
இல்லாமற் போனதென்ற மனித நேயம்
இறக்காதே என்றென்றும் இருக்கு மென்றே
சொல்லாமற் சொல்லிவைத்துச் சென்ற ஆண்டைச்
செல்கவென விடைகூறிச் சிறந்த வாழ்வு
நல்கவெனத் தைமகளை நாம்கை பற்றி
நடந்திடுவோம் நாளையநாள் நமக்கே என்றே!

மாக்களென வாழ்வதல்ல மனிதக் கோலம்
மனம்போகும் போக்கிலல்ல மகிழ்ச்சிக் காலம்
பூக்களினால் பெய்யதல்லப் போகும் பாதை
போராடி வென்றாற்தான் புலரும் காலை!
தீக்குளித்த தங்கந்தான் ஒளியை வீசும்
துடைப்பத்தா லடிபட்டே தூய்மை சேரும்
மாக்கோல அழகோடு மலர்வாள் தையாள்
மனவுறுதி யோடுழைப்போம் மகிழ்வோம் நன்றே!

– 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழகத்தில்
வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டதைத்
தொடர்ந்து வந்த புத்தாண்டையொட்டி எழுதியது.
கவிதை உறவு, ஜனவரி 2016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எது கவிதை?
(சமனிலைச் சிந்து)

உள்ளத்திற் காணும் உணர்ச்சிகள் - தேன்
ஊற்னெப் பொங்கி வழிகையில் -அதை
அள்ளி யெடுத்தோர் வடிவிலே - கூடும்
ஆழ்ந்த பொருளினை யேற்றியே - ஓசை
துள்ளி விழும்தமிழ்ச் சொற்களால் - நயம்
தோய்த்து வெளிப்பட வைத்திடிற் - காட்டு
வெள்ளம் கரைபுரண்(டு) ஓடல்போற் - புது
வீறுடன் தோன்றும் கவிதையே!

சித்தத்தி லுண்மை யொளிதரும் - நல்ல
சிந்தனை யோங்க வழிதரும் - தெய்வ
பக்தி நிலையை வளர்த்திடும் - மாந்தர்
பண்பொ டொழுகப் பயிற்றிடும் - வீர
வித்தினை ஊன்றி விதைத்திடும் - தோற்று
வீழில் எழுந்திட வைத்திடும் - இன்னும்
எத்தனை விந்தைகள் உள்ளதோ - செய்யும்
அத்தனை யும்நற் கவிதையே!

ஆண்டா னடிமை நிலையினைப் - பெண்
ஆணென்ற பேத விதிகளைக் - கால்
பூண்ட அடிமை விலங்கினைக் - கையிற்
போட்ட பழமைத் தளைகளை - வழி
தாண்ட முடியாத் தடைகளைக் - குலத்
தாழ்வினைப் போற்றும் கொடுமையை - எலாம்
கூண்டோ(டு) உடைத்திடும் வல்லமை - என்றும்
கொள்ளும் புரட்சிக் கவிதையே!

- கவிதை உறவு, ஏப்ரல் 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுகின்ற வான்கதிர்!

(கொச்சகக் கலிப்பா)



உழுதுண்டு வாழ்வதற்(கு)
ஒப்பில்லை மற்றவற்றில்
பழுதுண்டு எனப்பகரும்
பண்பாட்டின் பாதையிலே
முழுதாக வேரோடி
முளைத்ததுவே தைத்திருநாள்
எழுவானின் கதிரவனை
ஏற்றிவைக்கும் மெய்த்திருநாள்!

மதிநிறைந்த மார்கழியில்
மாமுகில்கள் மழைபொழியக்,
கதிர்விளைந்து களம்நிறையக்
கழனியெலாம் நீர்பெருகப்
புதியவளாய்த் தைமகளும்
புறப்படுவாள் இக்களிப்பில்
மதுக்குடமாய் மனம்பொங்கும்
மனையெங்கும் பால்பொங்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைபிறந்தால் உழைப்பாளர்
கையுயர வாழ்வுயரும்
வையகத்தில் வாழ்வாங்கு
வாழவழி கூடிவரும்
மெய்யாக நெஞ்சினிலே
மேவிவரும் நம்பிக்கை
நெய்விளக்காய் ஒளிவீச
நிறைவுடனே பால்பொங்கும்!

காவிரிந்து* வளம்பெருகக்
கழனியெங்கும் பயிர்செழிக்கப்
பூவிரியும் சோலையெனப்
புவனமெலாம் புலர்ந்துவரப்
பாவிரித்துத் தைமகளைப்
பண்புடனே வரவேற்றே
நாவிருத்திப் பாடுகின்றேன்
நலம்தரவே வேண்டுகின்றேன்!

---

(*காவிரிந்து – காடுகள் பெருகி)

– 2019 தைப்பொங்கல் நாளையொட்டி
தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளத்தில் வெளியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலை நிமிர்வோம்!

(எண்சீர் விருத்தம்)



தலைநிமிர்ந்து தமிழரென வாழ்ந்தோம், பின்னே
தாழ்வுற்றுத் தலைதாழ்ந்து வீழ்ந்தோம், அந்த
நிலைமாறி மீண்டும்நாம் நிமிர்ந்தோம் ஓர்நாள்!
நீண்டநா ளக்காலம் நிலைக்க வில்லை!
குலைத்தெறிந்த குரங்கின்கை மாலை யானோம்
கொடுந்துச்சா தனன்கையின் சேலை யானோம்
விலைபோனோர் விழிமூடிச் சிலையாய் நிற்க
விழித்துயர்ந்த தலைமீண்டும் குனிந்த தம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்கோ பெருந்துயரம் வந்த தென்றால்
பெற்றதாய் போர்க்கோலம் கொள்வா ளன்றோ!
பிள்ளைகளோ கையேந்தி நின்ற போது
பெற்றவளும் செயலற்றுப் பார்த்து நின்றாள்!
பள்ளத்தில் வீழத்திவிட்ட ஊழ லென்றும்
பகட்டினிலே சிறைவைத்த சினிமா வென்றும்
உள்ளபடி உரிமையற்ற ஆட்சி யென்றும்
ஒன்றல்ல விலங்குபல தாயின் கையில்!

தமிழனென்று சொல்கின்ற நிலையின் றில்லைத்
தலைநிமிர்ந்து நிற்கின்ற பெருமை யில்லை!
திமிர்கொண்டு பதவிக்கும் தலைமைக் கென்றும்
திரிகின்ற திருடர்தாம் நிறைந்து விட்டார்!
அமிழ்தான மக்களது ஆட்சி வெட்கும்
அசிங்கமாய் ஆகிவிட்ட அவலம் சூழ
நிமிர்கின்ற நிலைதாய்சேய் நிலத்தே யில்லை
நேராகத் தலைநிமிரும் தகுதி யில்லை?

பண்டையநம் முன்னோரின் வரலாற் றைநாம்
படித்தாலே போதாது, படைக்க வேண்டும்!
கண்போலக் காத்துவைத்த இலக்கி யங்கள்
காட்டியநற் கருத்தோடு ஒழுக வேண்டும்!
மண்ணுலகம் போற்றுகின்ற நூல்கள் தந்த
மரபுவழி பயணித்து வாழ வேண்டும்!
விண்ணெட்டும் புகழ்மீண்டும் மலர வேண்டும்!
வீறுடனே தமிழரென நிமிர வேண்டும்!

– விளம்பரம், ஜனவரி 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்ப்பின் ஒலி

(அறுசீர் விருத்தம்)



வெட்டியாய் இருக்கும் காற்று
  வீசியே உயிரைக் காட்டும்
கொட்டுமோர் மழையாய் வந்தே
  குளிர்முகில் நிலத்தைக் காக்கும்
மொட்டென இருக்கும் பூவும்
  மலரவே மணத்தை வீசும்
கட்டியாய் இருக்கும் தங்கம்
  கனல்பட்டே அணியாய் மாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்டினால் தானே காதில்
வீணையும் இசையை வார்க்கும்
காட்டினால் தானே அன்பும்
கனிவொடு மனத்தை ஈர்க்கும்
ஈட்டிய பொருளில் ஏழைக்(கு)
ஈவதே இன்ப மூட்டும்
தீட்டிய அறிவே எட்டுத்
திசையையும் தெரியக் காட்டும்.

கூடியே வாழ்ந்தால் சொந்தம்
குலவியே களிக்கும் என்றும்
தேடியே போனால் தெய்வம்
தெளிவுடன் நெஞ்சில் தோன்றும்
ஓடியே நதியும் சென்றே
உலகுக்கு வளத்தை யூட்டும்
மூடியைத் திறந்தே உள்ளம்
முகத்திரை விலக்கிக் காட்டும்.

காசுக்கும் கஞ்சிக் கென்றும்
கற்கிறோம் மொழிகள் வேறு,
தூசுபோல் தமிழை எண்ணித்
தூற்றுதல் முறையோ கூறு!
பேசுவோம் தமிழை நாளும்
பேசவே தமிழும் வாழும்
பேசுந்தாய் மொழிவாழ்ந் தாலே
பெயருடன் நாமும் வாழ்வோம்!

– கவிதை உறவு, ஜூன் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்தெடுத்த தாய்!
(அறுசீர் விருத்தம்)

துறந்துவந்தோம் பெற்றவளைத் துறப்பதற்கே மனமின்றித்
தொலைவு தூரம்
இறந்துவந்தோம்* இன்முகத்தோடு எமையேற்றாய் அரவணைத்தாய்
இனிய தாயே!
திறந்துவைத்தாய் உன்கரத்தைத் துணையென்றே பற்றினோமெம்
துயரம் தீர்த்தாய்
பிறந்ததினம் காணுகின்றாய் பெருந்தாயே கனடாவே
போற்றி போற்றி!

பல்லினங்கள் பலமொழிகள் பல்வேறு பண்பாட்டில்
பழகும் மக்கள்
எல்லோரும் ஒருகுடையில் ஒன்றாகி வாழுகின்ற
உணர்வு தந்தாய்!
நல்லகுடி யாட்சியுள்ள நாடென்றே உலகரங்கில்
நற்பேர் கொண்டாய்!
வல்லபெரும் நாடாகி வளம்பொலிந்து நலம்கனிந்து
வாழ்க தாயே!

மனிதத்தின் உரிமைகளை மதித்துனது சாசனத்தில்
மலர வைத்தாய்!
தனித்துவமாய் அமைதியுடன் தவழ்கின்ற பூங்காவாய்த்
தரணி வென்றாய்!
நனிசுவைகொள் சுதந்திரமாம் நற்கனியை நாமுண்டு
நயக்கத் தந்தாய்!
இனிமைதரும் என்வீடே என்நாடே கனடாவே
இனிதே வாழ்க!

---

(*இறந்து வந்தோம் - கடந்து வந்தோம்)

– ஜூலை 01, 2018ல் 150ஆவது கனடா தினம்
கொண்டாடப்பட்டபோது எழுதப்பட்டது.
விளம்பரம், ஜூலை 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னுள் விழுந்த பொறி!
(வியனிலைச் சிந்து)

உனதுள்ளம் அறியாது
ஒருநாளுன் உள்ளத்துள்
உணர்வூட்டும் பொறியொன்று வீழும் – அது
உயிர்மூச்சை உள்வாங்கி
உருக்கொண்டு பிழம்பாகி
உனதாற்றல் மெருகேற்றி நீளும்!

நினைப்பின்றி ஓய்ந்தாலோ
நித்திரையில் ஆழ்ந்தாலோ
நொடிதன்னிற் பொறியவிந்து போகும் – அதை
நெய்யூற்றும் உணர்வாலே
நெருப்பாக்கி வளர்த்தாலே
நெடிதாகிப் பயன்தந்து சூழும்!

கனவான எண்ணங்கள்
கருக்கொண்ட வண்ணங்கள்
கனியாகிக் கைதன்னில் வீழும் – உன்
கண்ணுக்கு எட்டாத
கடைக்கோடிக் கோள்கூடக்
கையெட்டும் வகைவந்து சேரும்!

மனமென்னும் கலசத்தில்
மகிழ்வூட்டும் ஒளியாகி
மலர்கின்ற சுடராக மாறும் – பொறி
மறையாது அணையாது
மரணிக்கும் வரையுந்தன்
மன்றத்தில் எரியேற்றி வாழும்!

– கவிதை உறவு, அக்டோபர் 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பம்
(அறுசீர் விருத்தம்)

கூட்டில் வாழும் குருவிகளும்
குகையில் உறையும் விலங்குகளும்
தேடும் குடும்ப வாழ்க்கைதனைத்
தெரிந்து மாந்தர் திருந்திவிட்டால்
வீடும் விளக்காய் ஒளிதருமே
விரியும் மலராய் விளங்கிடுமே
நாடும் அதனால் நலம்பெறுமே
நன்மை மலைபோற் குவிந்திடுமே!

சொல்லும் சொல்லே சுடுசொல்லாய்ச்
சுட்டால் படுமே வடுநெஞ்சில்
கொல்லும் நோயின் கெடுமையிலும்
கொடிதே கடுஞ்சொல் என்றுணர்ந்து
நல்ல வார்த்தை நலமாக
நாவில் இருந்து வரவேண்டும்
கல்லாய் இருக்கும் மனங்கூடக்
கரைந்து போகும் அன்பாலே!

அன்னை தந்தை உடன்பிறந்தோர்
அன்புத் துணையும் பிள்ளைகளும்
உன்னைச் சேர்ந்த உறவுகளும்
உனக்காய் இறைவன் தந்தவரம்
தென்னை தனிமரம் ஆகாமல்
தோப்பாய் இருந்தால் சிறப்பாகும்
உன்னைத் தோப்பாய் உருவாக்கு
உலகே உருளும் உன்கையில்!

– கவிதை உறவு, நவம்பர் 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலதிகாரம்

(குறள் வெண்பா)

கனவுலகோ வண்ணமயம் காதல் கனிந்தால்
நனவுலகும் நந்தவனம் தான்.

ஒன்றோடு ஒன்றிணைந்தால் ஒன்றென்னும் எண்கணக்கு
வென்றுவரும் காதலுக்கே மெய்.

தென்றலாய் வீசுவதும் தீப்பிழம்பாய்க் காய்வதுவும்
குன்றாத காதற் குணம்.

உயிராகி மெய்யாய் உயிர்மெய்யாய் மாறிப்
பயிராகும் காதல் பலித்து.

கண்கள் துயிலிழந்தும் காத்திருந்தும் ஊணிழந்தும்
வன்மையுறும் காதல் வலி.

புலரா இரவோடு பூந்தென்றல் தேயா
நிலவுமிவை காதலுக்கு நீர்.

உட்புகுந்து காதல் உறவுகொள்ளா உள்ளமொரு
முட்பொதிந்த காட்டு மரம்.

தாழுடைத்துக் காதலினைத் தன்னுள்ளே வைத்தநெஞ்சு
பாழுடைந்த வீடாகிப் போம்.

இளமைக்குக் காதல் இனியவுயிர்க் காற்று
முதுமைக்கும் ஆங்கதுவே மூச்சு.

இருபறவை வட்டமிடும் இல்லத்து வானில்
ஒருசிறகாம் காதலதைக் கொண்டு!

– கவிதை உறவு, ஆகஸ்ட் 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்றலே தூதுபோ!
(வஞ்சி விருத்தம்)

இமைத்த விழிகளுள் இருத்திய
சுமைக்குள் அடங்கிய சுகமவள்
அமைத்த அளவினில் அழகொடு
சமைத்த சிலையினை நிகர்த்தவள்!

நிதமும் நித்திரை கலைக்கிறாள்
இதமும் இன்னலும் கலக்கிறாள்
இதயத் துடிப்பினில் ஒலிக்கிறாள்
வதஞ்செய் தெனதுயி ரெடுக்கிறாள்!

திருடும் அவள்விழிப் பார்வையில்
குருடென் றானதென் கண்களே!
அருகில் அவளிலை யெனில்மனம்
கருகும் சருகெனக் காயுதே

விடியும் போதவள் தரிசனம்
கொடிய மனவலி விலக்குமோ
மடியில் அவளுடல் வீழுமோ
நெடிய கனவுகள் நீளுமோ!

வீசும் தென்றலே தூதுபோ!
நேசம் வைத்தவள் காதிலே
மாசில் லாததோர் காதலை
யாசித் தேனெனக் கூறிவா!

– கவிதை உறவு, மார்ச் 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதலால் காதல் செய்வீர்!

(குறள்வெண் செந்துறை)

கதிரவன் ஒளியைப் பெற்றுக்
கனிதரும் மரங்கள் போல
உதிருமோர் மனித வாழ்க்கை
உயிர்பெறும் காத லாலே!

கண்கள் காணாத தெல்லாம்
காதலால் இதயம் காணும்
விண்முட்டும் உயரங் கூடக்
விரல்தொடுந் தூர மாகும்!

காதலை உணர்ந்தால் நெஞ்சில்
கற்பனைக் குதிரை யோடும்
காதலின் தொடுகை பட்டால்
கவிதைகள் ஆறாய்ப் பாயும்!

அன்பினை வாரி யள்ளி
அளித்துப்பார் ஒருவர்க்(கு) அந்த
அன்பேயின் அருவி யாகி
அளவிறந்(து) உன்மேல் கொட்டும்!

உள்ளத்தில் உவகை பொங்கும்
உருவினில் மெருகு தங்கும்
கள்ளமில் மனங்கள் கூடிக்
கலந்திடும் காத லாலே!

காதலால் அனைத்தும் கூடும்
கருத்துடன் வாழ்வு தோன்றும்
ஆதலால் காதல் செய்வீர்
அழகென வாழ்வைக் கொள்வீர்!

– விளம்பரம், பெப்ரவரி 15, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டம்!
(எண்சீர் விருத்தம்)

இலையுதிர்த்த மரக்கிளையின் இடுக்கில் காணும்
இளந்தளிரும், இருட்திரையைக் கிழித்து வானின்
தொலைவிருந்து தோன்றுகின்ற ஒளியின் கீற்றும்,
துளிநீராய் வீழுகின்ற முகிலும், கல்லின்
தலைதுளைத்து முளையூன்றும் வித்தும், வந்த
தடைமேவிப் பாய்கின்ற ஆறும், தீயின்
உலைவீழ்ந்து சுடர்கின்ற பொன்னும் வாழ்வை
உறுதியொடு போராடி வெல்லச் சொல்லும்!

முட்டையதன் கோதுடைத்து வெளியே வந்து
முழுஉலகைத் தரிசிக்கும் குஞ்சும், சின்னச்
செட்டைகளை விரித்துவான் வெளியைத் தாண்டும்
சிட்டுகளும், புழுக்கூட்டை உடைத்து மீழும்
பட்டுடுத்த வண்ணத்துப் பூச்சி யெல்லாம்
பலங்கொண்டு போராடித் தளையாய்ப் பூண்ட
கட்டுகளைக் அவிழ்த்தாலே வாழ்வில் அர்த்தம்
காணலா மெனுமரிய கருத்தைச் சொல்லும்!

முள்ளாலே சமுதாயம் உனக்குப் போட்ட
முடிச்சவிழ்க்கப் போராடு! வெற்றி காண
உள்ளத்தில் நம்பிக்கை விதையை ஊன்று!
உழைப்பென்னும் உரமிட்டு விருட்ச மாக்கு!
தெள்ளியநல் இலக்கொன்றைத் தேடு! நேராய்த்
தேர்ந்தெடுவுன் வாழ்வுக்கோர் பாதை! மேடு
பள்ளங்கள் தடையானாற் தகர்த்தே சென்றே
பற்றிக்கொள் கனிந்துவிழும் கையில் வாழ்வே!

– கவிதை உறவு, ஆகஸ்ட் 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடல்

(பதினான்குசீர் விருத்தம்)



தாய்மடி யிருந்துநான் தரைதொட்ட நாளாகத்
தலையிலே சுமைகள் பலவே
தவித்ததும் சிலவேளை தளர்ந்ததும் உண்டெனினும்
தாண்டினேன் தடைகள் தனையே!

வாய்பிளந் தெனைப்பெரும் வலியவிதி பற்றியும்
வாழ்க்கையும் கசக்க விலையே!
வள்ளுவம் தந்தநெறி வழிகாட்டி நின்றதால்
வாடிநான் வீழ விலையே!

காய்தரும் மரமாகிக் கல்லடிகள் பட்டாலும்
காயங்கள் தாங்கு முடலும்
கலங்காத உள்ளமும் கலையாத எண்ணமும்
கைகோத்துக் காத்த தெனையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்படா அவமானம் நான்பட்டேன் ஆனாலும்
நாலுபேர் நடுவி னுள்ளும்
நானுமொரு மனிதனாய் நடமாட வைத்ததே
நம்பிக்கை யென்னு மொளியே!

கூடவே யிருந்தோரும் குழிபறித் தாரந்தக்
குழிவீழ்ந்தும் வெளியில் வந்தேன்!
குறுக்கிட்ட தடையினைக் குறிவைத்த எதிர்ப்பினைக்
குளிர்நிழல் ஆக்கி வைத்தேன்!

சூடாத முடிக்காகச் சூட்டாத பெயர்க்காகச்
சோராத நெஞ்சு பெற்றேன்!
சுற்றிடும் உலகிலிவை சுழல்கின்ற இயல்பெனச்
சுலபமாய் அறிந்து கொண்டேன்!

வாடத நெஞ்சத்தை வளையாத உறுதியை
வருந்தியே தேயும் உடலை
வருகின்ற தடைகளைப் பொடியாக்கும் வலிமையை
வரமாக வரித்து வைத்தேன்!

தேடலே அறிவூட்டித் தெளிவேற்றும் என்பதால்
தேடலில் மனது வைத்தேன்!
தேடுவேன் மரணமெனைத் தேடும்வரை ஓயாது
தேடியதைப் பங்கு வைப்பேன்!

– விளம்பரம், டிசம்பர் 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேடை நாடகம்

(எழுசீர் விருத்தம்)

எத்தனை நாடகம் என்னென்ன வேடங்கள்
  எல்லாமே அரங்கில் ஏற்றம்
வித்துவம் தீட்டிய விதவிதச் சாயங்கள்
  வெளிமாயை காட்டும் தோற்றம்
அத்தனை காட்சியும் அனுபவம் ஊட்டிடும்
  அழகான அறிவுப் பாடம்
புத்தனின் ஞானமாய் புத்தியில் வைத்திடில்
  புரிந்திடும் புதிய வேதம்!

எள்ளாகிக் கொள்ளாகி எதிராகி வெடித்தவர்
  ஏட்டிக்குப் போட்டி யானோர்
துள்ளியே மேடையிற் தோளிலே கைபோட்டுத்
  தோழராய் அணைத்துக் கொள்வார்!
கள்ளோடு போதையாய் கலந்திட்ட உறவாகிக்
  காண்போரைக் கனிய வைப்பார்!
பள்ளியில் பயிலாத பாடங்கள் இவையென்று
  பார்ப்போரை உணர வைப்பார்!

சொல்வேறு செய்கின்ற செயல்வேறாய் வாழ்வோரைச்
  சொல்லுக்கே வேந்தர் என்பார்!
வல்லமை வாய்த்திட்ட வாய்வீச்சு வீரரை
  வரந்தரும் ஞானி என்பார்!
வில்லாத பொருள்களை விலைபேசி விற்போரை
  வெற்றியின் வேந்த னென்பார்
பொல்லாத பொய்யினைப் பொருத்தமாய் மறைக்கினற
  போலியைத் தலைவ னென்பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்செய்த மகுடத்தைத் தரமின்றிப் பிறர்கையால்
    தன்தலை சூட்டு வோரும்
கூன்பட்ட சிந்தனைக் குருடான கொள்கையைக்
    கோபுரம் ஏற்று வோரும்
வான்கொண்ட எல்லையை வளைத்தவன் நானென்று
    வார்த்தையைக் கொட்டு வோரும்
தேன்கொட்டும் வனமான திரைமேடை தனைநாடித்
    தேடிவரும் வண்டின் இனங்கள்!

கள்ளமாய் மனம்கொண்ட கயவனாய் நடிப்பார்கள்
    கனிவான நெஞ்ச மிருக்கும்
வெள்ளைமன நாயகன் வேடத்தில் வருவார்கள்
    விடங்கொண்ட உள்ள மிருக்கும்
உள்ளத்தின் நெருப்பையே உருவத்தின் நீற்றாலே
    ஒளிக்கின்ற உத்தி யிருக்கும்
எள்ளேனும் சலனங்கள் எதுவுமே இல்லாமல்
    என்றைக்கும் மேடை யிருக்கும்!

– கவிதை உறவு, செப்டம்பர் 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதனிடம் கற்ற குணம்
(இன்னிசை வெண்பா)

(தனிச்சொல் பெறாது நாலடியும் ஒரே எதுகை
பெற்று வரும் இன்னிசை வெண்பா)

இட்ட(து) ஒருமுட்டை ஈடற்ற சாதனையாம்
பெட்டைச் சிறுகோழி பேரெடுப்பாய் ஊரழைத்தே
அட்ட திசைகேட்க ஆர்ப்பரித்துக் கொக்கரித்தல்
மட்ட மனிதர் மனம்.

(அடிதோறும் தனிச்சொல் பெறும் இன்னிசை வெண்பா)

கொஞ்சிக் குலவிக் குளிப்பாட்டி - மஞ்சத்தில்
பிஞ்சு மழலையெனப் பேணிடினும் - வஞ்சகர்கள்
போடும் சலுகைபெறப் போட்டியில்நாய் - ஓடுவது
கூடிவந்த மாந்தர் குணம்.

(பல எதுகை பெறும் இன்னிசை வெண்பா)

வளவளத்து வாய்வீசும் வன்மையினாற் தன்னைப்
பளபளப்பாய்க் காட்டிப் பவனிவரும் மானிடர்போல்
காற்றைக் கலைத்துக் கரைகின்ற காக்கைக்கும்
தன்னிருப்பைக் காட்டும் தகை.

(இரண்டாமடியிலும் மூன்றாமடியிலும் தனிச்சொல் பெறும்
இன்னிசை வெண்பா)

சொந்தமாய்ப் புத்தியில்லை, சொற்கேட்கும் நெஞ்சமில்லை
எந்தவழி போவதெனும் எண்ணமில்லை - மந்தையொன்று
செல்லும் வழியினிலே செல்லுமே - எல்லாமும்
பொல்லா மனிதரது போக்கு.

- கவிதைப் பட்டறையில் இன்னிசை வெண்பா
வகைகளுக்கான எடுத்துக்காட்டுகளுக்காக
எழுதப்பட்டவை. மார்ச், 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மிக அலங்காரம்

(எண்சீர் விருத்தம்)

நெற்றியிலே தீட்டிவைத்த நீறு இல்லை
  நேர்வழியிற் செல்லுகின்ற நெஞ்ச முண்டு
சுற்றியுள்ள சீருடையாய்க் காவி யில்லை
  சுத்தமுள்ள மனமொன்றே அணியா யுண்டு
பற்றோடு இயற்றுகின்ற தவமொன் றில்லை
  பணிசெய்து கிடக்கின்ற தவமே யுண்டு
கற்றுணர்ந்த வேதங்கள் எதுவு மில்லைக்
  கனிந்தவாய் மொழிவேதம் கருத்தில் உண்டு!

பூசனையும் போற்றுதலும் புரிவ தில்லை
  பூசித்துப் பிறர்மனதைப் போற்ற லுண்டு
பாசத்தை அறுக்கின்ற பத்தி யில்லை
  பரிதவிக்கும் மானிடர்மேல் பத்தி யுண்டு
மோசமுள்ள துறவியர்கால் பற்ற லில்லை
  முப்பாலின் காற்தடமே பற்ற லுண்டு!
வேசங்கள் விரதங்கள் வேள்வி யில்லை
  வேண்டியோர்க்(கு) ஈவதென்னும் வேள்வி யுண்டு!

இல்லையெனும் அத்தனையும் இல்லை யென்போர்
  இழிவுறுவர் நாத்தீகர் என்னும் பேரால்
கொல்லைவழி செல்வோர்கள், கொடியோர், ஈகை
  கொடுப்பதற்கு மனமற்றோர், கொள்ளை செய்வோர்
கல்மனத்தோர், காமுகர்கள், கடவுள் பேரால்
  கருணையின்றி மானுடத்தைக் கொல்வோர் இன்னும்
அல்லவைகள் பலபுரிவோர் ஆன்மீ கத்தின்
  ஆடைக்குள் ஒளிந்ததனால் ஒளிர்கின் றாரே!

– கவிதை உறவு, மார்ச் 2015


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெண்ணுலகம்

(அறுசீர் விருத்தம்)



இன்னுலகை இயற்கையினை இறையருளின் சக்தியினை
இனிய தாயாய்ச்
சென்னியிலே வைத்தேற்றிச் சீராட்டும் ஆடவர்கள்
சிறுமை கொண்டு
வன்முறையால் ஆதிக்க வலையிட்டு மெல்லியரை
வதைத்தல் இன்றும்
துன்பியலாய் முடிவற்ற தொடர்கதையாய்ப் போவதுவே
துயர மன்றோ!

எடுத்ததுவோ பெண்ணென்ற ஏற்றமிகு பிறப்பென்பார்
இதனை யன்றி
எடுப்பதற்குத் தனக்கெனவே எப்பொருளும் இல்லாது
உயிரைக் கூடக்
கொடுப்பதற்கே பிறப்பெடுத்த குலமாகிக் குவலயத்தைக்
கொழிக்கச் செய்தோர்
துடுப்பிழந்த படகாகித் துயர்கடலிற் தத்தளித்துத்
துடித்தல் நன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டங்கள் பெற்றென்ன சட்டங்கள் செய்தென்ன?
பதவி கொண்டு
திட்டங்கள் வகுத்தென்ன திறனாற்றல் வளர்த்தென்ன?
தீயோர் செய்யும்
கொட்டங்கள் அறுத்தென்ன கொடிகட்டி உயர்ந்தென்ன?
குடும்ப மென்னும்
வட்டத்துள் மங்கையர்தம் வாய்பொத்தி அடிமையென
வாழ்தல் நன்றோ?

பெண்ணாகப் பிறக்கவொரு பெருந்தவமே வேண்டுமென்பர்
பெண்கள் தங்கள்
கண்ணுக்கும் காமத்தின் இச்சைக்கும் விருந்தென்றே
கருதும் ஆண்கள்
மண்ணுலகம் வளம்பெற்று மானுடமே செழிப்புற்று
மலரச் செய்த
பெண்ணுலகம் வாழ்ந்தாலே பேருலகம் நிலைக்குமெனப்
புரிதல் வேண்டும்!

– கவிதை உறவு 42ஆவது ஆண்டு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேதினி மேம்பட...

(இயற் கும்மி)

பெண்கள் விடுதலை பெற்றுவிட் டாரென்றே
  பேரிகை கொட்டி முழங்குகிறோம்
விண்வெளி எல்லையைத் தாண்டிவிட் டாரென்றே
  வித்துவம் தத்துவம் பேசுகிறோம்!

கல்வியில் கேள்வியில் கற்கும் கலைகளில்
  கண்டனர் மாபெரும் சாதனையே
பல்துறை வல்லுன ராயினும் போரிடும்
  பாதையில் நிற்பதும் வேதனையே!

ஆதிக்க வாளொடு ஆண்டடி மைகொள்ளும்
  ஆடவர் சிந்தனை மாறவில்லை!
சாதிக்கும் வல்லமை கொண்ட மகளிரோ
  சாத்திர வேலியைத் தாண்டவில்லை!

வாச மலரென்று வர்ணிக்கும் ஆடவர்
  வாசம் நுகர்ந்தபின் வீசிடுவார்
மாசிலா வெண்மதி என்றே புகழ்பவர்
  மானம் அழித்திரு ளாக்கிடுவார்!

வக்கிர வேட்டை வெறிநாய், பிணந்தின்னி
  வல்லூறாய்ப் பெண்ணை விருந்திடுவார்
நட்ட நடுத்தெரு இட்டிவர் தோலினை
  நாராய் உரித்தாற் திருந்திடுவார்!

பெண்கள் படுகின்ற வன்கொடு மைசொல்லிற்
  பேச முடியாப் பெருங்கொடுமை
மண்ணுள் மனிதம் மறைந்த துவோமாதர்
  மாதவப் பேறுதான் பெற்றனரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளும் பற்பல நாட்டிலும் பெண்கள்
இழந்த உரிமைக்குப் போரிடுவார்
எந்நாளில் ஆணுக் கிணையாய் உரிமைகள்
எட்டுமென் றேயவர் ஏங்கிடுவார்!

பெற்றதில் லைச்சம நீதி சமயச்
சமூக விடுதலை இன்னுமில்லை!
உற்ற வகையில் உறுபொருள் ஈட்டவும்
ஊதியம் பெண்ணுக்(கு) உறுதியில்லை!

ஆணுக்குப் பெண்சமம் என்பதன் சாட்சியே
ஆண்பாதி பெண்பாதி ஆனதெய்வம்
வீணுக்குப் பெண்ணை விலக்கும் மரபினை
வீழ்த்திடில் இம்மண்ணில் நீதிவெல்லும்!

வல்லது நல்லதே என்ப(து) உயிரினம்
வாழ இயற்கை வகுத்தவிதி!
கொல்லும் விலங்கதை ஏற்றிடலாம் மனங்
கொண்ட மனிதர்கள் ஏற்பதுவோ!

மெல்லியர் வாழ்ந்திட வல்லவர் தாங்குதல்
மேதினி மேம்பட மாற்றுவழி
இல்லறம் நல்லற மாகிடும் மாதரை
ஈடென்றே ஆண்களும் ஏற்றவழி!!

– கவிதை உறவு, ஏப்ரல் 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிசத்தைக் காண்பதெங்கே?

(அறுசீர் விருத்தம்)

உடையிலே போலி, உண்ணும்
 உணவிலே போலி, மக்கள்
நடையிலே போலி, நாட்டு
 நடப்பிலும் போலி, எந்தக்
கடையிலும் பொருட்கள் போலி,
 காண்பது யாவும் போலி!
தடையேது மின்றி யெங்கும்
 தழைப்பதே போலி யன்றோ!

பட்டங்கள் போலி, பெற்ற
 பதவிகள் போலி, நாட்டின்
சட்டங்கள் போலி, சாற்றும்
 சாத்திரம் போலி, நட்பு
வட்டத்துள் உள்ளோர் சொல்லும்
 வார்த்தைகள் போலி, முன்னே
தொட்டவை போலி, பின்னே
 தொடர்பவை யெல்லாம் போலி!

உறவுகள் போலி, உற்றார்
 உறவினர் போலி, ஞானத்
துறவிகள் போலி, சூழ்ந்த
 தொண்டரும் போலி, உண்மை
பிறக்குமென் றெண்ணிக் கோயில்
 புகுந்தபோ தங்கே யுள்ள
இறைவனும் போலி என்றார்
 எங்குதான் நிசத்தைக் காண்பேன்?

**(தமிழகத்துக் கோயில்கள் சிலவற்றில் போலிச் சிலைகளை வைத்துவிட்டு, உண்மையான சிலைகள் களவாடப்பட்ட செய்தி கேட்டு எழுதியது.)**

**விளம்பரம், ஏப்ரல் 2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லுக சொல்லை!

(எழுசீர் விருத்தம்)



என்பில்லா நாவாலே எதுவேண்டு மானாலும்
எப்படியும் பேசி விடலாம்
அன்பென்ற கோட்டையை அரைநிமிட நேரத்தில்
அடியோடு தகர்த்து விடலாம்.
துன்பத்தி லாழ்த்தியே துளைக்கின்ற சொல்லாலே
துடிக்கவே வைத்து விடலாம்.
இன்பத்தை இப்போதே இங்குதரு வேனென்றே
ஏமாற்றி வாழ்ந்து விடலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுகின்ற சொல்லாலே சுமையேற்றி மனையாளைச்
சுற்றத்தை நீக்கி விடலாம்.
நடுநின்று கூறாத நாவினால் ஞாயத்தை
நலிவடையச் செய்து விடலாம்.
கொடுஞ்சொல்லால் நஞ்சேற்றிக் கொன்றுபட வைக்கின்ற
கூற்றுவனே ஆகி விடலாம்
தடுமாறும் சொற்களால் தடம்மாற்றி யொருவனைத்
தரைமீது வீழ்த்தி விடலாம்!

சொல்கின்ற சொல்லுக்கு வன்மையுண் டென்பதனால்
சொல்வதைத் தேர்ந்து சொல்க!
நல்லதொரு வித்தூன்ற நல்விருட்ச மேவளரும்
நற்சொல்லை ஊன்றி விடுக!
மெல்லவரும் காற்றுமலர் மொட்டவிழ்க்கப் பூமலரும்
மோதுபுயல் போக்கி விடுக
வெல்லுமொரு சொல்விட்டு விரும்புமொரு சொல்தன்னை
விருந்தாக்கி வைத்து விடுக!

இனிதான சொற்களால் இதமாகப் பேசுங்கள்
இதயங்கள் பூத்து வருமே!
கனிவான வார்த்தையால் கருணையைக் காட்டுங்கள்
காயங்கள் ஆறி விடுமே!
நுனிநாக்கும் அடிநெஞ்சும் ஒருவார்த்தை பேசட்டும்
நூறாண்டு நீளு முறவே!
பனிநீரின் குளிராகப் பாசத்தில் உள்ளங்கள்
பக்கத்தில் ஒன்றி வருமே!

– விளம்பரம், பெப்ரவரி 01, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றுதான் சுதந்திரம்?
(அறுசீர் விருத்தம்)



சுதந்திர நாளில் என்றும்
  சுகராகம் கேட்ட தில்லை.
சுதந்திரக் காற்று எங்கள்
  சோலையில் வீச வில்லை.
சுதந்திரம் பேரி னத்தின்
  சொத்தென ஆன தாலே
சுதந்திர அடிமை என்னும்
  சொற்பதம் நாங்க ளானோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைபல் லாண்டாய் எங்கள்
மூதாதை யோர்கள் வாழ்ந்த
இன்னரும் நிலமும் போற்றும்
இனியநற் றமிழும் வாழ்வும்
அந்நியர்க் கடிமை யான
அன்றும்நாம் இழந்த தில்லை!
இன்றைநாள் சுதந்தி ரத்தால்
இழந்தவைக் கெல்லை யில்லை!

சொந்தமண் ணுரிமை தன்னைச்
சொத்தான இனத்தை, வாழ்வாம்
செந்தமிழ் மொழியைக், கல்விச்
சிறப்பினைக், கலைபண் பாட்டை,
அந்தமாய்த் திகழும் எங்கள்
அருளுடை நெறியை யெல்லாம்
இந்தநாள் இழந்தே போக
இட்டதே சுதந்தி ரம்தான்!

எழுபது ஆண்டு காலம்
எய்திய நன்மை யென்ன?
விழுந்தன உயிர்கள் கோடி
விடுதலை வாழ்வைத் தேடி!
தொழுதுகை யேந்தும் வாழ்வைத்
தொலைத்தென்று நம்மை நாமே
முழுவதும் ஆளும் நாளே
முடியுமெம் அடிமை வாழ்வே!

– தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளம், பெப்ரவரி 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயின் வாழ்வு
(அறுசீர் விருத்தம்)

வளைய வளைய வருவதும்
  வாலை யாட்டி நெளிவதும்
மழையில் தோய்ந்த செடியென
  மண்டி யிட்டுத் தொழுவதும்
குழைந்து கொஞ்சிக் களிப்பதும்
  குதித்து வந்து விழுவதும்
அழைக்க அடங்கிப் பணிவதும்
  அடிமை நாயின் குணங்களே!

முன்னே இன்னோர் நாய்வர
  முறைத்துப் பார்த்துக் குரைப்பதும்
சென்னி மயிரைச் சிலிர்ப்பதும்
  சோர்ந்த வாலை விறைப்பதும்
தன்னைச் சேர்ந்த இனத்தையே
  தாக்கி யழிக்க நினைப்பதும்
அந்நி யன்கை அடிமையாய்
  அமைந்த நாயின் குணங்களே!

இச்சை கொண்ட மானிடர்
  இழிந்த நாய்கள் போலவே
அச்சங் கொண்ட பேடியாய்
  அடங்கி யொடுங்கிப் பிறரிடம்
பிச்சை என்றே சலுகைகள்
  பெற்று வாழும் பெருமையில்
துச்ச மாய்த்தன் இனத்தையே
  தூக்கி எறிதல் துயரமே!

– **கவிதை உறவு, செப்டம்பர் 2014**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுச்சி சொல்லும் முடிவுரை!

(எண்சீர் விருத்தம்)

மறந்துபோமோ ஈழமண்ணில் மக்கள்கண்ட வேதனை
மறுபதிப்புப் போலதூத்துக் குடியில்வந்த சோதனை!
பிறந்தமண்ணை அழிவினெல்லை போய்விடாது காக்கவே
பிரிவுமின்றிப் பேதமின்றிப் பிறந்ததுபோ ராட்டமே!
திறந்தகைக ளோடுமக்கள் தீர்வுகேட்டு நின்றனர்
தெருவிலிட்டே யவரைநாய்போற் சுட்டுவீழ்த்திக் கொன்றனர்!
இறந்துபட்ட மக்களென்ன ஈனமான ஈக்களா?
இன்றளித்த சலுகையென்ன உடலைமூடும் பூக்களா?

காக்கவந்த காவற்கூட்டம் கண்மறைத்துக் கொண்டது
கட்டுப்பாடு என்றுசொல்லிக் கலவரத்தைத் தந்தது!
மாக்களாக எண்ணியங்கு மானிடத்தைக் கொன்றது
மக்களங்கு மாய்ந்துபோக மனதுசோகம் கொண்டது!
வாக்களித்து அரசிலேற்றி வைத்தமக்கள் வாயிலே
வாரியள்ளி மண்ணிறைத்து வதைத்ததென்ன நீதியோ?
தீக்குளித்த பின்னர்வந்து நீர்தெளித்தல் வேடமே!
தெருவிலுண்மை வந்துவிட்டால் தெரியவைப்பார் பாடமே!

படிப்படியாய் உரிமையெல்லாம் பறிகொடுத்து வீழ்வதோ
பண்டையநம் பெருமையெல்லாம் பகற்கனவாய்ப் போவதோ?
விடிவுகால மொன்றுகாண விழைவதுபோ ராட்டமே
விசமிககள்தம் வேலையென்னல் வீணர்போடும் கூச்சலே!
அடிப்படைக்குத் தீர்வுகாணா ஆட்சிகாலம் சொற்பமே
ஆற்றொணாது அழுதகண்ணீர் அடித்துவீழ்த்தும் கொற்றமே!
நெடியவாசல் மங்கலம்பின் நேற்றுதூத்துக் குடிவரை
நீளுகின்ற எழுச்சிசொல்லும் நிச்சயமாய் முடிவுரை!

– தமிழகம், தூத்துக்குடி மண்ணில் நிகழ்ந்த துயர சம்பவத்தையடுத்து
தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளத்தில் வெளிவந்தது. ஜூன், 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைந்த அழகு

(இன்னிசைக் கலிவெண்பா)

எங்கும் அழகின் இனிமைதரும் மாலையது
பொங்கும் புதுமலராய்ப் பூத்ததுவே லாஸ்வேகஸ் (Las Vegus)
வாழ்க்கை அழகான வாசமலர் என்றிசைக்கும்
வாழ்த்தோடு நன்றாய் வடித்த வெளியரங்கில்
வண்ணக் கனவோடும் வாழ்வின் வனப்பான
எண்ணக் கருத்தில் இதயம் நிறைந்திருக்கக்
கண்மலர்கள் பூத்திருக்கக் காற்றில் தவழ்ந்துவந்த
பண்ணும் இசைபொழிந்த பாடகரும் மேடையிலே
அள்ளிப் பொழிந்த அருவியிலே நீராடித்
துள்ளிக் குதித்தின்பந் துய்க்குமிளங் கன்றுகளாய்
உள்ளக் களிப்பினிலே ஒன்றாகி மக்களங்கே
வெள்ள மெனத்திரண்ட வேளையிலோர் மூலையிலே
நெஞ்சினிலே ஈரமற்ற நேயம் சிறிதுமற்ற
வஞ்சங் குடிகொண்ட வல்லரக்கன் பேயுருவில்
குண்டுமழை பெய்தந்தக் கூட்டைச் சிதறடித்தான்!
அண்டங் குலுங்க அரங்கங் கலங்கியது!
பத்து மணித்துளிதான் பாழ்படுவான் சுட்டதிலே
செத்து விழுந்தவர்கள் செந்நீரிற் தோய்ந்தவர்கள்
எத்தனைபேர் எத்தனைபேர் ஏதும் அறியாத
அப்பாவி மக்கள் அரக்கனவன் தன்னியக்கத்
துப்பாக்கி வேட்டில் துடிதுடித்து வீழ்ந்தார்கள்!
தன்னையுந் தானழித்தான் தாளா(து) உயிர்பறித்தான்
என்னபயன் கண்டான் எவரை மகிழவைத்தான்?
ஏதும் அறியார் எமனுக் கிலக்காகும்
சூது மலிந்து சுழல்கிறது இவ்வுலகம்!
ஆட்டங்கள் போடும் அரசுகட்கும் போராடும்
கூட்டம் சிலவுக்கும் கொள்கையிலே பேதமில்லை!
மக்கள் மனங்களையே மாளிகையாய்க் கொண்டவர்க்கே
கைக்கெட்டும் வெற்றிக் கனி.

– லாஸ்வேகஸ் நகரில் நடைபெற்ற இசைவிழா ஒன்றில் கூடியிருந்த மக்களை நோக்கித் துப்பாக்கிக் குண்டுகளைத் தீர்த்த ஒரு கொடியவனின் செயலால் நாற்பதுக்கும் மேற்பட்ட மக்கள் பலியான துயரத்தில் எழுதியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலவெண்பா

(நேரிசை வெண்பா)

நன்றாக உண்டெல்லா நாளும் உடல்வளர்த்தால்
கொன்றே ஒழிக்கும் கொடுநோய்கள் - இன்றேநீ
செய்வாய் உடற்பயிற்சி சீராக அஃதொன்றே
உய்யும் வழியென் றுணர்.

சர்க்கரை நோய்தன்னைச் சங்கடமாய் எண்ணிவிட்டால்
சிக்கலால் நல்வாழ்வு சீரழியும் - எக்குறையும்
வாராது நீரிழிவை வைத்தாலே கட்டுக்குள்
தீராது போமோ துயர்.

எண்சாண் உடம்பில் எழிலாய் முகம்துலங்கக்
கண்கவரும் ஒப்பனைகள் காட்டுகிறோம் - மண்மேலே
தாங்கும் இருகால் தமைநன்கே பேணுவதால்
நீங்கும் நெருங்கவரும் நோய்.

தித்திக்கும் தீனிகளும் தீன்சுவைமாப் பண்டமதும்
சித்திக்கும் பேருடலாய்ச் சிந்தித்தே - புத்தியுடன்
நல்ல உணவுண்டு நாளுமுடல் வேர்த்துழைத்தால்
இல்லை பெருநோய் இனி.

நீரிழிவு நோய்க்கு நிரந்தரமாய்த் தீர்வில்லைச்
சீரழிவே யென்றுமனம் சோர்ந்தாலே - பேரிழப்பே
உண்டி உடற்பயிற்சி உற்ற மருந்திவைகள்
கொண்டு வருமே குணம்.

- தமிழர் தகவல் (கனடா) மாத இதழில் எழுதப்பட்ட
நீரிழிவு நோய் பற்றிய மருத்துவக் கட்டுரைகளோடு எழுதப்பட்டவை.
மார்ச் 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னைப் படித்ததனால் என்னை வடித்தேன்!

(இன்னிசைக் கலிவெண்பா)

அன்னைத் தமிழின் அருந்தவத்தால் வந்தவனே
உன்னை அடைந்தே உயர்வுற்றோம் முன்னேநீ.
தாயவளை வாழ்த்திவைத்த சந்தத் தமிழாலே
தூயவளை நாங்கள் துதித்து வணங்குகிறோம்!

யாமறிந்த எம்மொழிக்கும் எந்தமிழே ஏற்றமென்று
தேமதுரப் பாட்டாலே தேசமெங்கும் மெய்யுரைத்தாய்!
கூரான வேல்முனைபோல் குத்தும் கவிதைகளால்
போராளிப் பாவலனாய்ப் போர்முரசு கொட்டிநின்றாய்!

அச்சத்தைப் போக்க அடிமை விலங்கறுக்கத்
துச்சமெனத் தன்வாழ்வைத் தூக்கி எறிந்தவன்நீ!
அக்கினிக் குஞ்சால் அறியாமைக் காடுகளின்
திக்கை எரித்துத் தெளிவு பிறக்கவைத்தாய்!

நெஞ்சில் உரமுமற்ற நேர்மைத் திறனுமற்ற
வஞ்சனைப் பேடிகளை வன்கவியால் சாடியவன்!
சாதி சமயமென்று சண்டையிடும் மூடர்மேல்
மோதி மிதித்து முகத்தில் உமிழ்ந்தவன்நீ!

பெண்ணடிமை அற்ற பெருமை மிகுநிலமாய்
மண்ணிற் தமிழகத்தை மாற்றவந்த மன்னவன்நீ!
தீப்பிளம்பாய்த் தீமைகளைத் தீய்த்த எரிமலைநீ
பூப்பிளம்புக் காடாகப் பூத்த புதுமையும்நீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுச் சுவருக்குள் வாட்டும் வறுமையிலும்
பாட்டுத் திறத்தாலே பாலித்த பாவலன்நீ!
காக்கைக் குருவியையும் கத்தும் கடலினையும்
தூக்கிவைத்தென் சாதியெனத் துள்ளிக் குதித்தவன்நீ!

கண்சிவந்த காரிகையாள் கட்டவிழ்த்த கூந்தலினாள்
மண்சிவக்க வைத்ததையும், மானத்தைக் காத்ததையும்,
பெண்கலந்தோர் பேடிகளாய்ப் போனதையும் கண்கலங்கப்
பண்கலந்தே நீயுரைத்தாய் பாஞ்சாலி காதையிலே!

வள்ளுவன் கம்பனொடு வல்லோன் இளங்கோபோல்
தெள்ளு தமிழ்க்கவியே தேர்ந்தெடுத்தாய் ஓரிடமே!
மின்னற் பொறிபோல் மிடுக்கான தோற்றமொடு
கன்னற் கவியுனைப்போற் காசினியில் யார்பிறப்பார்!

உன்னைப் படித்ததனால் என்னை வடித்தவன்நான்
தன்னேர் இலாவுன் தமிழால் உயர்ந்தவன்நான்!
பாரதியே உன்பாட்டுப் பாதிக்காப் பாவலர்கள்
பாரதனில் யாருமிலர் பார்!.

– மகாகவி பாரதியாரின் நினைவு
நாளையொட்டி எழுதியது.
விளம்பரம், டிசம்பர் 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிமழை கொட்டும் முகில்

(எழுசீர் விருத்தம்)

எழுகின்ற ஞாயிறாய் இடருற்ற சமுதாய
இருள்நீக்க எழுந்து வந்தான்!
விழுகின்ற விதையாகி விடுதலைப் பயிராக
வீரத்தை உணர்வில் வைத்தான்!
வழுவான இனமத வர்க்கபே தங்களாம்
வடுக்களைக் நீக்கி வைத்தான்!
தொழுதுகை கூப்பிய துரொபதை வடிவிலே
துயர்போக்கச் சபத மிட்டான்!

அறியாமைக் காட்டினை அழலுக்கு இரையாக்க
அக்கினிக் குஞ்சு வைத்தான்
பொறியாகிப் பழமையைப் பொசுக்கிடும் போரிலே
புதுமைக்குப் பாதை செய்தான்!
குறியான கொள்கையில் குலையாத கவிமழை
கொட்டுமோர் முகிலாய் வந்தான்!
நெறிதந்த மாகவிஞன் நினைவாக அவன்பாடல்
நிலையாகும் உலகில் நின்றே!

– மகாகவி பாரதியாரின் நினைவு நாளில்
தமிழ் ஆர்தர்ஸ் இணையத் தளத்தில்
வெளியானது, டிசம்பர்–2018


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தை வென்ற கவி!

(இன்னிசைப் பஃறொடை வெண்பா)

கற்பனைகள் காட்டாறாய்க் கட்டுடைத்துப் பொங்கிவரச்
சொற்பதங்கள் கூடிச் சொரிமழையாய்க் கொட்டிநிற்கப்

பற்பலவாம் பாவணிகள் பாவோசைச் சந்தங்கள்
அற்புதமாய் நெஞ்சத்தை அள்ளும் வகைசேர்த்துத்

தெய்வத் திருமகனின் தேர்ந்த வரலாற்றின்
மெய்யுணர்த்தும் காவியத்தை மேதினிக்குத் தந்தாலும்

பைந்தமிழர் பண்பாட்டைப் பண்டைத் தமிழகத்தை
ஐந்திணையிற் கண்ட அகவொழுக்க நீதிகளைக்

கானிடத்து நட்பைக் கரம்கோத்த நல்லுறவை
மானிடத்தைப் பாடிவைத்து மாற்றத்தை ஏற்றிவைத்து

ஞாலத்தை வென்றவனே நற்கவிஞன் கம்பனென்றும்
காலத்தை வென்ற கவி!

– காலத்தை வென்ற கவி என்ற
சொற்றொடருக்காக தமிழ் ஆர்தர்ஸ்
இணையத் தளத்துக்காக எழுதப்பெற்றது.
27 மே, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவரி தந்தவன்!

(எழுசீர் விருத்தம்)

புதுவையிற் பிறந்த புலரொளிக் கதிரோன்
   புரட்சியைப் பூமியில் விதைக்க,
மதுதரும் மலர்போல் மனங்கவர் மொழியில்
   மரபுடன் கவிதைகள் செய்தான்!
புதுமையைப் புகுத்திப் பழமையைக் கழித்துப்
   புதியதோர் நெறியினிற் சென்றே
இதுவலோ கவிதை யெனப்பலர் போற்றும்
   இலக்கியம் படைத்தபா வேந்தன்!

வாழ்விழந் தோரும் மகளிரும் குடும்ப
   வழக்கெனும் அடிமையின் குழியுள்
வீழ்ந்திடும் விதியை விலக்கிடத் துணிந்தான்
   விடுதலைச் சங்கினை ஒலித்தான்!
ஆழ்நிலம் பரந்த ஆணிவே ரன்ன
   அர்த்தமில் சடங்குசாத் திரத்தைச்
சூழ்ந்தெரி நெருப்பாம் கவிதைக ளாலே
   சுட்டவன் பாரதி தாசன்!

பரம்பொருள் வழியைப் பற்றிய நெஞ்சில்
   பகுத்தறி வெனும்நெறி பதித்தான்!
உரம்தரும் கருத்தால் உணர்ச்சியின் கொதிப்பால்
   உண்மையின் கதவினைத் திறந்தான்!
தரமிழந் திருந்த தமிழினம் மீண்டும்
   தலைநிமிர்ந் தெழுந்திட வைத்தான்!
முரசொலி யெனவே முழங்கிய கவிஞன்
   மொழிக்கொரு முகவரி தந்தான்!

– புரட்சிக்கவி பாரதிதாசன்
நினைவு நாளுக்காக எழுதியது.
விளம்பரம், ஏப்ரல் 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்குத் தலைமகன்!

(பதின்நான்குசீர் விருத்தம்)



பனம்பா ரணர்வடித்த பாயிரம் சொன்னபடி
  பல்லாண்டு மூத்த முதுநூல்
   பலநூல்கள் பற்றிஅதன் வழிநூல்க ளாகிவரப்
    பயனான முந்து தமிழ்நூல்!

கனமான இலக்கணம் கணக்காய்ந்து சொன்னநூல்
  காலம் கடந்த பெருநூல்!
   கல்தோன்றி மண்தோன்ற முன்தோன்றி வந்ததமிழ்
    கடலென்று சாற்றும் ஒருநூல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனிதான நல்லறிஞர் பலர்கொண்ட மன்றத்தில்
நன்காய்ந்து வந்த அரும்நூல்
நயமான இலக்கிய நூற்பாக்கள் வடிவாக
ஞாலத்திற் பெற்ற முதல்நூல்!

இனமரபை மொழிமரபை இல்வாழ்வின் பொருள்மரபை
இருப்பிலே வைத்த ஒருநூல்!
இன்றைக்கும் தொல்காப் பியம்போலும் ஒருநூலை
இவ்வுலகில் காண விலையே!

அகரத்தை முதலாக்கி எழுத்தினைச் சொல்லாக்கி
அதைவாழ்வின் பொருளில் வைத்தான்
அறிவியற் சிந்தனை வழியினை அடியெற்றி
அதிகாரம் மூன்றை வைத்தான்!

முகத்தோடு தமிழுக்கு முகவரியும் தந்தவன்
முள்ளையும் மலர வைத்தான்
முன்னோர்கள் வழக்கிலே முளைவிட்ட மரபுகள்
முறையாக வளர வைத்தான்!

அகராதி தோன்றவே அடித்தளம் இட்டவன்
அரும்பதச் சொற்கள் வைத்தான்!
அவனுக்கு முன்வாழ்ந்த ஆன்றோர்கள் சொன்னதை
அடையாள மிட்டு வைத்தான்!

தகவான வைப்பிலே தடுமாற்ற மின்றியே
தரமான இயல்கள் வைத்தான்
தமிழுக்குத் தலைமகன் தொல்காப் பியனென்றே
தரணிக்கு அறிய வைத்தான்!

– இனிய நந்தவனம் (தமிழகம்)
கனடா சிறப்பிதழ், மார்ச் 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓல்காப் புகழ்த் தொல்காப்பியர்

(இன்னிசைக் கலிவெண்பா)

வேங்கடந் தொட்டு விரிந்த குமரிவரை
நீங்காது எங்கும் நிறைந்து நிழல்பரப்பிப்
பல்லாண்டு காலம் பயின்ற மொழியென்றே
சொல்லும் வகையுலகிற் தொன்மைச் சிறப்போடு
வாழ்ந்த வழக்கினையும் வண்ணமிகு செய்யுளையும்
ஆழ்ந்து பகுத்துணர்ந்தே ஆய்ந்தறிந்த உண்மைகளைச்
எம்மொழியும் காணா எழுத்தென்றும் சொல்லென்றும்
செம்மைச் சிறப்போடு சேர்ந்த பொருளென்றும்
மூன்றாய் அதிகாரம் முற்றாய்ந்த நூலொன்றைச்
சான்றோர்கள் போற்றச் சமைத்தளித்த காப்பியனே!
வெற்று இலக்கணமா வித்தகனே நீபடைத்தாய்!
மற்ற மொழிகளிலும் மாறுபட்ட தோர்நிலையில்
முற்றும் புதிதாக மூத்ததொரு நூலாக
வற்றாத ஊற்றாக வள்ளலே நீபடைத்தாய்!
எண்கணக்குப் போலே எழுத்தினையும் சொல்லினையும்
பண்படுத்திக் கட்டமைத்துப் பாட்டில் உயிர்கொடுத்தாய்!
செந்தமிழர் பண்பாட்டைச் சீரான வாழ்வியலை
எந்தையர்கள் கண்டறிந்து ஏற்ற அறிவியலைக்
காதலினைச் சாற்றும் களவியலைக் கற்பியலை
மோதியெழும் வீரம் முழங்கும் புறத்திணையைக்
கற்பனையில் நீகண்ட கன்னித் தமிழகத்தைப்
பொற்குவியல் கொண்ட புதையலாய் எந்நாளும்
வாழும் இலக்கணமாய் வாடா இளமையுடன்
சூழும் பிறமொழியின் சூழ்ச்சியிலே வீழாது
சாலத் தனித்தமிழில் சான்றாகத் தொன்மைபெறும்
மூலப் பெருநூலாய் முன்னவனே நீபடைத்தாய்!
சுற்றும் உலகமது சுற்றுவது நிற்குவரை
நற்றமிழும் வாழும் நலமேயுன் நூல்வாழும்!
ஓல்காப் புகழ்பெற்ற தொல்காப் பியரேநின்
நல்காப் பியம்நயந்தோம் நாம்!

– கனடாத் தொல்காப்பிய மன்றத்தின் ஆண்டுவிழா
மலருக்காக எழுதப்பெற்றது. ஒக்டோபர், 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிசாம்பல் கிழித்தெழும் பறவை!

(வெண்கலிப்பா)

பேரறிவுக் களஞ்சியமாய்ப் பெருமைகொண்ட நூலகத்தை
பேரினத்திற் பிறப்பெடுத்த பேய்க்கணங்கள் எரித்தனவே!

ஆறறிவு சிறிதுமிலார் அனலையிட்டார் அருஞ்செல்வம்
நீறாய் அவிந்தபின்பே நெருப்பும் அடங்கியது!

மண்ணுயிரைப் பறித்தவர்கள் மனநிறைவு அடையாராய்
நுண்ணறிவுப் பெருநிதியாம் நூலகத்தை நெருப்பிலிட்டார்!

அரியபல நூல்களெலாம் ஆயிரமாய் ஆயிரமாய்
எரியவைத்துப் பார்த்திருந்தே எக்காளக் கூச்சலிட்டார்!

காட்டு மிராண்டிக் கயவர்கள் அறிவறியார்
மூட்டிய தீயினுள்ளும் முளைத்துவரும் தமிழென்றே!

அனல்பட்டும் அடிபட்டும் அகன்றகடல் அலைபட்டும்
புனல்பட்டும் பொலிவோடு பொங்கிவரும் தமிழென்றே!

எரிசாம்பல் கிழித்துவந்து எழும்பீனிக்ஸ் பறவையென
விரிவானில் பறக்கின்ற வீறுகொண்ட மொழியென்றே!

முன்னையசெம் மொழிகளது முழுமூச்சும் அடங்கிவிடத்
தன்னே ரிலாதவகை தழைத்தமொழி தமிழென்றே!

படைநடத்தி வந்தாலும் பாழ்நெருப்பை யிட்டாலும்
தடையுடைக்கும் வலுவோடு தரணியிலே தமிழ்வாழும்!

செம்மொழியாய் என்றென்றும் சிம்மா சனத்திருந்தே
அம்மையவள் செய்வாள் அரசு!

– யாழ்ப்பாண பொது நூலகம் தீயிடப்பட்ட
துக்கநாளின் நினைவாக எழுதப்பட்டது.
01 ஜூன் 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழல் நீங்குமோ?
(சந்தக் கலிவிருத்தம்)

விடியுமென்றிரு விழிமலர்ந்துநாம்
விழைந்துநின்றதோர் பொழுதிலே
அடிவருடிகள் அரசகூலிகள்
அணிதிரண்டனர் அழிக்கவே!
கொடியபாதையில் குடிகளாயிரம்
கொன்றுதீர்த்தனர் பாவிகள்
முடிந்ததோரினம் முழுமையாயென
முகமலர்ந்தனர் பகைவரே!

அழுகுரல்களும் அவலவோசையும்
அகிலமெங்கணும் அதிர்ந்திட,
தொழுதகையொடு தெருவிறங்கிநாம்
தொடுத்தபோர்க்கணை ஒடிந்திட,
பொழுதுபோக்கென அகிலதேசமும்
போலிவார்த்தைகள் பகர்ந்திட,
பழுதுபட்டதோர் நிலைதொடர்ந்திடப்
பத்துஆண்டுகள் பறந்ததே!

வருடமெத்தனை வந்துபோயினும்
வலிமறந்துதான் போகுமோ?
நெருடலாய்மன நினைவிருந்துபோர்
நிழலுமென்றுமே நீங்குமோ?
குருதிசிந்திய தமிழ்நிலத்தினில்
கொடிகளாடிட இனியொரு
தருணமொன்றினில் விடுதலைக்கதிர்
தனித்துவத்துடன் ஒளிருமோ?

**– முள்ளிவாய்க்காலில் இனவழிப்பு நடந்து பத்து ஆண்டுகள் நிறைவுற்ற நினைவு நாளையொட்டி எழுதியது,**
**தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளம், மே 2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறுத்த ஜுலை வெளுத்து வரும்!

(எண்சீர் விருத்தம்)

தலைவிரித்து இனவாதம் ஆட்டம் போடத்
 தறிகெட்டு அரசதற்குத் தாளம் போடக்
கொலைவெறியர் கும்மாளக் கூச்ச லோடே
 குறிவைத்தார் தமிழினத்தைக் கூறு போட!
விலையற்ற தென்றுயிர்கள் உடமை யெல்லாம்
 விறகாக்கி நெருப்பிட்டார் இலங்கை மண்ணில்!
குலைநடுங்கிப் போனதுவே உலகும் கூடக்
 குறுகிப்போய்க் கறுத்ததுவே ஜீலைத் திங்கள்!

அடிபட்டு உதைபட்டு வாழும் வாழ்வும்
 அடங்கிமெய் ஒடுங்கிவிடும் அவலப் போக்கும்
குடிமையினைப் பறிகொடுக்கும் துயரக் கேடும்
 குற்றேவற் கொத்தடிமை நிலையும் மாறும்!
முடிசூடித் தமிழ்வாழ்ந்த ஈழ மண்ணில்
 முழுதான அரசொன்று முகிழும் காலம்
விடிவாகும் நல்வாழ்வு தமிழர்க் கங்கே
 வெளுத்துவரும் கறுத்துவிட்ட ஜீலைத் திங்கள்!

– கறுப்பு ஜூலை நினைவு நாளையொட்டி எழுதியது
தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளம், ஜூலை, 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்மையின் உண்மை!

(எண்சீர் விருத்தம்)



ஆர்க்கும் இசையொலிகள்!
ஆடலொடு பாடல்கள்!
அடியார் பெருங்கூட்டம்!
அரண்மனையில் சுகவாழ்வு!

கார்ப்பவனி பல்லாக்கு!
கைகட்டி வாய்புதைத்துக்
காலடியில் ஏவல்கள்!
காமன் தரும்பிணியைத்

தீர்க்கும் மருந்தாகத்
திரையுலகத் தேவதைகள்!
தேடிவர அத்தனையும்
தினமும் அனுபவிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்க்குமிழி வாழ்வென்றும்
நிலையற்ற உலகென்றும்
நிலையாமைத் தத்துவத்தை
நிதமுரைக்கும் ஞானியரே!

சித்தத்தில் ஓர்பொருளும்
சொல்லினிலே வேறுமொன்றாய்ச்
சிந்தை மழுங்கடித்துச்
செல்வம் பெருக்கிடுவார்.

மொத்த நிறுவனமாய்
முடிச்சவிழ்க்கும் தந்திரத்து
வித்தையினால் யாவரையும்
விலைபொருளாய் விற்றிடுவார்!

சொத்துச் சுகபோகச்
சுமையெல்லாம் விட்டெறிந்தே
சுற்றியுள்ள சாக்கடையைச்
சுத்தமிட வந்தஅந்தப்

புத்தனெங்கே சித்தரெங்கே
புனிதஅருட் சோதியெங்கே?
புதிதாய் முளைத்துவிட்ட
போலிகளே முற்றுமிங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருண்ட ஞாயிறு!
(அறுசீர் விருத்தம்)

உயிர்த்த ஞாயி(று) அன்றி லங்கை
  உதித்த ஞாயி(று) இருண்டதேன்
உயிர்கள் நூறு பலப றித்து
  உதிர மோட வைத்ததேன்?
துயரம் நீங்க இறையை நம்பித்
  தொழுது நின்ற மக்களை
வயிர நெஞ்சில் வன்மம் கொண்ட
  வனத்து மாக்கள் மாய்த்ததோ?

வென்று பகையை வீழ்த்த வல்ல
  வீர மற்ற கோழைகள்
என்றும் எதுவும் அறித லற்ற
  ஏழை எளிய மக்களைக்
கொன்று தீர்த்து இன்பம் கண்ட
  கொடிய காட்டுப் பேய்களா?
தின்று போடும் இலைக்கு ஏங்கும்
  தீர மற்ற நாய்களா?

கூற்று வன்போல் வந்து ஆண்பெண்
  குழந்தை பேதம் இன்றியே
போற்றும் புனித ஆல யத்துள்
  புதைத்து விட்ட கொடியரை
ஏற்கும் கடவுள் இருக்கு மென்னில்
  எதற்கு அந்தக் கடவுளே?
மாற்றம் செய்து ஆக்கி வைப்போம்
  மதங்க ளற்ற உலகமே!

– விளம்பரம், ஏப்ரல் 30, 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மடிகிறது மனிதம்!

(கலித்துறை)

விடிகிறது மெதுவாக எனவந்த நம்பிக்கை
 விழலாகவே
வெடிகுண்டில் இறைமன்றில் உயிர்நூறு பலியாகி
 விதையானதே!
படிகிறது இரத்தத்தின் கறைமீண்டும் ஆதிக்கம்
 பலங்கொள்ளவே
மடிகிறது உயிர்பெற்று மறுபடியும் துளிர்விட்ட
 மனிதங்களே!

இடரான மதவாத இனவாத விறகாலே
 எரியூட்டியே
சுடர்கின்ற கொடுந்தீயிற் குளிர்காயும் சதிகாரச்
 சுயநோக்கரால்
தொடர்கின்ற அவலங்கள் தொலைந்தங்கு இனமொன்றித்
 தோள்சேரவே
நடமாடும் நல்லாட்சி பெறல்காணல் எந்நாளந்
 நிலமீதிலே!

– தமிழ் ஆதர்ஸ் இணையத்தளம், ஏப்ரல் 28, 2019

இருண்ட ஞாயிறு, மடிகிறது மனிதம் என்ற இரு கவிதைகளும் உயிர்த்த ஞாயிறு அன்று (ஏப்ரல் 21, 2019) இலங்கையில் கத்தோலிக்க தேவாலயங்கள், சுற்றுலா விடுதிகள் ஆகியவற்றில் நடந்த 9 குண்டுத் தாக்குதல்களில் பல நூற்றுக் கணக்கான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று அப்பாவி மக்கள் பலியான துயரம் நெஞ்சை உருக்கியதால் வடித்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவன்

(நிலைமண்டில ஆசிரியப்பா)

மண்ணிலே நானும் மலர்ந்தநா ளிருந்து
கண்ணிலே வைத்துக் காத்தவென் தந்தையே
நாளெலா முழைத்து நலிந்துடல் வருந்தித்
தோளிலே என்னைத் தூக்கியே சுமந்து
'பாரடா நானே பார்த்திடா உலகினை!
தூரத்தே ஒளிரும் சுடரினைக் கையில்
பற்றிட ஓடும் பயணமே வாழ்க்கை!
வெற்றியாம் கனியை வீழ்த்திடப் புறப்படு
தேடுதல் ஒன்றே திசைகளைத் திறக்கும்
ஓடுநீ காலத் தோடுநீ' யென்றே
தேரினில் இருத்தித் தெருவினில் இழுத்துச்
சாரதி யாகச் தேரினைச் செலுத்தி
மேடும் பள்ளமும் முள்ளும் கல்லும்
காடும் நிறைந்த கடியதோர் வழியைப்
பனிமலர்ப் படுக்கைப் பாதையாய் மாற்றி
நனியெதிர் காலம் நான்பெற வைத்தே
கற்றவர் மன்றில் கலந்துநான் இருந்து
உற்றதோர் புகழ்பெற உறுவழி காட்டித்
தரணியில் எனக்குத் தலைவனாய் ஆனாய்
நிரந்தரம் நெஞ்சில் நீடுவா ழியவே!

– தந்தையர் தினத்தையொட்டி எழுதப்பட்டது,
ஜூன் 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 2:

# வெண்பாச் சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்காமற் போகுமோ பூ!

**காதற் பூ**

கண்வழியே வந்தாள் கலந்தாள் உடலெங்கும்
நுண்ணுயிரி யாய்க்காதல் நோய்தந்தாள் - பெண்மயிலாள்
நோக்கும் விழியாலே நோய்க்கும் மருந்தானாற்
பூக்காமற் போகுமோ பூ!

**கவிதைப் பூ**

ஊறும் உணர்வுகளும் ஓடிவரும் கற்பனையும்
கூறும் மொழியழகும் கொள்ளையிட - வீறுடனே
தூக்கும் அணிநலமாய்த் தோன்றும் கவிதையிலே
பூக்காமற் போகுமோ பூ!

**கடமைப் பூ**

தாய்நாட்டைத் தாய்மொழியைத் தன்னினத்தைத் தான்மறந்து
நாய்போல் அடிமையுறல் நன்றாமோ - ஆய்ந்துணர்ந்து
ஆக்கந் தருஞ்செயல்கள் ஆற்றுவோர் வாழ்வினிலே
பூக்காமற் போகுமோ பூ!

**கருணைப் பூ**

வாழ்வுரிமை யற்றே வறுமைச் சிறைவீழ்ந்தே
தாழ்வுநிலை யுற்றே தவிப்போரின் - ஊழ்வினையைப்
போக்கவழி காட்டும் பொருள்படைத்தோர் நெஞ்சினிலே
பூக்காமற் போகுமோ பூ!

– தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சமே அஞ்சாதே நீ!

**அஞ்சி அடங்காதே!**

தீமைகண்டே பொங்கும் திறனற்று வாய்மூடி
ஊமையென வாழ்வதுமோர் வாழ்வாமோ - ஆமையைப்போல்
அஞ்சி அடங்காதே ஆற்றலுள்ள வேங்கையென
நெஞ்சமே அஞ்சாதே நீ!

**அடங்கி முடங்காதே!**

அடிமையிருள் சூழ அடங்கிமுடங் காதே
விடியும்நாள் வாராமல் போகா - கொடியதொரு
வெஞ்சிறையி லிட்டுன்னை வீழ்த்த நினைத்தாலும்
நெஞ்சமே அஞ்சாதே நீ!

**துணிந்தெழுந்து போராடு!**

சாக்கடையாய் நாறும் சமுதாயச் சீர்கேடைப்
போக்கத் துணிந்தெழுந்து போராடு - தீக்குள்ளே
நஞ்சை எறிவதற்கும் நல்லவற்றைக் காப்பதற்கும்
நெஞ்சமே அஞ்சாதே நீ!

- தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சிலே இட்ட நெருப்பு!

### அன்பை விதை!

அன்பை விதைத்தால் அறுவடையும் அன்பாகும்
அன்பே அகிலத்தை ஆட்சிசெய்யும் - அன்பின்றி
வஞ்சனையை நெஞ்சில் வரித்தால் அதுவேநம்
நெஞ்சிலே இட்ட நெருப்பு!

### பெற்றோரும் பிள்ளைகளும்!

கள்ளமற்ற நெஞ்சோடு காலமெலாம் காப்பரென்ற
உள்ளமொடு பெற்றோர் உயிர்வாழ்வர் - பிள்ளைகளோ
நஞ்சாகிப் போவரெனில் நாதியற்ற பெற்றோர்க்கு
நெஞ்சிலே இட்ட நெருப்பு!

### மனவிரிசல் கோடு!

வண்ணக் கனவுடனே வாழ்க்கைத் துணையுடனே
எண்ண மொருமித்தால் இன்புறலாம் - கண்ணற்றே
கொஞ்சம் மனவிரிசற் கோடு விழுந்தாலே
நெஞ்சிலே இட்ட நெருப்பு!

### சுற்றங்கள் சூழும் சுகம்!

சுற்றங்கள் சூழும் சுகமே இறைவனிடம்
பெற்றவரம் என்றதனைப் பேணிடுவோம் - முற்றுமது
மிஞ்சும் பெருஞ்சுமையாய் மீறிவிட்டாற் காலமெலாம்
நெஞ்சிலே இட்ட நெருப்பு!

- தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவலர்வாய் வைத்த குழல்!

**ஆவலினைத் தூண்டும் கவிதை!**

சிந்தனையிற் பூவிரியச் செந்தமிழிற் சொல்விரிய
வந்தமையும் வண்ண வளம்விரியச் – சந்தமுடன்
ஆவலினைத் தூண்ட அழகாய் வருங்கவிதை
கோவலர்வாய் வைத்த குழல்!

**புன்னகையோடு ஆர்க்குமொலி!**

தத்தும் நடைநடந்து தாவி யெனையணைத்து
முத்தம் கொடுத்தென்னை மூழ்கடித்துச் – சித்தத்தில்
பூவிரியத் தேன்மழலை புன்னகையோ(டு) ஆர்க்குமொலி
கோவலர்வாய் வைத்த குழல்!

**காண்க கனவு!**

காண்க கனவுகளைக் காணுமவை மெய்ப்படுமே
பூண்க உழைப்பென்னும் பொன்னணியை – வீண்விரயம்
ஆவதில்லை உந்தன் அயராத ஊக்கமதே
கோவலர்வாய் வைத்த குழல்!

**நல்மனையும் பூவனமே!**

இல்லம் சிறக்கும் இருள்போய் ஒளிபெருகும்
துல்லியமாய் வாழ்க்கை துலங்கிவரும் – நல்மனையும்
பூவனமே யுள்ளம் புரிந்துவிட்டால் என்றுமது
கோவலர்வாய் வைத்த குழல்!

**கோவலர்வாய் வைத்த குழல்!**

பாவலர்கள் சிந்தைதரும் பாவகையும் பண்சுமந்தே
தேவனடி போற்றும் திருமுறையும் – காவிரிபோல்
நாவலர்தம் நாத்தவழும் நற்றமிழும் நம்செவிக்குக்
கோவலர்வாய் வைத்த குழல்!

– தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவேரி வீடுவருங் காண்!

(நேரிசை வெண்பா)

நீர்வேண்டி யாசிக்கும் நிர்க்கதியில் மக்களெனிற்
பார்போற்றும் நாடாமோ பாரதமே - ஊர்கூடி
நீவேறு நான்வேறென் றில்லாது போரிட்டாற்
காவேரி வீடுவருங் காண்!

## காவேரி வீடுவருங் காண்!

(பஃறொடை இன்னிசை வெண்பா)

நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமாய் முன்னாளிற்
சீர்பெற் றுயர்ந்திருந்த செந்தமிழர் நாட்டிற்
பயிர்விளைக்கும் வாழ்நிலங்கள் பாழ்நிலங்க ளாக,
உயிர்காக்கும் ஏழை உழவோர் வறுமையிலே
உண்ணுதற்கு மின்றி உறங்க வழியின்றிக்
கண்ணெதிரே செத்துவிழல் கண்டாலும் கண்மூடிக்
கொண்டிருந்தே ஆள்வோரின் கோட்டைக் கதவுகளைத்
தட்டித் திறக்கத் தமிழர்நாம் வேற்றுமையை
வெட்டி யெறிந்துவிட்டு வெற்றிபெற ஓர்குடைக்கீழ்ச்
சாவே வரினுமுளம் சாயாமற் போரிட்டாற்
காவேரி வீடுவருங் காண்!

– தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்றலே நீவந்து செப்பு

பார்த்த ஒருகணத்தில் பல்லா யிரந்தடவை
கூர்த்தவிழி வேல்கொண்டு குத்தியவள் - ஆர்த்தவலி
கொன்றுவிடும் முன்னாலே கொண்டணைத்துக் கொள்வாளோ
தென்றலே நீவந்து செப்பு!

சிந்தை சிதைந்துவிடச் செய்கை தடுமாற
வந்துற் றெனைக்கொல்லும் நோயானாள் - சொந்தமென
ஒன்றி உயிர்காக்கும் ஓர்மருந்தென் றாவாளோ
தென்றலே நீவந்து செப்பு!

பொன்னுருக்கி வார்த்தெடுத்த பொங்குமிள மங்கையவள்
கன்னல் மொழிபேசிக் காதலித்தாள் - என்னுயிரைத்
தின்றுவிட்டுச் சென்றாளே தேடி வருவாளா
தென்றலே நீவந்து செப்பு!

- தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்றொடர் வெண்பா

2015 செப்டம்பரிலிருந்து தில்லைத் தமிழ்ச் சங்கத்தின் இணையத் தளத்தில் சொற்றொடர் வெண்பா என்ற தலைப்பில் ஒவ்வொரு கிழமையும் கொடுக்கப்பட்ட சொற்றொடரை வைத்து இயற்றப்பட்டு அவ்விணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட வெண்பாக்கள்.

### அச்சம் விடு !

அச்சத்தால் ஆவதென்ன, அச்சமில்லை என்றெதற்கும்
அச்சப் படுவதற்கே நீயஞ்சு! - அச்சமுன்னைச்
சூழ்ந்துவரும் தீபோலச் சுட்டெரிக்கும், தொல்லைகள்
வீழ்ந்துவிடும் அச்சம் விடில்!

### வாடும் உயிரெலாம் வாழ்த்தும் !

தேடும் பொருள்கொண்டு தேர்ந்தே அறஞ்செய்க
வாடும் உயிரெலாம் வாழ்த்தவே - நாடும்
நலம்பெறுமே உன்போலும் நல்லோர் பணியால்
நிலம்பெறுமே நன்மை நினை!

### கயல்பாயும் காட்சி கவின்

கன்னற் கனிச்சோலை கானகமாய்த் தோட்டங்கள்
பன்னீர் மலர்சொரியும் பூவனங்கள் - செந்நெல்
வயலதனில் நீர்பாய வாளையுடன் நீந்தும்
கயல்பாயும் காட்சி கவின்*. (*கவின் - அழகு)

### ஊற்றிக் கொடுத்தான் இறை !

கண்ணுடையார் கண்டு களிப்புறவே காட்சியெனில்
புண்படுவர் காட்சிப் புலனற்றோர் - என்பதனாற்
காற்றின் அசைவுடனே காதினிக்கும் ஓசைதனை
ஊற்றிக் கொடுத்தான் இறை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோயிலில் இல்லை இறை!**

கோயிலில் இல்லையிறை கோபுரத்தும் கீழுள்ள
வாயிலிலும் இல்லை. வறுமையிலும் - நோயினிலும்
நொந்து வருந்தி நொடிந்தோர் அவரிடத்தே
வந்துறைவான் ஈசன் வணங்கு.

**பஞ்செனவே போகும் பறந்து!**

ஆர்ப்பரித்தே மேலோங்கி ஆழியது வந்தாலும்
வேர்பதித்த பேராலம் வீழாதாம் - நேர்வழியில்
நெஞ்சம் நிலையாக நிற்குமெனில் துன்பமெலாம்
பஞ்செனவே போகும் பறந்து!

**நங்கையவள் நாவுரைத்த நாள்!**

வேம்பும் இனித்திடக்காண் வெங்கனலும் நீர்த்திடக்காண்
பாம்பின் விடமும்பால் ஆகிடக்காண் - பூம்புனல்போற்
பொங்கிடக்காண் உன்மனமே பொன்னிதழாற் காதலினை
நங்கையவள் நாவுரைத்த நாள்.

**போதுமெனு முள்ளந்தான் பொன்செய் மருந்து!**

பெருஞ்செல்வம் தேடிடும் பேராசை யுன்னைக்
கருஞ்சிறையில் வைத்தே கரைக்கும் - இருப்பதே
போதுமெனு முள்ளந்தான் பொன்செய் மருந்தாகும்
ஓதியதோர் வேதம் உணர்.

**வேசம் தரித்த விலங்கு!**

காட்டில் விலங்கு கடவுள் படைத்தபடி
நாட்டில் மனிதரேன் நஞ்சானார் - வேட்டுவைக்கும்
நாசக் குணத்தால் நாய்நரிபோ லாகுமவர்
வேசம் தரித்த விலங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடுக்கச் சுரக்கும் உறவு !**

உள்ளம் சுரந்துபெரும் ஊற்றாகி அன்பென்னும்
வெள்ளம் பெருகப்போம் வேற்றுமைகள் - அள்ளி
எடுக்கச் சுரக்கின்ற ஊருணியாய் அன்பைக்
கொடுக்கச் சிறக்கும் உறவு!

**தாகம் தணியும் வரை !**

மானென்பர் கான மயிலென்பர் கண்ணிரண்டும்
மீனென்பர் தேகமொளிர் மின்னலென்பர் - தேனென்பர்
மோகத்தால் ஆடவர்கள் மூழ்கடிப்பார் நங்கையரைத்
தாகம் தணியும் வரை.

**கல்லறையும் சொல்லும் கவி !**

வான்பொழியும் வண்ணத்தில் வார்த்துத் தமிழ்க்கவிதை
நான்தருவேன் வாழ்கின்ற நாள்வரைக்கும் - யான்துயிலும்
கல்லறையும் சொல்லும் கவிதை தமிழாலே
வெல்லவரும் கூற்றினையும் வென்று!

**துட்ட விலங்குகளே மேல் !**

கண்மூடிக் கண்திறந்து காணுமுன்னே இவ்வுலகில்
எண்ணற்றோர் ஆற்றும் இழிசெயலால் - மண்ணுக்குள்
வெட்டிப் புதைக்கின்றார் வேரோடு மானுடத்தைத்
துட்ட விலங்குகளே மேல்!

**கல்வியினால் உற்ற பயன் !**

நுண்ணிய நூல்பலவே கற்றாலும், கற்றதனால்
எண்ணியதைப் பெற்றாலும் ஏற்றபடி - கண்ணியத்தைக்
கற்றுக் கடமைசெயக் கல்லாதான் கல்வியினால்
உற்றபயன் உண்டோ உரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பழுதின்றி வாழும் தமிழ்!**

பற்றுடன் பாலோடு பைந்தமிழைத் தாயூட்டக்
கற்றலில் உண்டோர் களிப்பெனலாம் - பெற்ற
பொழுதிருந்தே செந்தமிழை ஊட்டி வளர்த்தால்
பழுதின்றி வாழும் தமிழ்!

**யாவர்க்கும் ஈவான் இறை!**

மனமுவந்து யாவர்க்கும் ஈவான் இறைவன்
எனமகிழ்ந்து ஏமாந் திருப்போர் - கனவுலகில்
காலத்தைப் போக்கிக் கடமையினை ஆற்றாத
கோலத்தைக் கொள்வர் கொடிது.

**வால்பிடித்து வாழ்கின்றவர்!**

உலகினில் ஈடில்லை உன்னைப்போல் என்பார்
தலையின்மேல் தாங்கித் திரிவார் - நிலம்வீழ்ந்து
கால்பிடிப்பார் வாழ்த்திக் கடவுள்நீ என்றுரைப்பார்
வால்பிடித்து வாழ்கின் றவர்!

**கல்லில் வடித்த சிலை**

கல்லில் வடித்த சிலைசொல்லும் சிற்பிதிறன்
சொல்லில் வடித்த கவிசொல்லும் - நல்ல
கவிஞன் திறத்தினையே. காலமெலாம் இந்தப்
புவிசொல்லும் போற்றிப் புகழ்ந்து!

**கற்க குலத் தொழில்**

பாரிற் தொழில்நுட்பம் பாங்காய் வளர்ந்திருக்க
வேரில் விளைந்திருக்கும் வேற்றுமைக்கு - நீரிறைக்கக்
கற்க குலத்தொழில், கற்றால் நலமென்ற
சொற்றொடர் வேண்டுவதோ சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதுவெனும் மீளா விருள்!**

மிடிமை* வறுமை மிரட்டும் பகையாம்
கொடியவிருள் ஓர்நாளில் நீங்கும் – விடியா
மதுவெனும் மீளா விருள்வீழ்ந்தார்க்(கு) எந்நாள்
புதுவாழ்வு மீளும் புகல். (*மிடிமை – அறியாமை)

**கற்றிருந்தும் காசில்லா மாந்தர்!**

கற்றார் எனவறிந்தும் காசில்லா மாந்தரெனில்
உற்ற மதிப்பில்லை ஊருலகம் – கற்றறியாப்
பாமரரின் பைக்குட் பலமாய்ப் பணமிருந்தாற்
சாமரமும் வீசும் அவர்க்கு.

**பாகல் விதைக்கப் பலாமுளைக்கும் விந்தை!**

பாகல் விதைக்கப் பலாமுளைக்கும் என்றிவைகள்
வேதம் விளைவிக்கும் விந்தையென்பர் – பேதமையாய்ப்
பொய்யை விதைப்பார்கள் போலிகளை ஆக்கிவைப்பர்
மெய்யைக்கீழ் வீழ்த்தி மிதித்து.

**கல்வியே செல்வம்!**

கல்வியே செல்வமென்பார் கற்போர் தலைநீங்காச்
செல்வமது, சேர்ந்திருப்போர் வாழ்க்கையிலே – நல்வழியைக்
காட்டும், பிறர்க்குக் கொடுத்தாலே அச்செல்வம்
நீட்டும் அறிவை நிறைத்து.

**உன்னை உயர்த்தும் உணர்!**

மண்ணில் விளைந்த தளிர்விரிந்து நீள்மரமாய்
விண்ணைத் தொடமுயலும் விந்தையைப்போல் – எண்ணமதில்
அன்பை விதைத்தால் அறம்தளிர்த்து இவ்வுலகில்
உன்னை உயர்த்தும் உணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்ணில் விரிந்த கனவு!**

கட்டழகு கொண்டமங்கை காதலிலென் கன்னத்தில்
இட்டதொரு முத்தம் எனைமயக்கத் - தொட்டுவந்த
கண்ணில் விரிந்த கனவும் கலைந்துவிட
மண்ணில் விழித்தேன் மலைத்து.

**விண்ணில் எழுந்த விளக்கு!**

விண்ணில் எழுந்த விளக்கெனவே மாந்தர்தம்
எண்ணம் கவிந்த இருளகற்றித் - திண்ணமொடு
வாழ வழிகாட்டி வைக்கின்ற கல்வியதன்
ஆழ மறிதல் அறம்!

**உழைப்பு!**

பிழைப்பின் வழியறியாய், பேரதிட்டம் கூடித்
தழைக்கும் பெருஞ்செல்வ மென்பாய் - உழைப்பொன்றே
இல்லாமை நீக்கி யிருளகற்றும் வாழ்வினிலே
நல்லாறு* காட்டுமென நம்பு! (*நல்லாறு - நல்வழி)

**வெண்பா விதியெலாம் கல்!**

பாவின் இலக்கணத்திற் பண்பான கற்புநெறி
மேவி யமைந்தபா வெண்பாவே - கூவிநிதம்
என்பாவே என்றே எதையெதையோ தீட்டாமல்
வெண்பா விதியெலாம் கல்!

**கற்பனை வாழ்வு!**

வெள்ளித் திரைதோன்றும் விண்மீன்கள் போல்வாழ்வில்
கொள்ளையழ கோடுதுணை கூடுமெனத் - தள்ளாத
கற்பனையில் காணும் கனவுகள் கண்மறைக்க
நிற்கதியில் நிற்பார் நிதம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நகைப்பாள் அவள்!**

என்னவள மில்லையென என்னழகைத் தள்ளிவைத்து
இன்னொருத்தி பின்சென்(று) இழிவுறுவாய்! - மின்னுமொளிச்
செந்தமிழ்ப் பாவையவள் சொல்வாள், நகைப்பாளெம்
சிந்தையில் கொள்ளல் சிறப்பு!

**கல்லடிக்குக் காய்த்த மரம்!**

கல்லடிக்குக் காய்த்த மரத்துக்கே மாண்புண்டு
சொல்லடிகள் கண்டுள்ளம் சோராதே - வல்ல
துணிவோடு நன்றாய்ச் செயலாற்றில் வானும்
பணியாதோ உன்காலிற் பார்.

**தோற்றுத் தொலையும் துயர்!**

வருந்துன்பங் கண்டு வருந்தாதே சின்னத்
துரும்பெனவே துன்பத்தை யெண்ணில் - மருந்தாகும்
காற்றில் மறையும் கதிர்பட்ட வெண்பனிபோல்
தோற்றுத் தொலையும் துயர்.

**எண்ணிக்கை ஏற்றமில்லை!**

எண்ணிக்கை ஏற்றமில்லை என்பார் அதுவுண்மை
எண்ணம் உயர்வதுவே ஏற்றமென்போம் - எண்ணற்ற
விண்மீனின் மின்னுமொளி வெள்ளிநிலா வீசுகின்ற
தண்ணொளிக்(கு) ஈடாமோ தான்.

**தீயமது தீமை தரும்!**

உன்னுயிர் தான்குடிக்கும், உற்ற மனைமக்கள்
பின்னுமுள நட்பும், பிறவுறவும் - முன்பயின்ற
ஆயகலை, ஆற்றல் அனைத்தும் குடிக்குமிந்தத்
தீயமது தீமை தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்டில் முடியும் கதை!**

தத்தமது தெய்வங்கள் தாமேமெய்த் தெய்வமென்றுன்
மத்தம்* தலைக்கேறி மானுடத்தைக் - கொத்தாக
வேட்டுவைத்துக் கொன்று வெறியாடல். துர்மரணக்
காட்டில் முடியும் கதை. (* உன்மத்தம் - வெறி. பைத்தியம்)

**பூவுலகில் என்றும் புதிர்!**

கொள்ளை அழகாகக் கோடியின்பம் எண்திசையும்
உள்ளத்தை ஈர்த்தே உலுக்குவதும் - அள்ளியுயிர்
காவுகொள்ளும் பேரனர்த்தம் கட்டின்றி மீறுவதும்
பூவுலகில் என்றும் புதிர்.

**கெடுமதியோர் செய்கை கொடிது!**

கல்நெஞ்சர் காமுகர்கள் காடை மதவெறியர்
புல்லர்கள் வாழும் புலத்தைவிடக் - கொல்லும்
கடும்புலி வாழ்ந்திடும் காடுமிக நன்றாம்
கெடுமதியோர் செய்கை கொடிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்றொடர் வெண்பாக்கள்

எழுத்தாளர் அகில் அவர்களின் தமிழ் ஆதர்ஸ்.கொம் இணையத் தளத்தில் வெளிவந்த சொற்றொடர் வெண்பாக்கள்

### அல்லல் களைவ தறம்!

கோயிலென்றும் கொண்டாட்டம் கூத்தென்றும் அள்ளியள்ளி
ஆயிரமாய்க் கொட்டல் அறமல்லத் - தீயினைப்போற்
கொல்லும் வறுமைக் கொடும்பிணியில் வீழ்ந்தோர்தம்
அல்லல் களைவ தறம்!

### அறிதற் கரிய பொருள்!

அண்டம் அளந்திடலாம் ஆன்றபொருள் தேர்ந்திடலாம்
கண்டம் கடந்தேமெய் கற்றிடலாம் - விண்ணை
மறிகடலை ஆய்ந்திடலாம் மங்கையர்தம் உள்ளம்
அறிதற் கரிய பொருள்!

### அதனாலே என்றும் அழிவு!

பலமலரில் தேன்நுகர்ந்து பாடிவரும் வண்டாய்க்
குலமகளாம் தாமரையைக் கூடார் - நலமில்
பொதுமகளிர் மேற்காமப் பொய்மயக்கில் வீழ்வார்
அதனாலே என்றும் அழிவு!

### இன்தமிழாற் பாடல் இயற்று!

மண்மீட்புப் போரில் மரணம் அரவணைக்க
விண்பூத்து விட்டமா வீரருக்கே - கண்வார்க்கும்
பன்னீரில் தோய்த்தெடுத்துப் பாமாலை சூட்டுதற்கே
இன்தமிழாற் பாடல் இயற்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முறையோ இதுவே மொழி!

நன்நெறியைக் காட்டுகின்ற நாட்டின் மதங்களையே
புன்நெறியாய் ஆக்கிடுவார் போதையிலே - இன்னும்
இறைவன் பெயரால் இழிசெயல்கள் ஆற்றல்
முறையோ இதுவே மொழி!

### நீட்டித்து நிற்கும் நிலைத்து!

தன்முனைப்பைத் தற்செருக்கைத் தானென்ற ஆணவத்தை
முன்நிறுத்தி வாழ முனையாதே - அன்புநெறி
நாட்டிவைக்கும் நற்செயலே நாடறிய நின்சிறப்பை
நீட்டித்து வைக்கும் நிலைத்து!

### நீர்மேலெழுந்த நெருப்பு!

பச்சைக் கொழுந்துகளைப் பாலியல் வன்புணர்வின்
இச்சைக்(கு) இரையாக்கும் ஈனரெலாம் - அச்சமின்றி
ஊர்மன்றிற் பேரோ(டு) உலவுவார்க் கெல்லாமே
நீர்மே லெழுந்த நெருப்பு!

### நிலையாது நீத்து விடும்!

ஏற்புடைய நல்வழியில் ஈட்டாது இவ்வுலகம்
தூற்றும் வகையிற் தொகுத்தபொருள் - காற்றிற்
கலைகின்ற மேகம்போல் கண்ணெதிரே தேய்ந்து
நிலையாது நீத்து விடும்!

### பெரியோர் மதியாப் பொருள்!

அதிகாரம் ஆளம்பு ஆட்சியிவை சேர்ந்தால்
குதியாட்டம் போட்டடிப்பார் கொள்ளை - மதியார்
அரிதோர் பொருளதன்றே ஆர்ப்பரிப்பார் எல்லாம்
பெரியோர் மதியாப் பொருள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்காடே வாபக்கம் பூத்து!

போர்க்காடு மூடிப் புதைத்துவிட மக்களெலாம்
தேர்க்காலின் கீழ்ப்பட்ட தேரைகள்போல் - சாக்காடும்
நோக்காடும் கண்டே நொடிந்ததெலாம் போதுமினிப்
பூக்காடே வாபக்கம் பூத்து!

பேயாட்சி செய்யப் பிணந்தின்னும் சாத்திரமாய்
ஓயாத பேரவலம் ஓங்கிவிடத் - தேயாதே
தீக்காடாய் மாறிவிட்ட தீந்தமிழர் தாய்நிலமேல்
பூக்காடே வாபக்கம் பூத்து!

## புல்லறிவு காட்டி விடும்!

பத்தரும் கோடி பணபலமும் கோடிபெறச்
சித்தனென்ற வேடம் சிலர்புனைவார் - எத்தனைநாள்
செல்லுமவ் வேடத்தார் செய்கையே ஓர்நாளிற்
புல்லறிவு காட்டி விடும்!

## புல்லிதழ் பூவிற்கு முண்டு!

சுற்றத்தின் மேற்குற்றஞ் சுட்டிக் குறைகாணில்
இற்றறுந்து நட்புறவு இன்னலுறும் - உற்றுணர்க!
கல்லுள்ளும் ஈரம் கசிந்திருக்கும் கீழான
புல்லிதழ் பூவிற்கு முண்டு!

## சொல்லாத சொல்லொன்றைச் சொல்!

சொல்லுமொரு சொல்லினிலே சொட்டுகின்ற தேனுமுண்டு
கொல்லுவது போலுமொரு கூற்றுமுண்டு - அல்லாத
சொல்லால் உயிர்பறித்தல் வேண்டாம் பிறர்பழித்துச்
சொல்லாத சொல்லொன்றைச் சொல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொல்லில் வடித்த சுடர்!**

சொல்லை எழுத்தைச் சுகிக்கும் பொருள்நிதியைப்
பல்லா யிரமாண்டுப் பண்பாட்டை - நல்லறிஞன்
தொல்காப் பியன்படைத்தான் தொன்மை இலக்கணமோர்
சொல்லில் வடித்த சுடர்!

**தீயமது தீமை தரும்!**

உன்னை அழித்துவிடும் உன்குடியைத் தான்கெடுக்கும்
கண்ணை மறைக்கும் கலங்கவைக்கும் - எண்ணமதில்
ஞாயத்தை நீதியை நல்லறிவைப் போக்கிவிடும்
தீயமது தீமை தரும்!

**உள்ளத்தில் தித்திக்கும் தேன்!**

சுந்தரப் பூவிதழ்வாய் சிந்தும் மழலைமொழிச்
செந்தூர வண்ணச் சிறுதேரைப் - பைந்தமிழைப்
பிள்ளைக் கனியமுதை அள்ளிமுத்தம் ஈகையிலே
உள்ளத்தில் தித்திக்கும் தேன்.

**உற்றபய னுண்டோ உரை!**

மானம் அழிய மனைவிமக்கள் தள்ளிவிட
ஈனமுற்றே நாய்போல் இழிவடைய - வானமிழ்தாய்ப்
பெற்றாயோ? ஏன்மதுவின் போதையிலே மூழ்கிவிட்டாய்
உற்றபய னுண்டோ உரை!

**வானுயர ஓங்கும் வளம்!**

ஊற்றின் பெருக்காலே ஊருணியும் நீர்நிறைக்கும்
சேற்றில் விழுந்தாலே செந்நெல்லாம் - ஆற்றலினைத்
தானுணர்ந்து கொண்டாலே தள்ளிநிற்கும் ஊழ்வலியும்
வானுயர ஓங்கும் வளம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விழியிலார்க் கேது விளக்கு!

அன்பறியார்க் கேது அருளுடைமை ஆன்றவிந்த
பண்பறியார்க் கேது பணிவுடைமை - தன்தாய்
மொழியறியார்க் கேது முகவரியாம் காணும்
விழியிலார்க் கேது விளக்கு!

### விழியெனக் காப்போம் விழித்து!

செழித்திருந்த நாகரிகச் செம்மாந்த வாழ்க்கை
கொழித்ததனைக் கீழடியில் கண்டோம் - மொழியின்
வழிவழியே வந்த வரலாற்றின் சான்றை
விழியெனக் காப்போம் விழித்து!

### என்சொல்லு மென்நா இனி!

பச்சைத் தளிரினையும் பால்வடியும் பிஞ்சையும்தம்
இச்சைக் கிரையாக்கி இன்புறுவோர் - நச்சரவாய்
வன்செயலே கொள்வார்கள் வாழ்வின் இலட்சியமாய்
என்சொல்லு மென்நா இனி!

### இழந்தார் எனப்படுதல் இல்

ஈட்டிவைத்த தெல்லாம் இழந்திடலாம் ஓர்நாளில்
தேட்டமாய் உள்ளபொருள் தேய்ந்திடலாம் - நாட்டம்
உளங்கொள்ள நல்லறிவை ஊருலகுக்(கு) ஈவோர்
இழந்தார் எனப்படுதல் இல்.

### புகழென்னும் போதைப் பொருள்

நேர்வழியை மாற்றிவிடும் நின்மதியை நீக்கிவிடும்
தார்மீக எண்ணம் தகர்த்துவிடும் - நேர்மைத்
தகவான போக்கைத் தடம்மாற்றி வைக்கும்
புகழென்னும் போதைப் பொருள்.

### கல்வி அழகே அழகு

வகுத்துணர்ந்து, வாழும் வகையறிந்து யாவும்
பகுத்துணர்ந்து காணுகின்ற பண்பைப் - புகுத்திவைத்தே
வல்லதொரு ஆளுமையை வார்த்து வளர்த்தெடுக்கும்
கல்வி அழகே அழகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலையாது காத்தல் கடன்!**

நேரிய வாழ்வை நெறிப்படுத்தும் கொள்கைகளாம்
சீரியநம் முன்னோரின் செம்மரபை - நீரில்
நிலையற்ற நீர்க்குமிழ்போல் நீங்காது வாழ்வில்
கலையாது காத்தல் கடன்!

**மான முடையார் மதிப்பு!**

நேர்வழியில் ஈட்டா நிறைபொருளைப் பொய்வழியில்
பார்பழிக்கப் பெற்ற பதவிகளை - பேர்புகழை
ஈனமாய் எய்துவதை என்றைக்கும் ஏற்பதில்லை
மான முடையார் மதிப்பு!

**புற்பனி பற்றுவிட் டாங்கு!**

கொள்கை முரண்பாடும் கொள்ளும் மணமுறிவும்
உள்ளம் உடைக்கும் உரசலெலாம் - தெள்ளெனவே
உற்றபடி பேசி உரையாடில் நீங்கிடுமே
புற்பனி பற்றுவிட் டாங்கு!

**துன்புற்று வாழ்தல் அரிது**

எப்போதும் மானிடமே ஏற்றமென்ற கோட்பாட்டை
ஒப்பற்ற வண்ணம் உரைக்கின்ற - முப்பாலைப்
பின்பற்றிச் செல்கின்ற பேராண்மை கொண்டோர்கள்
துன்புற்று வாழ்தல் அரிது.

**புலியென்றும் தின்னுமோ புல்!**

கொள்கையிலே பற்றைக், குலையாத நெஞ்சுரத்தைத்,
தெள்ளியநேர் பாதையினைத் தேர்ந்தெடுத்தோர் - எள்ளல்*
மலிந்த பொருள்தேடி மண்டியிடு வாரோ
புலியென்றும் தின்னுமோ புல்!

(*எள்ளல் - இழிவாகப் பேசுதல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 3:
# கவியரங்கக் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனவெளி மேகங்கள்

பொதிகைமலைத் தென்றலின்று
புலம்பெயர்ந்து வீசுகின்ற
பொன்மாலைப் பொழுதுதனிலே
சுதிசேர்த்த இசைமழையிற்
சுந்தரத் தமிழ்மயில்கள்
சுழன்றாடும் வேளைதனிலே
விழிபூத்த வனமாகி
விசைகொண்ட உளமாகி
விருந்துண்ணும் அவையோர்களே!
மொழிதந்த உறவோடு
வழிவந்த மரபோடு
வணங்கினேன்! வாழ்கதமிழே!

முன்னைமொழி யாவைக்கும்
மூத்தமொழி யானதமிழ்
மூவேந்தர் வளர்த்தமங்கை
மின்னலொளி வீசுவாள்
மன்னு புகழ்சூடுவாள்
மாறாத இளமைகொண்டாள்!
வேங்கடம் குமரியென
விரிந்த பேரெல்லையுள்
வீசுகின்ற காற்றாகினாள்
ஓங்குபுகழ் நூல்களைத்
தாங்குமவள் தாள்களை
நீங்குமோ எனதுமனமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தான இலக்கியம்
சொத்தாகத் தந்தவள்
முப்பாலாய்த் தித்திப்பவள்
வித்தான மாவீரம்
விளைகின்ற நிலமானாகி
விறல்வேங்கைத் திறல்கண்டவள்
தத்துவம் வித்தகம்
ததும்புமோ ரிலக்கணம்
தரணிக்கு முதற்தந்தவள்
எத்தனை பெருமைகள்
என்அன்னைத் தமிழுக்கே
எதைஆள்வேன் சொல்லுமனமே!

வள்ளுவன் தந்தகுறள்
வெள்ளத்தை உள்ளத்துள்
அள்ளியது போதவிலையே!
கள்ளொழுகும் கம்பனின்
கவிமலரைக் கரம்பற்றிக்
களித்ததும் முழுமையிலையே!
நெஞ்சத்தை ஈர்க்கின்ற
செஞ்சொற் சிலம்போடு
கொஞ்சியுது நிறையவிலையே!
கொஞ்சமோ பெருநிதியம்
வஞ்சிமகள் காலடியில்
வசமாக்க வழிசொல்மனமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியொடு சுவைசொட்டும்
முத்தான கவிகொண்டு
முடிசூடிப் பார்க்கவிலையே!
எத்திக்கும் ஏற்றும்நல்
எட்டுத் தொகைகற்க
என்காலம் போதவிலையே!
பத்துப் பெரும்பாட்டும்
சித்தர் திருப்பாட்டும்
பதிந்துவரக் கூடவிலையே!
கொத்துக்கொத் தாகஅவள்
குவித்துள்ள புதையல்களைக்
கொள்ளும் வழிகூறுமனமே!

களவியலும் கற்பியலும்
கலந்துதரும் அகநூலிற்
களிப்பெய்தக் காலமிலையே
நளவெண்பா நாலடியார்
நாலாயிரம் பனுவல்
நயம்கண்டு தெளியவிலையே
பழமுதிரும் சோலையாய்
பரணியும் குறிஞ்சியும்
பள்ளு முலாவுமென்றே
வளம்பொங்கு மிலக்கியம்
வலம்வந்து பார்க்கவே
வாழ்நாளும் போதவிலையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டக்கூத் தன்ஔவை
உயர்காள மேகமென
ஒப்பற்ற புலவரோடும்
மெட்டோடு இசைப்பாக்கள்
மட்டற்ற வகைதந்த
மெய்ஞானப் புலவரோடும்
சுட்டபொற் சுடர்போலச்
சுந்தரக் கவிதந்த
தற்காலப் புலவரோடும்
வெட்டவெளி தனிற்கூடி
விரல்கோத்து நடைபோட்டு
வியந்துள்ளம் நிறையவிலையே!

வரவேண்டும் நானென்றும்
பரவுகின்ற தெய்வமின்று
வரமாக ஒன்றுகேட்பேன்
தரவேண்டும் பிறவாமை
எனவேண்டேன், பலபிறப்புத்
தந்தருள்க எனவேண்டுவேன்!
இறக்கின்ற போதெல்லாம்
பிறக்கின்ற வரம்கேட்பேன்!
இனியதமிழ்த் தாய்மடியிலே
பிறந்து தமிழ்க்கருவூலம்
திறந்துஒவ் வொன்றாய்மெய்
மறந்ததனில் மனம்தோயவே!

**– 08 ஜலை 2017, அண்ணாமலை கனடா வளாக மாணவர் அமைப்பு வழங்கிய முத்தமிழ் விழாக் கவியரங்கில் வாசிக்கப்பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைக் கதம்பம்

**தாய், தமிழ், தலைவன்** (கட்டளைக் கலிப்பா)

என்னை இத்தகு மன்றிடை வைக்கவும்
ஏற்றம் மிக்கதோர் மானிட னாக்கவும்
தன்னைத் தீயிடை நெய்யெனப் பெய்தவென்
தாயின் செம்மலர்ச் சீரடி போற்றினேன்!
மின்னற் கீற்றினைப் போலொளிர் வீசுவாள்
மீட்டும் இன்னிசை யாய்ச்சுவை யூட்டுவாள்
அன்னை செந்தமிழ் ஆளவும் வேண்டினேன்
ஆடல் வல்லவன் தாளிணை போற்றியே!

**அவையடக்கம்** (கட்டளைக் கலிப்பா)

அறிஞர் ஆர்வலர் ஆயக லைகளில்
ஆழ்ந்த ஆளுமை ஆற்றலும் கொண்டுளோர்
செறிந்த இப்பெரு மன்றைவ ணங்கினேன்!
செல்வ மானநம் செய்யுள் மரபதன்
நெறியைக் கேட்கவும் நின்றதைக் காக்கவும்
நெஞ்சு வைத்துளீர் நாளைந மக்கொரு
வறிய தோர்நிலை என்பதும் இல்லையே
வண்ட மிழ்வளம் வற்றுவ தில்லையே!

**ரொறொன்ரோ தமிழ்ச் சங்கம்** (கட்டளைக் கலித்துறை)

சிந்திக் கிடக்கின்ற செந்தமிழ்த் தேனைத் திரட்டியள்ளிச்
சிந்தை யெனும்புது மொந்தையிற் சேர்த்துச் சுவையுடனே
வந்தே யிருப்பவர் நெஞ்சினில் வார்த்துப் பசியகலத்
தந்தே வரும்ரொறொன் ரோதமிழ்ச் சங்கமும் வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வென்பது வரம்** (சந்தக்கலி விருத்தம்)

பெற்றாயெனில் வெற்றிக்கனி
பெரும்போதையில் நனைவாய்
உற்றாயெனில் ஒருதோல்வியை
உயிரோடுடல் தளர்வாய்
முற்றும்தரை மட்டம்என
முடிவாய்நிதம் அழுவாய்
தெற்றுத்தெளி வடையாய்விடை
தெரியாய்மட நெஞ்சே!

வறிதோர்நிலை பெரிதேதுயர்
வாழ்வோஇது எனவே
வெறிதாகிடும் வெறுப்பேறிடும்
வேம்பாகிடும் உலகே!
பிறிதோர்பயன் இலவேயெனப்
பிதற்றல்விடு மனமே
அறிவாயொரு வழிமூடினால்
அடுத்தோர்வழி வருமே!

வீழ்ந்தாலெழும் வேகம்பெறு
விடியும்ஒளி தெரியும்
சூழ்ந்தாலிருள் நீங்கும்உணர்
சுடர்ஞாயிறு விரியும்
ஊழ்வென்றிட முடியும்உன(து)
உயிர்போக்கிடல் தவறே!
வாழ்வென்பது வரமென்றறி
வழியாயிரம் உளதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அழகு** (வெண்கலிப்பா)

கரியமழை முகிலெனவே கமலமுகம் மறைத்தபடி
விரியவரும் குழல்அலையாய் விரவிநிற்ப தோரழகு!
மங்கையவள் குழல்சரிய மறுபடியும் மறுபடியும்
செங்காந்தள் விரல்கோதிச் சீர்செய்தல் மேலழகு!
அவிழ்த்தகுழல் அழகெனினும் அள்ளியதைப் பின்னிவைத்துக்
குவித்துமலர்க் கொண்டையிட்டால் கொள்ளையிடும் பேரழகு!
கன்னியவள் கூந்தலெந்தன் கவிதையிலே கருவடைந்து
சொன்னதுவே சேதியிந்த வாறு.

**கரவொலி** (நான்கடித் தரவு கொச்சகக் கலிப்பா)

கரவொலியாம் எனவொருசொல்
கருவடைந்த கவிதையிது
கரவொலியே கலந்துபெறாக்
காற்றுவரும் சபையுமெது
கரவொலியும் பலபொழுது
கணக்கின்றி வருவதில்லை
கரவொலியும் சிலபொழுது
கருத்தோடு ஒலிப்பதில்லை!

கரமொலித்துக் குரலெழுப்பிக்
கதைப்பவனைக் கலைப்பதுண்டு
கரமொலித்துக் கலைத்தாலும்
கணக்கெடுக்கா மனிதருண்டு
கரவொலியைக் காணாமற்
கவலையுறும் மனங்களுண்டு!
கரமொலித்து இடைக்கிடையே
கைகொடுத்தால் மகிழ்ச்சியுண்டு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரவொலியைப் பெறுவதற்குக்
காத்திருப்போர் ஏராளம்
கரமிணைத்து ஒலிப்பதிலும்
காட்டார்கள் தாராளம்
கரவொலியில் புகழடையக்
கடுமுழைப்பு வரவேண்டும்
கரவொலியில் திழைப்பவரும்
கருவமதை விடவேண்டும்!

– 2017, மே மாதம் ரொறொன்ரோ தமிழ்ச் சங்கத்தில் கனடாத்தமிழ்க் கவிஞர் கழகக் கவிஞர்கள் பங்குபற்றிய கவியரங்கத்தில் வாசிக்கப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரையாள் வந்தாள் சிறப்பாக!

எந்தைதாய் போற்றியென்னுள் எழுந்திருக்கும் இறைபோற்றி
பைந்தமிழே போற்றியிந்தப் பாவரங்குள் ளோர்போற்றி
முந்தையநம் மரபினிலே முகிழ்ந்தகலிப் பாக்களைநான்
ஐந்துமணித் துளியளவுள் அரங்குவைத்து விடைபெறுவேன்!

இளங்குளிரின் இதங்கலந்து இனியகனிச் சுவைகலந்து
களங்கமிலா முழுநிலவின் கண்கவரும் உருக்கலந்து
விளங்குகதிர் ஒளிகலந்து விரிமலரின் மணங்கலந்து
உளங்கவர்ந்த சிலையெனவே ஒளிர்ந்துவந்தாள் சித்திரையாள்!

இத்தரையைப் பற்றியொரு எண்ணமுமே இல்லாமல்
பத்திரமாய் உடல்சாய்த்துப் பஞ்சணையிற் சுகம்சேர்த்து
நித்திரையில் மூழ்கியெந்த நினைப்புமின்றி நான்கிடந்தேன்
சித்திரையாள் எனதருகே சிரிப்போடு நின்றிருந்தாள்.

அன்றும்போல் இன்றுமோர் ஆண்டுபோய் வந்துள்ளேன்
இன்றும்நீ அன்றேபோல் இமைமூடித் தூங்குகிறாய்!
குன்றெனவே பணிபலவும் குவிந்திருத்தல் காணாயோ
என்றுரைத்தே எழுந்தேவா எனவழைத்தாள் கண்விழித்தேன்!

என்வரவால் உன்னுளத்தில் எழும்மகிழ்ச்சி நானறிவேன்
மின்னுமொளி முகம்காண மீட்டுமொலி அகம்காண
பொன்னணிகள் பூண்டுவண்ணப் புத்தாடை புனைந்துசுற்றம்
தன்னோடு களித்திருப்பாய்! தவறொன்றும் அதிலில்லை!

கொண்டாடி மகிழ்வதெலாம் கொடுங்குற்ற மென்பதில்லை
கொண்டாட்ட மொன்றேதான் குறியென்னில் அதுகுற்றம்
அன்றாடம் உண்டுறங்கி அரட்டையிலே நாள்கழித்தால்
கண்டபய னுண்டோசொல் கானகத்து விலங்குகள்மேல்!



9
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரையாள் என்வரவால் சிறப்புவந்து கூடுமென்பாய்
சொத்துசுகம் அத்தனையும் சூழவந்தே சேருமென்பாய்
எத்துணையும் ஊக்கமின்றி எச்சுகமும் வாராதே
பித்தனைப்போல் வாழ்வதனாற் பேறேதும் கிட்டாதே!

வந்தேபார் கண்திறந்து வந்தவழி பாரென்றாள்
சிந்துவெளி நாகரிகம் சிதைந்து கிடப்பதைப்பார்
முந்திவந்த மூத்தகுடி முடங்கிக் கிடப்பதைப்பார்
மந்தையிலும் கீழாகி மானமின்றி வாழ்வதைப்பார்

பங்காளிச் சண்டையிலே பகையாளி உள்நுழைந்தான்
கங்கைவென்று ஆண்டோர்கள் கால்தடுக்கி வீழ்ந்தார்கள்
சிங்கமென வாழ்ந்தோர்கள் சீரழிந்து போனார்கள்
மங்காத மாவீரம் மண்டியிட்டுப் போனதுவே!

நிலத்தினையும் பறிகொடுக்க நீருக்காய்க் கையேந்தக்
குலத்தினது பண்பாட்டைக் கொள்வதற்கு வழக்காடப்
பலத்தையெலாம் நழுவவிட்ட பரிதாப நிலையுற்றோம்
துலக்கிவைத்த பொன்சிலையைத் தெருவினிலே போட்டுவிட்டோம்!

நம்நாட்டிற் தமிழ்பெரிதும் நலிவடைந்து போவதைக்காண்
அம்மாவென் றழைப்பதற்கே அருவருப்புக் கொள்வதைக்காண்
எம்மொழியை நாம்மறந்து ஈனமுற்று வாழ்வதுவோ
செம்மொழியாய் வாழ்ந்தமொழி செத்துவிழப் பார்ப்பதுவோ!

யாதுமெம தூரென்றோர் யாவருமெம் கேளிரென்றோர்
ஏதுமொரு ஊருமின்றி ஏதிலிக ளானதைப்பார்!
போதுமிந்தத் தாழ்வுநிலை பொறுத்திருக்கக் காலமில்லை
மோதியெழும் நீரலையும் முடிந்ததென்று நிற்பதில்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரித்துவைத்த கைவிரலால் வேலையென்ன செய்திடலாம்
பிரித்தவிரல் சேர்த்துவைத்தால் பெரும்பலத்தைப் பெற்றிடலாம்
சரிந்தநிலை மாறிவரும் சரிநிகராய் மாண்புவரும்
உரிமைபெறும் நாளும்வரும் ஒன்றுபட்டால் வாழ்வுவரும்

என்றுபல சொல்லிவைத்தாள் ஏற்றிவையுன் நெஞ்சிலென்றாள்
சென்றுபல திசையனைத்தும் செப்புகவிச் செய்தியென்றாள்
வென்றுவர வாழ்த்துரைத்தாள் விழித்திருக்க வேண்டுமென்றாள்
சென்றுவரக் கையசைத்தே சித்திரையாள் சென்றுவிட்டாள்.

சீர்தூக்கிப் பார்த்திருப்போம் சித்திரைப்பெண் சொன்னதெல்லாம்
வேர்கொண்ட களையறுப்போம் விழைநிலமாய் நாமிருப்போம்
நேர்வழியிற் சென்றிடுவோம் நிலையுயர உழைத்திடுவொம்
பார்போற்றும் வண்ணமெங்கள் பைந்தமிழை நாம்வளர்ப்போம்!

**– 2017, ஏப்பரல் மாதம் சித்திரைத் திருநாளையொட்டிக்
கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய
நிகழ்வில் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்
வழங்கிய கவியரங்கத்தில் வாசிக்கப் பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேரும் விழுதுகளும்!

தாயே! தமிழே! தாய்மண்ணே! தாள்பணிந்தேன்
வாயில் திறந்து கவிபிறக்க வாழ்த்திடுவீர்!

நாவரங்கில் நற்கவிதை நர்த்தனங்கள் ஆட்டுவிக்கும்
பாவரங்கின் தலைமகனைப் பணிவோடு வாழ்த்துகிறேன்!

தாம்வடித்த பூங்கவியில் தேன்வடிக்கக் காத்திருக்கும்
நாமறிந்த பாவலர்க்கும் நட்பான நல்வணக்கம்!

குலைநடுக்கம் வைக்கும் குளிரின் கொடுமையிலும்
அலைகடலாய் வந்திருக்கும் அவையோர்க்கும் என்வணக்கம்

பாரெல்லாம் பற்றிப் படர்ந்த கொடிகளெமைச்
சேரத் திரட்டியிந்தத் தேன்சிந்தும் மாலையிலே

ஊரை அதுதந்த உற்றார் உறவுகளை
வேரை விருட்ச விழுதுகளைப் பாடுதற்கும்

கூடிக் களிப்பதற்கும் கூட்டிவந்த ஒன்றியத்தின்
ஓடி உழைக்கும் உறுப்பினர்க்கும் என்வணக்கம்!

சின்னஞ் சிறியோனின் சிந்தனையை இவ்வரங்கின்
முன்னே விரித்தேன் முழுதாய்ச் செவிமடுத்துப்

போற்றும் கருத்திருந்தால் போற்றுங்கள் தாயேற்பாள்
மாற்றுக் கருத்திருந்தால் மகிழ்ச்சியுடன் நானேற்பேன்

வேரின் பெருமை விளம்பாது விழுதுகளின்
நாரின் வலிமைதனை நாம்பாடல் ஆகாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்தோன்றி மண்தோன்றாக் காலம் நமதென்றால்
மெல்லப் பரிகசித்து மேல்வீடு பழுதென்பார்!

கல்லோடு மண்தோன்ற முன்னால் வளம்பொங்கும்
சொல்லோடு தமிழிங்கு தோன்றியதெவ் வாறென்பார்!

கல்லென்றாற் கற்காலம் மண்ணென்றால் மட்கலங்கள்
நல்லதாய்ப் பெற்றஅந்த நாகரிகம் தோன்றுதற்கு

முன்பிறந்து மானுடத்தின் முதுகை நிமிர்த்தியநம்
பின்பிறந்து வந்தவையே பிறர்பெற்ற நாகரிகம்!

சிந்துவெளி நாகரிகச் சொந்தத்தின் வாரிசுநாம்!
முந்திப் பிறந்தஇனம் மூத்தஇனம் எங்கள்இனம்!

முச்சங்கம் கூட்டிவைத்து முழுவுலகும் எந்நாளும்
மெச்சும் இலக்கியங்கள் மேன்மைபடத் தந்தஇனம்!

கங்கை கடாரம் கலிங்மெனப் போர்தொடுத்துத்
தங்கள் கொடிநாட்டித் தமதாட்சி கண்டஇனம்!

ஆழக் கடல்கடந்து அயல்நாடு பலவென்ற
சோழப்பெரும் பேரரசின் தொட்டிலிலே வந்தஇனம்!

ஆழிக்கோள் வாய்ப்பட்டும் அனல்வாயின் தீப்பட்டும்
ஊழிப் பெரும்பகையின் உலைவாயின் உட்பட்டும்

சூழ்ச்சிப் பொறிபட்டும் சூதில் தறிபட்டும்
வீழ்ச்சியுற்றும் வீழ்ச்சியுற்றும் வீறுடனே மீண்டஇனம்!

நீறாகிப் போனபின்னும் நீண்டவெளி வான்பரப்பைக்
பீறிக் கிழிந்தெழுந்த பீனிக்ஸ் பறவையினம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பெருமைகளை மூச்சு விடாதுரைத்து
என்னதான் நாம்பெற்றோம் என்பவர்க்கு நானுரைப்பேன்!

தந்தையர் தம்பெருமை தனையர் நினைக்கையிலே
சிந்தை சிலிர்க்காதோ செங்குருதி சீறாதோ?

முன்னைப் பெருமைதனை மூச்சில் செலுத்துகையில்
தன்னுள்ளே புத்துணர்ச்சி தானாய்ப் பிறக்காதோ?

இத்தனைக்கும் இத்தனைக்கும் இன்றைக்கு இந்தஇனம்
மொத்தமுமாய் வீழ்ந்து முகமழிந்து போனதென்ன?

பேரரசு கொண்டிருந்தும் பெருநிலத்தில் வாழ்ந்திருந்தும்
ஓரரசும் இல்லாத ஒண்டியாய் ஆனதென்ன?

வேறுபட்டு வேறுபட்டு வேற்றுமையால் நாமெல்லாம்
கூறுபட்டுக் கூறுபட்டு கொல்லும் பழியெதற்கு?

எண்கோடி மக்கள்நாம் எண்திசையும் போய்ச்சிதறி
பின்கோடி ஏதிலியாய்ப் பிச்சைப் பிழைப்பெதற்கு?

கூனிக் குறுகிநின்றே குற்றேவல் செய்பவராய்
நாணிப் பயந்து நடுங்குகின்ற வாழ்வெதற்கு?

பழம்பெருமை பேசுகின்ற பேச்சோடு நில்லாது
முழம்போட்டு முழம்போட்டு முன்னேற வேண்டாமோ?

என்ற உணர்வோங்க ஈழத்தில் எம்மக்கள்
அன்று தொடங்கியபோர் ஆற்றல் உலகறியும்

புறநா னூறுசொன்ன புறத்தின் பெருமையெல்லாம்
புதுநா னூற்றுப் புரட்சியிலே நாம்கண்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனதுகைக் கோடரியே தனைவெட்டிச் சாய்க்கின்ற
இனம்கொண்ட சாபமே ஈற்றினிலே வீழ்த்தியது

ஈழத்தில் அன்றவர்கள் ஏற்றிவைத்த தீச்சுடரே
சூழநின்று உலகரங்கில் சுடர்விட் டெரிகிறது.

மண்ணுக்குள் வீழ்ந்துவிட்ட மாவீரர் எல்லோரும்
மண்ணில் விதையாகி வேராவார் ஓர்நாளில்

வேரோடி அம்மண்ணில் விருட்சம் பலதழைக்கும்
தேரோடும் மன்னன் தெருவில் முரசறையும்.

மீண்டும் திரும்பிவரும் வண்தமிழன் வரலாறு
ஆண்ட இனம்மீண்டும் ஆளுகின்ற தேதிவரும்!

எட்டுத் திசையினிலும் எகிறிக்கால் வைத்தவர்நாம்
பட்ட விழுதுகளாய் பாழடைதல் கூடாது

உணர்ச்சி இமைமூடி உள்ளத்தின் தாள்திறந்து
உணரும் அறிவுடனே ஒன்றுபட்டு நாமிணைவாம்!

பசும்புல் அறுகுபோல் பரவட்டும் எங்களின்வேர்
விசும்பு தொடுமாப்போல் விழையட்டும் எம்விருட்சம்

வேரை விழுதுகளை வேறாக்கி வீழத்தாமல்
வேரைத் தழைக்கவைப்போம் விழுதுகளை ஊன்றிவைப்போம்!

**– 2013, டிசம்பர் மாதம் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் நடத்திய ஒளி விழாக் கவியரங்கத்தில் வாசிக்கப்பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவில் தைப்பொங்கல்

தரமாய்த் தகையாயக் கவியரங்கின்
தலைமை ஏற்றுத் தன்கவியால்
தமிழின் அழகுக் கணிசேர்க்கும்
தலைவர் தமக்கென் முதல்வணக்கம்!

அரங்கின் அழகுக் கழகாக
அணிகலன் போன்றே அமர்ந்திருக்கும்
அறிஞர்க் கெனது நல்வணக்கம்
அவைக்கும் தந்தேன் தமிழ்வணக்கம்!

மரபைப் போற்றித் தமிழ்த்தாய்க்கு
மக்கள் மன்றில் கவியாலே
மாலை சூட்டி மகிழ்ந்திருக்கும்
மரபுக் கவிஞர்க் கென்வணக்கம்!

கரங்கள் குவித்தேன் அனைவர்க்கும்
கருத்தோ டிருந்தால் என்கவிதை
கையொலி தருவீர். இழுக்கிருந்தால்
களையச் சொல்வீர் மகிழ்ந்திருப்பேன்!

உயிரில் கலந்து மெய்யினிலே
உணர்வாய்ப் புகுந்து உயிர்மெய்யாய்
உலகில் முதலாய் உதித்தெந்தன்
உதிரம் முழுதும் உறைந்தவளே!

பயிலும் மொழியாய் நாவினிலே
பழகத் தேனாய் இனிப்பவளே
பாரில் உயர்ந்த இலக்கியங்கள்
பலவும் அணியாய்க் கொண்டவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலின் தோகை யெனநீயும்
மனதை வருடல் காண்கின்றேன்.
மதுவின் போதை யெனவுன்னை
மாந்தும் போதே உணர்கின்றேன்!

வெயிலில் கண்ட நிழல்போலும்
வெந்த நிலத்தில் சுனைபோலும்
வேரைப் பதித்த மேல்நாட்டில்
விளையும் தமிழே உனைக்காண்பேன்!

நதியின் கரையில் பிறப்பெடுத்தே
நடந்த மொழிகள் நலிந்துவிட
நான்கு சேயைப் பெற்றவள்நீ
நாளும் இளமை பெறுகின்றாய்!

பொதிகை பிறந்த தமிழ்த்தாயே
பொறுமை காப்பாய் உனையென்றும்
பொசுக்கும் தீயே எரித்தாலும்
பொங்கும் கடலே சூழ்ந்தாலும்

விதியென் றூழ்வந் துற்றாலும்
விண்ணே இடிந்து வீழ்ந்தாலும்
விடமாய் பகைமை விரிந்தாலும்
வீழ்ந்தே போக விடமாட்டோம்!

புதிதாய் மாற்றம் பிறந்திடலாம்
புவியில் பழமை மறைந்திடலாம்
புனிதம் மிக்க தமிழ்மரபின்
புகழோ என்றும் மறையாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் திருநாள் தமிழ்மரபில்
பிறந்த திருநாள் பிறவெல்லாம்
பின்னே வந்து புகுந்ததனால்
பிறந்த பெருமை அவைக்கில்லை!

எங்கும் இன்பம் பொங்கிவரும்
எழில்மாக் கோலம் காட்சிதரும்
இளநீர் கரும்பும் சர்க்கரையும்
இஞ்சி மஞ்சள் தோரணமும்

அங்கம் மின்னும் ஆடைகளும்
அறுத்து எடுத்த புதுநெல்லும்
அழகாய்ப் பிடித்த அடுப்புகளும்
அதன்மே லேற்றிய பானைகளும்

கங்குல் மறையக் கதிர்உதிக்கக்
காலடி வைக்கும் தைமகளைக்
கரங்கள் கூப்பிப் பொங்கலிடும்
கருத்தில் மறையாக் காட்சிகளே!

கங்குல் பகலாய் உழைப்போரைக்
கழனி நிலத்தை உழுவோரைக்
காத்து நிற்கும் கதிரோனைக்
கருத்தில் பதிப்போம் நன்றியுடன்.

சங்கின் ஒலியும் காளைகளின்
சலங்கை ஒலியும் சரவெடிகள்
சிந்தும் ஒலியும் கன்னியரின்
சிரிப்பின் ஒலியும் செவியதிரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் ஒளியாய் மனையாளும்
திகட்டா மொழியாய் மழலைகளும்
திரண்டு வந்த உறவுகளும்
தேடி வந்த தோழமையும்,

மங்கா நிறைவாய் மனையெல்லாம்
மகிழ்ச்சி பொங்க வாழ்திசைத்து
மனங்கள் பொங்கும் தைநாளின்
மறக்க முடியாக் காட்சிகளே!

கதைத்து மகிழ்வோம் இன்றெமக்கிக்
காட்சி இல்லைக் களிப்பில்லை
கழனி இல்லைக் கதிரில்லைக்
கலந்து பேசும் உறவில்லை!

விதைத்து வந்த நிலமிருந்தே
வேரை அறுத்த எம்வாழ்வில்
வெளியில் பொங்கும் பனிப்பொங்கல்
வீட்டுள் பொங்கும் பாற்பொங்கல்!

பதைக்கும் உள்ளம், வழியில்லைப்
பகலோன் மறையும் அந்தியிலும்
பாங்காய்ப பொங்கிப் படைக்கின்றோம்
பற்றாய் மரபைக் காக்கின்றோம்!

எதையோ எப்போ இழந்தாலும்
என்றும் மரபை இழந்துவிடோம்
எதிர்கா லத்துத் தலைமுறையும்
எடுத்துச் செல்லும் சிறப்போடே!

**– 2015 ஜனவரித் திங்கள் 18ஆம் நாள் நடந்தேறிய கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் தமிழ் மரபுத் திங்கள் – பொங்கல் விழாக் கவியரங்கில் வாசிக்கப்பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனையைத் திறக்கட்டும் சித்திரை!

கவிபுதிது விதைபுதிது
கவிதைபுதி தென்றிந்த
நிதிபுதிதைக் காணுகின்ற
நேயர்களை வாழ்த்துகிறேன்!

கவிஞர்களை வழிநடத்திக்
கவியரங்கை நெறிப்படுத்தும்
கவிகளுக்கு நாயகரைக்
கைகூப்பி வணங்குகிறேன்!

கவிஞர்க்குக் களமமைத்துக்
கவிபுனைய வளமமைத்த
புவிபோற்றும் 'ரீ ஈ ரீ'
புகழுடைய வாழ்த்துகிறேன்!

பஞ்சணையின் மெய்யணைப்பில்
பாவையவள் கையணைப்பில்
துஞ்சுகின்ற வேளையிலே
துளிர்த்தஇளங் காலையிலே

நித்திரையும் கலைந்துவர
நினைவுகளும் மீண்டுவரச்
சித்திரைப்பெண் இன்றுவந்தாள்
சிறியவினா ஒன்றுதந்தாள்!

எத்தனையோ பணியிருக்க
ஏற்பதற்குத் துணிவிருக்கப்
பித்தனைப்போல் தூங்குவதேன்
பேதையைப்போல் ஏங்குவதேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடத்தின் வேரறுக்கும்
மடமைகளைச் சாடாயோ
கூனடைந்த கொடுங்கோலர்
குடைவீழப் பாடாயோ

படித்துவரப் சென்றோரைப்
பல்கலையின் கழகத்துள்
துடித்துவிழக் கொன்றோரைத்
தூக்கிலிடக் கோராயோ!

மதத்தாலே மதங்கொள்ள
மானுடத்தைக் கொய்த்தவரை
வதத்தாலே பலிகொள்ள
வல்லவனைக் கேளாயோ!

கனவுகளைச் சுமந்தபடி
காற்றுவெளி பறந்தவரை
மனவுளைச்சல் கொண்டொருவன்
மாய்த்தஅந்தச் சோகமென்ன!

மதநோயோ மனநோயோ
மதுமயக்கம் தரும்நோயோ
எதுநோயோ எனவறிந்து
எதிர்மருந்து தாராயோ!

மனிதரெனப் பிறப்பெடுத்தோர்
மாக்களாய் உருவெடுத்துப்
புனிதமெனக் கிடந்தஇந்தப்
பூமியையும் ஏன்கெடுத்தார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாண்டு அடுத்தடுத்துப்
புதுநிலவாய் வந்தாலும்
பித்தாகி மானிடர்கள்
பிறைநிலவாய்ப் போவதென்ன!

தூக்கத்தைப் போக்கிவிட்டுத்
துணிந்தெழுநீ வேண்டாமோ
ஆக்கமுள்ள அறிவியலில்
அகம்பதிக்கக் கூடாதோ

தரணியிலே தமிழ்மறையும்
தழைத்தோங்கி வாராதோ
பரணியொன்று பாடிவரப்
படையொன்று சேராதோ

சித்திரையில் பிறந்துவந்து
சிந்தனையைத் திறந்துவைத்து
முத்திரையைப் பதித்துவைத்து
முழுநிலவாள் கேட்டுவைத்தாள்!

சித்திரைப்பெண் இன்றுவைத்த
சிறியவினா நெஞ்சுதைத்தால்
இத்தரையை மாற்றிடலாம்
இனியவழி காட்டிடலாம்!

– 2016 ஏப்ரல் மாதம் சித்திரைத் திருநாளுக்காகக்
கனடா 'ரீ ஈ ரீ' தொலைக் காட்சியில்
ஒளிபரப்பப்பட்ட கவியரங்கத்தில்
வாசிக்கப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழந்தவை மீட்க வாரீர்!

(அறுசீர் விருத்தம்)

உயர்ந்தசெம் மொழிகள் ஏழில்
உயிர்புடன் என்றும் வாழும்
வியத்தகு வளத்தின் நாற்றே!
விரிகின்ற மரபின் ஊற்றே!
இயலிசை கூத்தாய் இன்னும்
இணையத்து மொழியாய் மின்னும்
நயத்தகு வாழ்வே போற்றி!
நற்றமிழ்த் தாயே யோற்றி!

மாதமோர் ஆய்வுத் தேட்டம்
மகிழ்ச்சியில் அறிஞர் கூட்டம்!
போதவிழ் அறிவுச் சோலை
பூத்திட மணக்கும் மாலை!
சாதனை படைக்கும் எண்ணம்
சரித்திரம் வடிக்கும் வண்ணம்
மாநகர் ரொறொன்ரோ கண்ட
மாதமிழ்ச் சங்கம் வாழி!

தனித்தமிழ் மரபுத் திங்கள்
தையென வரித்தோம் நன்றே!
தனித்தமிழ் மரபென்று எந்தத்
தன்மையைச் சொல்வோம் இன்றே!
பனிப்புயல் பொழியும் நாட்டில்
பட்டிலே வேட்டி சேலை
அணிவதும் அழகே. ஆனால்
அதுமட்டும் மரபோ சொல்வீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணிசைப் பாடல் எங்கே
பழந்தமிழ்க் கலைகள் எங்கே?
திண்ணிய அகமும் எங்கே?
திறனுடைப் புறமும் எங்கே?
மண்ணில்நல் வண்ணம் வாழ்ந்த
மண்கூட எங்கே எங்கே?
எண்ணியே பார்த்தால் தோன்றும்
இழந்தவை பலவாய் என்றே!

தாய்மடி வைகை யாற்றில்
தழைத்தநா கரிகம் தன்னைக்
கீழடி அகழ்வில் கண்டே
கிஞ்சித்தும் பொறுக்கி லாதார்
தாளடி மண்ணுள் மூடித்
தள்போட நினைக்கின் றார்கள்!
சூழ்சிந்து வெளிபோல் ஆய்வைச்
சூழ்ச்சியால் மறைக்கின் றார்கள்!

நம்மிடம் கொள்ளை கொண்ட
நலங்களைத் திருப்பி மெல்லத்
தம்மிடம் இருந்த தென்றே
தந்தனர் ஏற்றோம் நன்றே!
எம்மிடம் விழிப்பேன் இல்லை!
ஏனென்ற கேள்வி யில்லை!
உண்மையைக் கேட்டோ மில்லை
உறுதியோ(டு) உழைத்தோ மில்லை!

ஆரிய மைந்தன் தந்தான்
அருந்தமிழ் மொழியென் றார்கள்!
நேரிய குறளும் தொல்காப்
பியமும்தம் வழியென் றார்கள்!
கூரிய நெறிகள் எல்லாம்
கொடுத்ததே தாமென் றார்கள்!
பாரிய பொய்கள் சொல்லப்
பயந்துநாம் பணிவாய் ஏற்றோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமாய் மாற்றார் எம்மேல்
திணித்தவை தெரிந்தோ மில்லை!
மட்டமாய் அழிந்து போன
மடமையை அறிந்தோ மில்லை!
இட்டமாய் எனது நெஞ்சில்
இருந்த ஆதங்கம் என்றே
பட்டதை அரங்கில் வைத்தேன்
பகிர்ந்துள்ளம் உண்ணத் தந்தேன்!

எதற்கிந்த நிலைமை பெற்றோம்
எமக்குள்ளே சண்டை யிட்டோம்!
மதத்தாலும் சாதி யாலும்
மதிலிட்டுப் பிரித்து வைத்தோம்!
பதமாக மாற்றான் காலில்
பணிவதில் பெருமை கொண்டோம்!
சதமாக இனத்துக் கின்றோர்
சாதனை படைத்தோ மில்லை!

அரசாள நிலமும் இல்லை!
அதிகாரம் கையில் இல்லை!
மரபாகக் கொள்ள இன்று
மகிமையாய் எதுவும் இல்லை
இரவின்மின் மினிகள் போல
இருப்பதில் பயனொன் றில்லை
புரவியின் வேகம் கொண்டே
புறப்படில் விரியும் எல்லை!

ஆற்றல்கொள் இளைஞர் இன்று
அறிவென்னும் வழியில் நின்று
போற்றும்மெய்ப் பொருண்மை தேடார்
புகழ்பெறும் வழியை நாடார்
ஊற்றான உரிமை காக்கும்
உணர்விலார், சினிமா மாயைச்
சேற்றுள்ளே உழல்கின் றார்கள்
சிந்திக்கும் திறனற் றார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகனைத் தெய்வ மாக்கி
நாற்பது அடியில் பிம்ப
வடிவுக்குப் பாலை வார்த்து
வான்முட்டக் கோஷம் போட்டு
அடிக்கின்றார் கொட்டம் ரோட்டில்
ஆயிரம் பேராய் நாட்டில்
வெடிக்குதே நெஞ்சம் சொன்னால்
வெளியிலே வெட்கக் கேடு!

அணியென ஆண்ட காலம்
அடுத்தினி வந்தி டாதா?
கணியன்பூங் குன்றன் கண்ட
கனவின்று மலர்ந்தி டாதா?
துணிவொன்று பிறந்தி டாதா?
தொலைத்தவை திரும்பி டாதா?
மணித்துளி ஐந்துள் வைத்த
மனத்துயர் பதிந்தி டாதா?

எனக்கும்பேர் தமிழில் இல்லை
இனிமாற்ற வயதும் இல்லை!
உனக்கொரு வாய்ப்பு வந்தால்
உணர்வுடன் தமிழ்ப்பேர் சூட்டு!
மனத்துக்கு மகிழ்ச்சி யூட்டு
மானத்தில் உயிரைக் காட்டு!
இனத்துக்கோர் குறியீ டென்றே
இருந்திடத் தமிழைப் போற்று!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரமென்று இருந்தால் தானே
  அதன்விதை மண்ணில் வீழும்!
உரமென மொழிவாழ்ந் தாலே
  உயிர்ப்புடன் மரபும் வாழும்!
மரபணு கருவில் சேரும்
  மரபையும் கருவில் சேர்ப்போம்!
மரபுகள் மாறும் ஏற்ற
  மாற்றமேல் மகிழ்வாய் ஏற்போம்

அமிழ்தெனும் மரபைக் காப்போம்
  அறிவியல் உண்மை காண்போம்!
தமிழ்க்கரு வூலம் அள்ளித்
  தரணிக்குத் தந்தே வெல்வோம்!
தமிழ்வெறும் மொழியே இல்லை
  தமிழர்தம் வாழ்வின் எல்லை!
தமிழர்காள் ஒன்று சேர்வீர்
  தமிழுக்காய் ஒன்று சேர்வீர!

– ஜனவரி 26, 2019 ரொறொன்ரோ தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற கவியரங்கத்துக்காக எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரருடன் சில மணித்துளிகள்!

கார்த்திகை மாதம் பிறந்தது - புயற்
காற்றுடன் வானும் பொழிந்தது
ஆர்த்த முரசம் ஒலித்ததோ - நீங்கள்
ஆடிய வெஞ்சமர் மீண்டதோ
கூர்த்த நினைவின் நிழல்களாய் - நெஞ்சில்
கொட்டும் உணர்வின் துளிகளாய்
நீர்த்திட வில்லையும் தீரமே - எங்கள்
நெஞ்சில் நிறைந்தமா வீரரே!

ஆயிரம் காலம் கடந்தது - அன்று
ஆண்ட சரித்திரம் மீண்டது!
தாயொடு தந்தையும் பிள்ளையும் - தம்மைத்
தானமாய் மண்ணுக்கே தந்தது
தேயங்கள் எங்கும் நடந்ததா? - அது
தெய்வ நிலையைக் கடந்ததா
பாயும் புலிகளின் ஓவியம் - இந்தப்
பார்கண்ட தோர்புதுக் காவியம்!

நாயில் இழிந்த வகையிலே - வாழ
நாடின்றிப் போன நிலையிலே
தாயின் நிலத்தினை மீட்கவும் - தமிழ்த்
தாயினுக் கேமுடி சூட்டவும்
கோயிலைப் போலும் குடும்பத்தை - இளம்
கோல வனப்பின் குளுமையை
ஆயிரம் வண்ணக் கனவினை - முற்றும்
அர்ப்பணித் தீர்களே வீரரே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக் கென்றோர் முகவரி - ஈழம்
என்பதைக் நாட்ட எழுந்தவர்
தங்களுக் கென்றோர் முகவரி - ஏதும்
தந்தோ உயிர்க்கொடை தந்தனர்!
அங்கம் அதிர்ந்திடும் வீரமும் - களம்
ஆடிப் பொருதிடும் தீரமும்
சிங்கள நாட்டை உலுக்கிய - செயற்
தீரமும் கண்டதிவ் வையமே!

சுற்றிச் சுழலும் சரித்திரம் - அறம்
தோற்பதில் லையதில் நிச்சயம்
குற்றம் புரிந்தவர் மாள்வதும் - கொடி
கொற்றம் படையொடு வீழ்வதும்
இற்றைப் பொழுதினிற் பார்க்கிறோம் - ஈனர்
இன்று படும்பாடும் காண்கிறோம்
சற்றுத் துயிலுங்கள் வீரரே - அவர்
சண்டை முடிவென்ன பார்க்கலாம்!

வீர யுகத்தைப் படைத்தனர் - வெறும்
வெள்ளித் திரையினில் அல்லவே
நேரில் நிதர்சன மாகவே - தீமேல்
நின்று மிதித்த மறவர்கள்!
வேரென மண்ணுள் புதைந்துளீர் - நல்ல
வேளை வரும்போ தரும்புவீர்!
வேரறுத் தேவந்த கோழைகள் - நாம்
வெட்கிக் குனிகிறோம் வீரரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பென வேழுண் டெழுந்தவர் - உம்மை
  நெருங்கிட வேயிங்கு யாருள்ளார்
இரும்பின் பலம்கொண்டு போரிட்டீர் - இன்று
  ஏளனம் செய்யும் சிலருள்ளார்
துரும்பினைக் கூட அசைத்திலார் - கொடும்
  துர்மதியில் குற்றம் கூறுவார்
பெருகி ஒளிரும் மதியினைப் - பார்த்துப்
  பேரொலி செய்யும் விலங்கவர்!

எத்தனை வேள்வி இயற்றினீர் - இன்னும்
  என்னென்ன வோசுமை தாங்கினீர்
அத்தனையும் அற்றுப் போனதோ - வீணில்
  அள்ளி யிறைத்தநீ ரானதோ
மெத்தமும் ஒற்றுமை கெட்டதே - இன்று
  மூச்சிழந் தேநலி வுற்றதே!
செத்தொழிந் தாலும் தமிழர்கள் - ஒன்று
  சேர்வரோ சொல்லுங்கள் வீரரே!

கார்த்திகைப் பூக்கள் மலர்ந்தன - பாடக்
  கவிதை பன்னூறு பிறந்தன
காத்திருந்தோம் இந்த நாள்வரை - உங்கள்
  கால்களில் வைத்தே வணங்கிட
நீர்த்த விழிகள் நனைந்திட - உம்மை
  நெஞ்சினில் ஏற்றிச் சுமந்திட
வார்த்த கவிதையை மாலையாய் - வைத்து
  வாழ்த்தி வணங்கினோம் வீரரே!!

- 2018 நவம்பர் மாதம் மாவீரர் நாளையொட்டி
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தில் நடைபெற்ற
கவியரங்கில் வாசிக்கப்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் பண்பாடு - நேற்று, இன்று, நாளை

தில்லையில் கூத்தனைத்
திருநுதற் கண்ணனைத்
திருநீற்று மேனி யானைத்
திண்மமாய்த் திரவமாய்த்
தீயாகிக் காற்றாகித்
திக்கெலாம் பரந்த பொருளை

முல்லைப்பூ நாற்றமாய்
முருகியற் தோற்றமாய்
முத்தமிழ் தோய்ந்த வடிவை
முதலுக்கு முடிவாகி
முடிவுக்கு முதலாகி
முரணாகி நின்ற பொருளை

தொல்லையில் உழலாமல்
துயர்கடல் வூழ்காமல்
துணையாகும் ஐந்தெ முத்தினைத்
தென்நாட்டின் சிவனெனும்
எந்நாட்டின் இறைவனைத்
தொழுதனன் சூழ்க நலமே!

தொன்மைக்கும் தொன்மையாய்த்
தொடர்ந்தபல் மொழிக்கெலாம்
தொடக்கமாய் நின்ற மொழியே!
தொல்காப்பி யத்துக்கும்
பல்காப்பி யந்தந்து
பல்லாண்டு வாழ்ந்த தமிழே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்மையென் றெதுவுமே
இலையெனும் வகையிலே
என்றைக்கும் வாழும் மொழியே
இளமைக்கு மிளமையாய்
இனிமைக்கு மினிமையாய்
இருந்தோங்கி வாழ்க தமிழே!

அன்னையாம் உறவொன்று
இல்லையெனில் அகிலமும்
அசையாமல் நின்று விடுமே!
அகரமாமய் முதலுமாய்
அனைத்துமாய் ஆனவளின்
அடிபோற்ற அமைதி வருமே!

**வேறு**

பேராற்றல் மிக்கஇப்
பேரவையின் தலைமகனாம்
கூரான மதிநுட்பம்
கொண்டபே ராசிரியர்

பாலாசேர் எனஅழைப்போம்
பண்பான ஆசிரியர்
பாலசுந் தரம்அவர்க்கென்
பணிவான நல்வணக்கம்

தவமாய்த் தவமிருந்து
தமிழன்னை பெற்றமகன்
நவமான முப்பாலை
நானிலத்துக் களித்தமகன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனெங்கள் வள்ளுவனை
அகிலம் அறிந்துகொண்டு
உய்யும் வகைஅவனின்
உருவச்சிலை களிலே,

முப்பத்தைந் தாம்சிலையைப்
முக்கண்ணன் ஆலயத்தின்
முற்றத்தில் ஏற்றிவைத்து
முனைப்பாய்க் கனடாவின்,

மண்ணிற் தமிழரது
மாண்பை உயர்த்தியவர்
அண்ணாச்சி என்றேபே(ர்)
அன்போடு அழைக்கின்ற,

பெருமகனைப் போற்றியிந்தப்
பேரவையில் வாழ்த்துகிறேன்!
அருமைப் பணிதொடர
அன்போடு வாழ்த்துகிறேன்!

காற்றுக்கு உயிரூட்டிக்
கடும்புயலாய் மாற்றிவிடும்
ஆற்றலுள்ள கார்முகிலாய்
அறிஞர்கரு நாகராசன்!

ஊற்றாகும் உணர்ச்சிக்கு
உயிராகும் மொழியாலே
ஆற்றொழுக்காய்ப் பாஅரங்கை
அழகாய் நடத்துகிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல்ல பாவலர்காள்!
நலம்பயக்கும் நற்றமிழால்
பாவெல்ல யாவரையும்
வாழ்த்திப் பணிகின்றேன்!

போதை தரும்தேனாக
பொழிவார் கவிதைகளைக்
காதுவழி யேபருகிக்
களித்திருக்கும் அவையோர்க்கும்

கைகூப்பினேன் வணக்கம்!
கையொலித்து வாழ்த்துங்கள்!
மெய்யாக நோய்தீரும்
கையிரண்டும் சேர்ந்தொலித்தால்!

**வேறு**

தமிழர்தம் பண்பாடு
நேற்றின்று நாளையெனத்
தமியேனுக் கிட்ட தலைப்பு - என்
தமிழுக்குச் சூட்டும் தலைப்பூ

சங்கத்தின் தமிழ்பருகி
அங்கங்கள் உருவாகிப்
பொங்கிப் பெருகிய பண்பாடு - பெரும்
புகழ்பெற்ற தென்றே பண்பாடு!

பண்பாடு என்பதெல்லாம்
பாடறிந்து ஒழுகலென்றே
சமுதாயம் போட்டுவைத்த கோடு - அதைச்
சடங்கென்று விலக்கி வைத்தல்கேடு!

அம்மையென்றும் அப்பனென்றும்
அன்புடைய மாதரென்றும்
ஆண்டவனை யும்உறவாய்க் கொண்டோம் - அதில்
ஆனந்தப் பேருவகை கண்டோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றங்கள் போற்றுவதும்
சொந்தங்கள் வாழ்த்துவதும்
சுகமான சுமையன்றோ அன்று - நான்கு
சுவருக்குள் சிறையன்றோ இன்று!

இருந்தோம்பும் பண்போடு
விருந்தோம்பும் பண்பாடு
உலகத்தில் வேறெங்கும் இல்லை - அந்த
உணர்வுதனை விஞ்சியதொன் றில்லை!

அன்னைதனை தந்தையினை
அறிவூட்டும் ஆசானை
அந்நாளில் அடிபணிந்த பண்பு - இன்றோ
அருகிவிட்ட துண்மை யிதைநம்பு!

அன்றையநாள் வல்லவராய்
அறுபத்து நான்கான
ஆயகலை அத்தனையும் கற்றோம் - எல்லாம்
அருங்காட்சி யகத்தினிற்கா விற்றோம்?

கட்டிவைத்த கூந்தலையும்
பொட்டுவைத்த நெற்றியையும்
விட்டுவிட்ட கண்ணகியின் தோற்றம் - காலம்
கெட்டுவிட்ட தோஇந்த மாற்றம்!

திரைகடலை வென்றஇனம்
திரையரங்கின் இருளினிலே
தேடுகிறோம் தொலைத்தவற்றை அங்கே - தன்
திசைமறந்த பறவைக் கிடமெங்கே!

சேயனுக்கும் கொற்றவைக்கும்
மாயனுக்கும் வேந்தனுக்கும்
கோயில்கட்டிப் போற்றிய பண்பாடு - இன்று
குஷ்புவுக்குக் கோயில் வெட்கக்கேடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரந்தான் பெருமைகொண்ட
தன்றையபண் பாடெனினும்
அறுகென வேரோடியதோர் கொடுமை - ஆணின்
ஆதிக்கச் சிறையினில் பெண்ணடிமை!

கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருசன்
எனச்சொல்லிக் கட்டிவைத்தார் கண்ணை - அன்று
மனைக்குள்ளே பூட்டிவைத்தார் பெண்ணை!

காதலையும் கற்பினையும்
காவியமாய் கண்டவர்கள்
கற்புநெறி பெண்களுக்கே வைத்தார் - ஆண்கள்
களிவண்டாய்ச் சிறகடிக்க விட்டார்

கணவனெனக் கைப்பிடித்துக்
காலமெல்லாம் ஏங்கவைத்துக்
கணிகையுடன் வாழ்ந்தவனுக் காகப் - பேதை
கனல் மூட்டினாள் மதுரைவேக!

ஒருகுலமும் ஒரூரும்
ஓருசுற்ற மும்மெனவே
ஒருமையுடன் வாழ்ந்தசமு தாயம் - சாதிச்
சிறுமையிலே வீழ்ந்ததென்ன ஞாயம்!

என்றாலும் தேன்கூடே
அன்றையநாள் பண்பாடு
இன்றையநாள் அதுசிதைந்து போமோ - யாவும்
இனிவரும்நாள் இழந்துவிடு வோமோ?

சமுதாயம் நாளைக்குச்
சாக்கடையில் வீழ்ந்திடுமோ
அமிழ்தான தமிழையும் கைவிட்டே - எல்லா
அடையாளமும் இழந்து கெட்டே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுபல கேள்விகளே
சென்று தைக்கும் நம்மனத்தை
நன்றெனவே உண்மை தெளிந்தாலே - நாளை
நல்லனவாய் பயிர்விளையும் தானே!

எப்பொருளே யானாலும்
எக்கால மானாலும்
நல்லனவும் தீயனவும் உண்டு - அதை
நன்கறிந்து கொள்ளுதலே நன்று!

புதியனவே புகுவதுவும்
பழையனவே கழிவதுவும்
வழுவலவே என்பது கோட்பாடு - அந்த
வழிபற்றி நடப்பதுபண் பாடு!

பெண்ணுரிமை ஓங்கியதும்
பேதங்கள் நீங்கியதும்
பெற்றபெரும் மாற்றங்கள் இந்நாள் - சொல்லிப்
பெருமைகொள்ள வேண்டுமிந்த நன்நாள்!

பரத்தமையைப் பண்பாடாய்ப்
பயின்றநிலை தானொழித்து
ஒருத்தனுக்கு ஒருத்தியெனப் போற்றும் - வகை
உருவெடுத்து வந்ததிந்நாள் மாற்றம்!

நேற்றைக்கு மின்றைக்கும்
நாளைக்கும் பண்பாட்டில்
மாற்றங்கள் வந்துசென்றே போகும் - அதில்
மரபுகளும் மாறிவந்தே சேரும்

மாற்றங்கள் என்ப தொன்றே
மாறாது இவ்வுலகில்
மாற்றத்தை யார்மாற்றக் கூடும் - உலகும்
மாற்றத்தை ஏற்றுநடை போடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லவற்றை நீக்கி விட்டு
ஆக்கத்தைத் தேக்கிவைத்து
நல்லவற்றைப் பண்பாடாய்க் கொள்வோம் – நாம்
நாகரிகம் கண்டுலகை வெல்வோம்!

திருமறைகள் ஒளியூட்டத்
திருக்குறளும் திசைகாட்ட
அறிவியலின் கைப்பிடித்துச் செல்வோம் – நன்
நெறிகொண்ட வாழ்வுதனைக் கொள்வோம்!

தமிழரது பண்பாட்டுத்
தரம்நேற்றும் இன்றைக்கும்
தனித்துவமாய் வாழுகின்ற வண்ணம் – நாளை
தழைத்தோங்கி வாழுவதும் திண்ணம்!

– 06, ஏப்ரல் 2018 அன்று நடந்த
சைவத்தமிழ்ப் பண்பாட்டு மாநாடு கவியரங்கம்
தலைமை: முனைவர் கரு. நாகராஜன்,
எஸ்.ஆர். எம் தமிழ்ப் பேராயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்திலிருந்து ஓர் இதயத்தின் குரல்!

வருசா வருசந்தான்
வந்துவந்து போகுதையா
புதுசா வரும்வருசம்
புதுசாக என்னதரும்?

புத்தாண்டு வந்தாலும்
புதுமையில்ல எங்களுக்கு!
குத்தாட்டம் பாட்டமெண்டு
கொண்டாட்டம் உங்களுக்கு!

போராடிப் போராடிப்
போராடும் வாழ்வாச்சு
போர்முடிஞ்சு நாளாச்சு
பொருளறியாப் பொழைப்பாச்சு!

காணாமப் போனவங்க
கதைமுடிஞ்ச கதையாச்சு
வீணான பொழுதாச்சு
விடைதெரியாப் பொருளாச்சு

மண்ணை இழந்தாச்சு
மானம் பறிபோச்சு
கண்ணாகக் காத்திருந்த
கல்வியிலுங் கீழாச்சு!

சொத்துச் சுகம்போச்சு!
சொந்தம் பறிபோச்சு!
பித்துப் பிடிச்சதுபோல்
பேதலிக்கும் வாழ்வாச்சு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில நாங்களெல்லாம்
நிர்க்கதியா நிக்கையில
புலம்விட்டுப் போனவர்க்குப்
புரியுமெண்டு காத்திருந்தோம்!

வேரோடு விழுதுவந்து
விருச்சத்தைத் தாங்குமெண்டு
ஊரேடு நம்பிநிண்ணோம்
உண்மையில ஏமாந்தோம்!

நாங்க படும்பாடு
நாய்படாப் பாடெண்டு
நீங்க உணருமொரு
நேரமெப்ப வந்திடுமோ?

வேரறுத்துப் போய்நீங்க
விழுதாக ஊன்றிவிட்டீர்
வேரை அறுத்துவிட்டு
விழுது தழைத்திடுமா?

பதவிக்கும் பவுசுக்கும்
பறப்பாப் பறக்கிறீங்க
பாவிமக்கள் எங்கபக்கம்
பாக்க மறுக்குறீங்க!

வருசம் ஒருதடவை
வாழ்த்திவிட்டுப் பின்னால
திரையைத்தான் மூடிவிட்டுத்
திறக்க வெறுக்கிறீங்க!

வெத்தாக எங்களுக்கு
வெறுமனே வாழ்த்தாமச்
சத்தியத்தைச் சொல்லுங்க
சத்தியமா நாம்வாழ்வோம்!!

– 2019 ஜனவரி 15இல் தைப்பொங்கல் விழாவையொட்டி கீதவாணி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்பெற்ற கவிதா நிகழ்வில் வாசிக்கப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி 4:
# பாமாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருபொலிந்து நலம்வாழ்க!

(தரவு கொச்சகக் கலிப்பா)

தெளிதருவான் பரப்பினிலே
　தவழ்ந்துவரும் முழுநிலவின்
பளிங்குருபோல் மலர்வதனம்
　பயிலுமதில் இளமுறுவல்,
குளிரருவி தருசுகம்போல்
　குணமனைத்தும், விழியிரண்டும்
ஒளியுமிழும் தாரகைகள்
　உருவினிலே அலெக்ஸாந்தர்!

பண்டிதராய்ச் செழுந்தமிழின்
　இலக்கணத்தின் எல்லைதனைக்
கண்டறிந்தார், கல்வியையும்
　கடமையையும் கண்ணியமாய்க்
கொண்டுயர்ந்தார், அறிவையள்ளிக்
　கொடுத்துயர்ந்தார், படிக்கட்டாய்
நின்றிருந்தார் அதிலேறி
　நிமிர்ந்தவர்கள் பலபேர்கள்!

தலையினிலோர் கனமில்லைத்
　தனைப்புகழ்ந்து மொழிவதில்லை
விலையென்று பொருள்கொடுத்து
　விளம்பரங்கள் பெற்றதில்லை
மலையெனவே குவியவிழும்
　மலர்களுக்காய் மயங்கவில்லைக்
குலையீன்ற கனிவாழைக்
　குணம்படைத்தார் அலெக்ஸாந்தர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருழைப்பில் பயனடைந்து
உயர்வடைவோர் பலரிடையே
பேருழைப்பால் புகழுடைந்து
பெரும்பதவி பலபெற்றார்!
காருதிர்க்கும் கனமழையோ
கனியுதிர்க்கும் அருந்தருவோ
கூருடைய இவரறிவைக்
குறித்துரைத்தல் எளிதாமோ!

தடம்மாறித் தவறியஎன்
தமிழ்க்கவிதை மணித்தேரின்
வடம்பிடித்து இழுத்துலகில்
வலம்வரவும், இலக்கியத்தில்
இடம்பிடித்தும் ஏற்றிவைத்த
இனியவராம் அலெக்சாந்தர்
திடங்கனிந்தே அவர்குடும்பம்
திருபொலிந்து நலம்வாழ்க!

– செந்தமிழ்ச் சிற்பி அமரர் பண்டிதர் அலெக்சாந்தர் அவர்களுக்கு 21 மே 2016இல் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தால் அளிக்கப்பெற்ற பாராட்டு விழாவிலே வெளியிடப்பெற்ற அன்புத் தேனமுதம் மலரில் வெளிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளித்த வானத்து வெண்கதிர்!

(கட்டளைக் கலிப்பா)

ஈழத் தாயவள் இன்தவப் பேறினால்
ஈன்று தந்த மகன்கவி நாயகர்
ஆழக் கற்றவர், ஆன்மிகப் பற்றினர்,
ஆற்ற லோடுநல் லாளுமை பேர்புகழ்
சூழக் கண்டவர், சொல்லிலே நல்லவர்
சுந்த ரத்தமிழ்ப் பேச்சிலே வல்லவர்
வேழ நாயகன் தாளைவ ணங்குவார்
வேண்டும் நல்வரம் பெற்றுயர்ந் தோங்கவே!

எழுதித் தீர்த்தது எண்ணிலா நூல்களை
எடுத்துக் கொண்டதி லக்கியச் சேவையை
தழுவி நின்றது சைவத்தின் மேன்மையை
தாங்கி நின்றது ஆன்மிகச் சேவையை
பழுது அற்றபல் லாயிரம் பாக்களைப்
படைத்து வைத்தது பாரினில் என்றுமே
அழிவில் லாதநல் ஆக்கமும் தந்தது
அறிஞர் கந்தவ னமவர் சிந்தையே!

தெளிந்த நீரெனத் தெள்ளிய நெஞ்சினர்
தேடும் ஞானமே செல்வமென் றோதுவார்
பிழிந்து ஊற்றிய சாறுபோற் கல்வியைப்
புகட்ட வல்லவர் பூவினுள் தேனென
ஒளிந்து கொண்டுள மாணவர் ஆற்றலை
ஊற்று வெள்ளமாய் ஓடவே செய்தவர்,
வெளித்த வானிலே வெண்கதிர் போலவே
விளங்கும் எங்கவி நாயகர் வாழ்கவே!

– எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஆசிரியர் ஈழத்துப் பெருங்கவிஞர் கவிநாயகர் கந்தவனம் அவர்களுக்கு 21 மே 2016இல் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தால் அளிக்கப்பெற்ற பாராட்டு விழாவிலே வெளியிடப்பெற்ற அன்புத் தேனமுதம் மலரில் வெளிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிநாயகர் இனிதே வாழ்க!

(நொண்டிச் சிந்து)

செந்த மிழ்த்தாய் உவந்து பெற்ற
செல்வத் திருமகன் - நல்ல
சிந்தை கொண்டு சேவை யாற்றும்
சிறந்த பெருமகன்.
விந்தை காட்டும் எழுது கோல்தம்
விரல்கள் சேரவே - வார்த்தை
வந்து நின்று வணங்கி நிற்கும்
வளங்கள் சேரக்கவே!

கவிதைக் கெல்லாம் நாய கனாய்க்
களம மைத்தவர் - இந்தப்
புவியில் வாழும் தமிழர்க் கெல்லாம்
புகழைத் தந்தவர்
செவியில் இன்பம் சேர்க்கும் நல்ல
சொல்லில் வல்லவர் - இளம்
கவிஞர்க் கெல்லாம் கல்வி தந்த
கடவு ளானவர்!

ஆழ்ந்த தெய்வ ஞானத் திலே
அகன்ற பாற்கடல் - அதில்
மூழ்க வைத்து அமுது ஊட்டும்
திறந்த நூற்கடல்!
வாழ்ந்து வாழ்வில் எளிமை காட்டும்
வரைவி லக்கணம் - புகழ்
சூழ்ந்து நின்றும் எதிலும் கொள்ளார்
தலையி லேகனம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தில் இளமை அறிவில் முதுமை
அகவை எண்பது - இவர்
முகத்தில் வாழ்வின் முழுமை காட்டும்
முதிர்ந்த பண்பது.
புகழின் எல்லைப் புலமை தொட்ட
புதுமை கண்டவர் - நலம்
திகழ இனிதே வாழ வேண்டும்
தினமும் நன்றவர்!

சாற்றும் புலமை சார்ந்த அறிஞர்
கவியின் நாயகர் - கவிதை
ஆற்ற லோடு அசைவில் லாத
அகமும் அங்கமும்
போற்றும் வளமும் பொலிந்த மனையும்
பொங்கும் இளமையும் - கண்டு
ஏற்றம் கொண்டு இனிது வாழ்க
வாழ்க வாழ்கவே!

– 2013 நவம்பர் மாதம் கவிநாயகர் கந்தவனம் அவர்களின் 80ஆவது பிறந்த நாளையொட்டி கனடாத் தமிழ்க் கவிஞர் கழக பயிற்சிப் பட்டறையில் நடைபெற்ற விழாவில் பாடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைப்பிலே நீடு வாழ்வார்!

(அறுசீர் விருத்தம்)

மெல்லிசை மீட்டும் மீன்கள்
  மேய்கின்ற வாவி சூழ்ந்த
புல்லிழை போர்த்த மேனிப்
  பூமகள் தென்னீ ழத்தின்
கல்வியின் சிகர மான
  காரையம் பதியின் கீர்த்தி
சொல்லிட வைத்தே நெஞ்சம்
  சேர்ந்தவர் விபுலா நந்தர்!

பெற்றோர்கள் பேறு பெற்றார்
  பெருமகன் பிறந்த தாலே
கற்றவர் பேறு பெற்றார்
  கடைந்தவர் அமுதம் உண்டே
மற்றவர் தடத்திற் சென்றோர்
  மனத்திலே அமைதி பெற்றார்
நற்றமிழ்த் தாயோ கையில்
  நல்லதோர் யாழ்நூல் பெற்றாள்!

பணியதன் சிறப்பைக் கொண்டு
  பற்பலர் பெருமை சேர்ப்பர்
பணிக்கொரு சிறப்புச் சேரும்
  பணிசெயும் அறிஞ ராலே
அணிதரும் ஆசா னாக
  அதிபராய் ஆன்மீ கத்தின்
மணியொளி மகுட மாக
  மலர்ந்தவர் விபுலா நந்தர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினை உள்ளம் தேட
அறிவியற் பட்டம் பெற்றார்
பிறிதுளம் தமிழைத் தேடப்
பண்டிதப் பட்டம் பெற்றார்
குறியொடு தேடிப் பட்டம்
குவித்தபோ தினிலும் தேடல்
துறவற அமைதி தேடத்
துளிர்த்தது துறவு வாழ்வே!

வாழ்விலே ஒளியாய் வந்தார்
வனப்புறு தமிழாய் வந்தார்
ஆழ்கடல் அறிவாய் வந்தார்
அறத்தொடு அன்பாய் வந்தார்
தாழ்வுகள் நீக்க வந்தார்
சமத்துவம் தழைக்க வந்தார்
நீள்புவி நிலைக்கும் மட்டும்
நினைப்பிலே நீடு வாழ்வார்!

**– யாழ்நூல் தந்த பேரறிஞர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் நினைவு விழா மலருக்காக எழுதப்பெற்றது. செப்டம்பர், 2014**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவுற்றது நெஞ்சம்!
(சந்தக் கலிவிருத்தம்)

மீனின்னிசை பாடும்ஒலி
 மீட்டும்குளிர் வாவி
வானின்வரை நீளும்கனி
 வீழும்மலர்ச் சோலை
ஊனிற்கலந் தூறும்தமிழ்
 ஊட்டும்சுவை கூட்டித்
தேனும்நிறைந் தோடும்நிலம்
 தென்னீழமாம் தாயே!

கூவும்கடல் நெய்தல்லொடு
 கூடும்நில மருதம்
காவும்மலி முல்லையிவை
 கைகோத்துள காரை
தீவின்பெயர் புகழோங்கியே
 தேசம்பல பரவி
மேவும்வகை பிறந்தார்விபு
 லாநந்தரும் இனிதே!

அறிவாலுயர் இயல்கள்பல
 அனைத்தும்அவ ருள்ளக்
குறியாகவே பயின்றார்பெரும்
 குணக்குன்றென உயர்ந்தார்!
நெறியூட்டவும் வழிகாட்டவும்
 நிலம்வாழவும் வழங்கும்
வறியாத்திரு வள்ளல்என
 வரம்பெற்றனர் உவந்தே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசானென அதிபர்என
    ஆக்கம்தரும் பணியால்
தேசம்பெரும் பயனுற்றது
    தாயுற்றனள் மகிழ்வே!
நேசம்தமிழ் மேலுற்றதில்
    நீடுற்றது புலமை
பேசும்வகை சீர்பெற்றனர்
    பேர்பெற்றது தமிழே!

தேடல்எனும் பசிகொண்டவர்
    தேடிப்பயன் கண்டார்!
நாடத்தகும் நவிலச்சுவை
    நாட்டும்பல நூல்கள்
கூடல்மகள் கன்னித்தமிழ்க்
    கோதைஅவள் கையில்
சூடத்தகு மெனத்தந்தனர்
    சுடர்விட்டவள் ஒளிர்ந்தாள்!

கலைவித்துவக் கரைகண்டவர்
    கவினானமுத் தமிழில்!
தலைமைத்துவம் வரக்கொண்டவர்
    தளராதநற் பணியில்!
தொலைநோக்கொடு ஒளிபெற்றபின்
    துறவின்வழி சென்றார்
நிலைபெற்றதோர் புகழுற்றனர்
    நிறைவுற்றதெம் நெஞ்சே!

**– யாழ்நூலால் தந்த பேரறிஞர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் நினைவு விழா மலருக்காக எழுதப்பெற்றது. மே, 2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் பெற்றெடுத்த தனிநாயகம்

கற்றறிந்தோன், காலமெலாம் கன்னித் தமிழ்மொழிக்கு
உற்றதொரு நல்லிடத்தை உலகில் நிறுவியவன்!

நந்தமிழர் வாழுகின்ற நல்லுலகின் வல்லுநர்கள்
செந்தமிழை ஆராயச் செய்மதியை ஆக்கியவன்!

பன்மொழியில் வல்லோன், பசுத்தீவின் மைந்தனவன்
முன்மொழிந்து வைத்த முதல்தமிழின் ஆய்வரங்கைக்

கோலா கலமாகக் கோலாலம் பூரினிலே
காலப் பதிவாகக் காட்சிப் படுத்தியவன்!

செம்மொழியாய் எம்மொழியைச் சீரா் யுலகரங்கில்
சிம்மாசனம் ஏற்றிச் சிறப்பித்த செம்மலவன்!

நன்மறைகள் போதித்த நாயகனின் பாதையிலே
புன்முறையில் வாழ்ந்தோரைப் புகச்செய்த புண்ணியவான்!

இம்மையிலே மானிடர்க்கு இனியவழி காட்டுகின்ற
செம்மைமறைப் போதனைகள் செய்த அருளடிகள்

தனிநா யகம்என்னும் தமிழ்நா யகனவனை
இனிதான இவ்வுலகம் என்றும் நினைத்திருக்கும்!

நூறாண்டு வாழ்கவென நாவார வாழ்த்துவது
நூலாய்ந்த இவர்போன்ற நுண்மதியோர்க் கேபொருந்தும்!

தமிழிருக்கும் மட்டும் தனிநா யகமென்னும்
அமிழ்தான பெயரிந்த அகிலத்தில் வாழ்ந்திருக்கும்!

– தமிழ்ப் பேரறிஞர், தமிழ்த்தூதர் வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவுக்காக எழுதியது. டிசம்பர் 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தை வென்ற ஹாக்கிங்!

உற்றபெரு பிணியாக இளமையில் ஏயெல்லெஸ்
உடலினைக் கட்டிவைக்கச்
சுற்றுகிற நாற்காலிச் சுவருக்குள் நாளெலாம்
சோர்ந்துடலம் வீழ்ந்திருக்க
முற்றியது வாழ்வென்று முடங்கிவிட வில்லையவன்
முத்திரை பதித்துவைத்தான்
கற்றவியற் பியலறிஞன் ஸ்டீபன்ஹாக் கிங்என்றும்
காலத்தை வென்றுநிற்பான்!

ஊனமென உடல்நொந்தும் உருவமது சிதைவுற்றும்
உள்ளத்தி லுறுதிகொன்டான்
ஏனென்றும் எதற்கென்றும் எவ்வாறும் எனக்கேள்வி
எழுப்பியே உயர்ந்துநின்றான்
மானிடமும் மண்ணுலகும் நீடுநிலை பெற்றுயர
மாண்பான கொள்கைதந்தான்!
வானின்று விரிந்தபிர பஞ்சத்தி னறிவியலை
வரலாற்றி லெழுதிவைத்தான்!

இறப்பிற்குப் பின்னேயோர் வாழ்வில்லை இன்றைக்கு
இருப்பதே வாழ்க்கையெனவும்
இறக்கின்ற வரைமட்டும் பிறக்கின்ற மூச்சோடு
உலகத்தை ஆள்கயெனவும்
திறக்குமொரு கதவுமுன் பொருகதவு மூடினால்
திண்ணமாய் நம்புஎனவும்
சிறப்பான பாடமெனத் தான்வாழ்ந்த வாழ்வையெம்
சிந்தைக்குத் தந்துசென்றான்!

**– உலகப் புகழ் பெற்ற இயற்பியல் அறிஞர் ஸ்டீபன் ஹாக்கிங் அவர்களின் மறைவையொட்டி எழுதியது – தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளம், மார்ச் 2018**

* ஏயெல்லெஸ் = ALS (Amyotrophic Lateral Sclerosis)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய தெய்வம்!

பொன்மனத்தைக் கொண்ட செம்மல்
புரட்சி நாயகன் - தன்
நன்மனத்தி னாலே யானான்
நாட்டின் காவலன்!
தன்னினத்தோர் ஈழ மண்ணிற்
தவித்த போதிலே - பெற்ற
அன்னைபோல அணைத்தெ டுத்தான்
அமைதி காணவே!

நூறுஆண்டு காணும் அவனின்
நினைவு எம்மிடம் - நல்ல
ஆறுபோல அவன்ச மைத்தான்
அழகு மாநிலம்!
மாறுகொள்கை யாளர் கூட
மதித்த மன்னவன் - நாள்
தோறும்ஏழை எளியோர் போற்றித்
துதித்த தென்னவன்!

வெள்ளித்திரை சென்று மக்கள்
திலக மாகினான் - மக்கள்
உள்ளத்திரை பதிந்த மூன்றின்
உருவ மாகினான்
வெள்ள மான மக்கள் முன்னே
தலைவ னாகினான் - மனம்
கள்ள மற்ற தால்இதயத்
தெய்வ மாகினான்!

- தமிழக முன்னாள் முதலமைச்சர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.
அவர்களது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எழுதியது.
தமிழ் ஆர்தர்ஸ் இணையத்தளம், நவம்பர் 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலெக்சாந்தர் வாழ்வார் கவியாக!

மறைந்து சென்றது தாய்ப்பறவை - நாம்
மறப்ப துண்டோ அதனுறவை!
நிறைந்த முகமும் நிலவொளியாய் - அதில்
நிலவும் நகையும் நித்திலமாய்
செறிந்த அறிவின் முத்திரையாய் - நம்
சிந்தை யிலுள்ளார் சித்திரமாய்
உறைந்த நினைவுகள் நிழலாடும் - மன
உணர்வும் நிதம்நிதம் கவிபாடும்!

எழுத்தசை சீரடி தொடையாகக் - கவின்
எழில்தரும் அணிகளின் நயமாக
விழுத்துணை யாகிய மரபாக - பெரும்
வியத்தகு இலக்கிய வளமாக
இழுக்கறும் இலக்கணப் பொருளாக - எம்
இதயத்துப் பாடலின் ஒலியாகப்
பழுத்தமுத் தமிழ்க்கனிச் சுவையாக - நம்
பண்டிதர் இருப்பார் நினைவாக!

பூவாய் உதிர்ந்து போனாலும் - அவர்
புன்னகை வாசம் போகாது
பாவாய்ப் பாவின் இனமாக - பண்
பாட்டில் தொடரும் மொழியாக
நாவால் சுவைக்கும் தமிழாக - நம்
நாட்டின் தென்றற் காற்றாக
தேவா மிருதச் சுவையாக - அலெக்
சாந்தர் வாழ்வார் கவியாக!

**- மறைந்த எனது இனிய ஆசான் செந்தமிழ்ச் சிற்பி**
**அமரர் பண்டிதர் அலெக்சாந்தர் அவர்களின்**
**31ஆவது நினைவு நாள் மலருக்கு எழுதியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்கில்லை மரணம்!

உரித்தெனத் தமிழ்த்தாய் உவந்தநல் மைந்தன்
 உறங்கினன், தமிழரின் உலகில்
விரித்தபுத் தகமாய் விளங்கிய வேந்தன்
 வீழ்ந்தனன், பெருஞ்சபை யெல்லாம்
சரித்திரம் படைத்த சாதனை வீரன்
 சாய்ந்தனன், எனுந்துயர்ச் செய்தி
எரித்திடும் தணலாய் ஆனதே, பிரிவை
 எங்ஙனம் தாங்குமோ இதயம்!

விலங்கியல் தனிலே விருட்சமாய்க் கிளைகள்
 விரித்தவர், நாடெலாம் கல்வி
துலங்கிட உயர்ந்த சுடர்மணிக் குன்று,
 தூயதோர் அறிவொளி தந்த
கலங்கரை விளக்கம், காலத்தா லழியாக்
 கலைகளைச் செதுக்கிய சிற்பி,
நலமிழந் திருந்த நாளிலும், நூல்கள்
 நயமுறப் படைத்தபே றறிஞன்!

அணியுடை வெண்மை அகத்திலும் வெண்மை
 அவர்செயல் அனைத்துமே வெண்மை
கனிவுகொள் நோக்கு கண்ணியப் போக்கு
 கர்வமில் லாமதி நுட்பம்
பணிவுகொள் பான்மை பக்குவப் பேச்சு
 பழகவே இனியபண் பென்றே
மணிபல கோர்த்த மகுடமொன் றினையேன்
 மண்ணினிற் சாய்த்தனை தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிலே மணியாய்க் கலந்தஉன் மக்கள்
கலங்கிநீர் சொரிவதைக் காணாய்
உண்மையன் புள்ள உறவினர் சுற்றம்
உருகியே அழும்குரல் கேளாய்
நண்பரும் ஊரும் நலன்விழை வோரும்
நனைகிறார் சோகத்தில். உனது
மண்பிறந் தோரின் துயரினைப் பாராய்
மன்னவா மீண்டும்வா ராயோ?

அழகிய தமிழால் அதிபரென் றழைக்கும்
அடைமொழிக் கில்லையே மரணம்
பழகியோர் நெஞ்சிற் பசுமையாய்ப் பதிந்த
பண்பினோய் உனக்கிலை மரணம்
மழலையின் வடிவாய் மாணவர் மனத்தில்
மலர்ந்தனை இனியிலை மரணம்
தழல்விழுந் துடலம் தகித்ததோ எனினும்
தலைவனே உனக்கிலை மரணம்!

– எமை விட்டுப்பிரிந்த, எல்லோரினதும் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான 'அதிபர்' திரு பொ. கனகசபாபதி அவர்களின் நினைவஞ்சலி நிகழ்வில் சமர்ப்பித்தது.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரபுக் கவிதை பாடுவதில் மாவிலி மைந்தன் ஒரு சிகரக் கவிஞர். கவிதை நயம், சொற்சுவை, பொருட்சுவை அவரது கவிதைகளில் சிறப்பாகவும் இயல்பாகவும் அமைந்திருப்பது அவருக்கேயுரிய தனித்துவம்.

**– கவிநாயகர் வி.கந்தவனம்**

"மனவெளி மேகங்கள்" என்ற இவரது கவிதைத் தொகுப்பில் மானுடம் பற்றிய பல்வேறு உணர்வுகள், ஆதங்கங்கள், சமூகப் பார்வைகள், பெண் விடுதலை, தாயகம் – தமிழினம், தமிழ் மொழி – தமிழர் பண்பாடு என்பனவற்றின் மீதான அதீத அக்கறையும் பற்றுணர்வும் மேலோங்கிக் காணப்படுவது முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

**– பேராசிரியர் முனைவர் இ.பாலசுந்தரம்**

கவிஞர் மாவிலி மைந்தன் எழுதிய "மனவெளி மேகங்கள்" என்ற கவிதை நூலை முழுதும் படித்தேன். நம் மனதில் பெய்யும் மேகங்களாகவே அந்தக் கவிதைகள் இருக்கின்றன. இவர் கனடாவில் தமிழைக் காத்து வரும் தமிழர்களில் ஒருவர். கவிதை யாத்து வரும் கனடாக் கவிஞர்களில் இவர் தலையாயவர். அருமையான மரபுக் கவிதைகள் அடங்கிய புத்தகம் இது. அனைவரும் விரும்பக் கூடிய வித்தகம் இது.

**– முன்னாள் அரசவைக் கவிஞர் முத்துலிங்கம்**

கவிதை கவிஞனையும் கவிஞன் கவிதையையும் பொலிவுறச் செய்கிற போதுதான் மொழி மேம்படுகிறது. எனவேதான் நல்ல கவிதைகளும் நமது கவிஞர்களும் பெரிதும் வரவேற்கப்படுவதைப் பார்க்கிறோம். இலக்கிய வடிவங்களில் முதலிடம் பெற்றிருப்பவை கவிதைகளே. என் இனிய நண்பர் கவிஞர் சண்முகராஜா ( மாவிலி மைந்தன் ) அவர்கள் சிறந்த கவிதைகளைப் படைக்கிற சிறந்த கவிஞர் என்பதால் நமது சிந்தையில் செம்மாந்து அமர்ந்திருக்கிறார். இந்நூலிலுள்ள கவிதைகள் யாவும் அவருக்கு நிலைத்த புகழை நாளும் தரும்.

**– கலைமாமணி ஏர்வாடி இராதாகிருஷ்ணன்**

ஆசிரியர், "கவிதை உறவு" இலக்கிய மாத இதழ்.

வானதி பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org